பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 15 வியாழக்கிழமை (01.10.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 309

# அகதி முகாமில் துப்பாக்கிச் சூடு; உரிய விசாரணைக்கு வலியுறுத்து

## மீளக்குடியமர்வை விரைவுபடுத்தவும் யு.என்.எச்.சி.ஆர் கோரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 01

வவுனியா அகதிமுகாமில் உள்ள அகதிகள் மீது சமீபத்தில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை குறித்து உடனடியாக உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் (யு.என்.எச்.சி.ஆர்.) வலியுறுத்தியிருக்கின்றது.

அத்துடன் இத்தகைய விரும்பத்தகாத சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாமல் தடுப்பதற்காக, அகதிகளை விரைவாக மீளக்குடியேற்றுமாறும் அரசிடம் யு.என்.எச்.சி.ஆர். வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமது சொந்தப் பகுதிகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட மக்கள் அங்கு இடைத்தங்கல் முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் நிலை குறித்தும் கவலை வெளியிட்டுள்ள யு.என்.எச்.சி.ஆர்., இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களின் உள்ளே இடம்பெறும் சில சம்பவங்கள் குறித்த தகவல்களால் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்கள் முகாமின் இரண்டு வலயங்கள் மத்தியில் நடமாட முயன்ற வேளை படையினர் (20 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

### உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் -I,II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்.

### நாளை

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான வரலாறு -I,II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்.

## பிரிட்டன் செல்லும் மாணவர்களுக்கான விசா வழங்கும் நடைமுறையில் மாற்றம்

கொழும்பு, ஒக். 01

பிரிட்டனுக்கு கல்வி கற்கச் செல்லும் மாணவர்களுக்கு விசா வழங்கும் நடைமுறையில் இன்று முதல் மாற்றம் கொண்டுவரப்படுகின்றது என்று கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகம் அறிவித்துள்ளது.

குறிப்பாக பிரிட்டனுக்குக் கல்வி கற்கச் செல்லும் மாணவர்கள் வங்கிக் கணக்கில் காட்டவேண்டிய பணத்தொகை சம்பந்தமான விடயங்களில் இம் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது இம்மாணவர்கள் விசாவுக்கு விண்ணப்பிப்பதற்கு குறைந்தது 28 நாள்களுக்கு முன்பாக தமது வங்கிக் கணக்கில் அல்லது பெற்றோர் / பாதுகாவலர் வங்கிக் கணக்கில் குறித்த பணத் தொகையைக்கட்டாயம் வைப்பிலிட்டிருக்க வேண்டும் என இம்மாற்றத்தின் மூலம் தெரிவிக்கப் பட்டுள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் அரசியல் தீர்வு யோசனை விரைவில் ஊடகங்களுக்கு வெளியிடப்படும்

கொழும்பு, ஒக். 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயாரித்துள்ள இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு யோசனை விரைவில் ஊடகங்களுக்கு வெளியிடப்படும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பாக மிக விரைவில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துகளும் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் கூட்டமைப்பு (20 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட 607 பேர் உறவினர்களிடம் இன்று ஒப்படைக்கப்படுவர்

யாழ்ப்பாணம், ஒக். 01

வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து தீவகப்பகுதியைச் சேர்ந்த 607 பேர் நேற்று 13 பஸ்களில் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டனர். வேலணை மத்திய கல்லூரி, தோப்புக்காடு இடைத்தங்கல் முகாம் ஆகியவற்றில் தங்கவைக்கப் பட்டுள்ள இவர்கள் அனைவரும் இன்று பிரதேச செயலகர்களின் ஊடாக உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர்.

வேலணையைச் சேர்ந்த 77 குடும்பங்களைச் சேர்ந்த 240 பேர் வேலணை மத்திய கல்லூரியிலும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 75 குடும்பங்களைச் சேர்ந்த 245 பேரும் காரைநகரைச் சேர்ந்த 44 குடும்பங்களைச் சேர்ந்த 122 பேரும் காரைநகர் தோப்புக்காடு இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (அ-6-250)

## கோடீஸ்வர வர்த்தகர் சிங்கப்பூரில் கைது புலிகளுக்கு ஆயுதம் விநியோகித்தாராம்

கொழும்பு, ஒக். 01

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை விநியோகித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் சிங்கப்பூரின் பிரபல அரசியல்வாதிகளில் ஒருவரும் கோடீஸ்வர வர்த்தகருமான பால்ராஜ் நாயுடு என்பவர் அந்நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் தமது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்ட அவர், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டார் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், அவர் மீது இன்னமும் எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் உத்தியோகபூர்வமாகத் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அவர் மீதான வழக்கு எதிர்வரும் 05ஆம் திகதி வரையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது (20 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றுமா என உன்னிப்பாக அவதானிப்பாராம் ஐ.நா. செயலர்

கொழும்பு, ஒக்.01

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக இலங்கை அரசு அளித்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை உன்னிப்பாகக் கண்காணிக்கப் போவதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன் தெரிவித்தார்.

நியூயோர்க்கில் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதுபற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சமீபத்தில் இலங்கையின் பிரதமருடன் தீவிர பேச்சுகளை நான் மேற்கொண்டேன்.

நிலைமைகளைக் கையாள்வதில் அவர்களே முக்கியமானவர்கள்.

மூன்று விடயங்களை நான் மீண்டும் தெளிவுபடுத்தினேன். இலங்கைக்கான விஜயத்தின்போது தெரிவிக்கப்பட்ட - பல தடவைகள் வலியுறுத்தப்பட்ட - விடயங்களை மீண்டும் குறிப்பிட்டேன்.

முதலாவதாக சகல இடம்பெயர்ந்த மக்களும் மீள்குடியேற்றப்பட வேண்டும். அவர்கள் (20 ஆம் பக்கம் பார்க்க)

## தென்பசுபிக் தீவுகளில் ஆழிப்பேரலை; நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 01

தென்பசுபிக்கில் உள்ள சமோவா, அமெரிக்கன் சமோவா ஆகிய தீவுகளில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட பூகம்பம் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக நூற்றுக் கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பல கிரா மங்கள் அழிவடைந்துள்ளன. மேலும் 150 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் ஆளுகைக்குட்பட்ட, 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழும் இந்த இரு தீவுகளிலும் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இரு தீவுகளையும் 8.3 ரிச்டர் அளவுடைய பூகம்பம் தாக்கியது. அதைத் தொடர்ந்து 15 அடி உயரத்துக்குஆழிப்பேரலைஉருவாகியது.

சமோவாவின் தேசிய சுகாதார சேவைக்கான பொது முகாமையாளர் இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார்.

சமோவாவின் சில பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து சில அடி உயரத்திலேயே உள்ளன. இதனால் அதிகமான அழிவுகள் ஏற்பட்டுள்ளன ஸ்ன்று அமெரிக்கசமோவாவை அமெரிக்காவில் (02 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தோனேஷியாவில் பூகம்பம்; இலங்கைக்குப் பாதிப்பில்லை

கொழும்பு, ஒக். 01

இந்தோனேஷியாவிலும் நேற்றுக் காலை பாரிய பூகம்பம் ஏற்பட்டது. இதனையடுத்து இலங்கையில் மீண்டும் ஆழிப்பேரலை ஏற்படும் அபாயம் உண்டா என்பது குறித்து அனர்த்த முகாமைத்துவ நிலையம், வானிலை அவதான நிலையம் ஆகியன தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை முடுக்கி விட்டன.

இது ஒரு எச்சரிக்கை அல்ல.

விழிப்புணர்வூட்டும் அவதானமே என்று அந்த நிலையங்கள் அறிவித்திருந்தன.

பின்னர் ஆழிப்பேரலை குறித்து இலங்கை அஞ்சத்தேவையில்லை என்று அவை நேற்று மாலை மீண்டும் அறிவித்தன. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி



எமது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
ப. விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புதல்வன்

### செல்வன் சுதர்ஸன்

அகாலமரணமான செய்தி அறிந்து ஆழ்ந்த மன வேதனை அடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/ நடேஸ்வரக் கல்லூரி
யா/ நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயம்.
காங்கேசன்துறை (C-561351) பாடசாலைச் சமூகம்.

## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
ப விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட
புதல்வன்

### செல்வன் சுதர்ஸனின்

பிரிவுத்துயர் அறிந்து வேதனை அடைவதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி
மானிப்பாய். (C561344) அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள்.

## இதய அஞ்சலி



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
ப விக்னேஸ்வரன்
அவர்களின் கனிஷ்ட புதல்வன்

### செல்வன் சுதர்ஸன்

அவர்களின் பிரிவு குறித்து மனவேதனை அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இராமநாதன் கல்லூரி
சுன்னாகம். (89431)
அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன்
அவர்களின் கனிஷ்ட புதல்வன்

### செல்வன் சுதர்ஸன்

அகால மரணமான செய்தியறிந்து, ஆழ்ந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, துன்பத்தால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/ஏழாலை மகா வித்தியாலயம்,
ஏழாலை. (89435) பாடசாலைச் சமூகம்.

## யா/ அராலி இந்துக் கல்லூரியின் இதய அஞ்சலி



எமது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புதல்வன்

### செல்வன் சுதர்ஸன்

அவர்களின் பிரிவு குறித்து வேதனை அடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

யா/ அராலி இந்துக் கல்லூரி,
வட்டுக்கோட்டை (89427) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

## இதய அஞ்சலி



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன் அவர்களின்
கனிஷ்ட புதல்வன்

### செல்வன் வி.சுதர்ஸன்

அவர்களின் அகால மரணத்தையிட்டுத் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக
'இறைவனுக்குகந்தோர் இளமையில் இறப்பர்'

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
மயிலிட்டி றோ.க.த.க.பா.
(561350) ஆனைக்கோட்டை.

## இதய அஞ்சலி



எமது மதிப்பார்ந்த வலயக் கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புத்திரன்

### செல்வன் சுதர்ஸன்

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் பிரிவால் ஆறாத் துயருற்றிருக்கும் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!!சாந்தி!!!

யா/ மாரீசன் கூடல்,
சுப்பிரமணிய வித்தியாலயம். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# மணல் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம்.ஒக்.1

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் பெருந் திருவிழாவை முன்னிட்டு இன்றுதொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை குடத்தனையில் நிர்மாண வேலைக்கான மணல் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (அ-06)

# உரிய ஆவணங்கள் இன்றி வாகனம் செலுத்திய மூவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம்.ஒக்.1

உரிய ஆவணங்களின்றி வாகனங்கள் செலுத்திய மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 21 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இது தொடர்பாகப் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சாரதி அனுமதிப்பத்திரம், வரி செலுத்தியமைக்கான சான்றிதழ், காப்புறுதிப் பத்திரம் ஆகிய ஆவணங்களின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவருக்கு முறையே 11 ஆயிரம் ரூபா, 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகை செலுத்தத் தவறின் முறையே 10 மாதம், 5 மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் -

ஆவணங்களின்றி உழவு இயந்திரம் செலுத்தியவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத்தவறின் 5 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (50-207)

# பல மட்டங்களில் வீட்டுத்தோட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம்.ஒக்.1

'பயிர்செய்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்'. 'உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்போம்' எனும் சிந்தனைகளின் கீழ் இவ்வருடம் வீட்டுத்தோட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. தனிநபர், அரச நிறுவனங்கள், பாடசாலைகள், பாடசாலை மாணவர்கள், சமூகமட்ட நிறுவனங்கள், அரசவிடுதிகள் மட்டத்தில் போட்டிகள் நடைபெறும்.

தனியார் வீட்டுத்தோட்டப்போட்டி, விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி தொடர்பான மாதிரிப்போட்டிகள், அரச நிறுவனங்களுக்கான வீட்டுத் தோட்டப் போட்டிகள், பாடசாலைச் சிறுவர்களுக்கான வீட்டுத்தோட்டப் போட்டிகள், சமூக மட்ட நிறுவனங்களுக்கான வீட்டுத் தோட்டப் போட்டிகள், அரச, தனியாரால் பராமரிக்கப்படும் நிறுவனங்களுக்கான வீட்டுத் தோட்டப் போட்டிகள் என்று பல வகையில் போட்டிகள் அமையும்.

இப்போட்டிகள் யாவும் பிரதேச, மாவட்ட, மாகாணம், தேசியமட்டம் என நான்கு மட்டங்களில் நடைபெறவுள்ளன. இதற்கான விண்ணப்பங்களை பிரதேச செயலகங்களிலும், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான முடிவுத் திகதி இம்மாதம் 31 ஆம் திகதியாகும்.

(அ-06)

# தென்பசுபிக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

''சொத்துகளுக்குப் பாரிய சேதமேற்பட்டுள்ளது. கார்கள் நீரில் மிதக்கின்றன'' என அவர் தெரிவித்துள்ளார்.

சமோவா தீவின் தாழ்நிலப் பகுதிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

பூகம்பம் தாக்கி சில நிமிடங்களில் ஆழிப்பேரலை ஏற்பட்டதால், மக்களுக்குத் தப்புவதற்கான சந்தர்ப்பமே இருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

''ஐந்து நிமிடங்களுக்குள் அனைத்தும் நடந்து முடிந்து விட்டது'' என சமோவாவின் பிரதி பிரதமர் மிஸா பெலிடோனி குறிப்பிட்டுள்ளார்.

முதல் ஆழிப்பேரலையால் கரையொதுங்கிய மீனை எடுப்பதற்குச் சென்ற பலர் இரண்டாவது அலையில் சிக்குண்டனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.


## விற்பனைக்கு

11 மாதம் நிரம்பிய அல்ஷேசன் ஜரிஸ்
[illegible]
கோணாவளை லேன், கொக்குவில்.
தொடர்பு : 0776203787, 07784496[illegible]


## கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆள்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை

### வழிகாட்டல் வகுப்பு

இடம் - கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
காலம் - 02.10.2009
நேரம் - காலை 9.00 - 2.00 மணி வரை

கூட்டுறவுத் துறையில் அனுபவம் மிக்க கூட்டுறவு ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் கடந்த கால போட்டிப் பரீட்சை வினா விடை உட்பட பாடக்குறிப்புகள் வழங்கப்படும். கட்டணம் ரூபா 100/= மட்டும் (பாடக்குறிப்பு உட்பட)

விரிவுரையில் போட்டிப் பரீட்சைக்கான கூட்டுறவு பற்றிய பாடப்பரப்பு முழுவதும் உள்ளடக்கப்படும். அன்றைய தினமே பதிவு செய்து கொள்ளலாம்.

செயலாளர்
யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-561347)

## கண்ணீர் அஞ்சலி



எமது வலயக் கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட
புதல்வன்

### செல்வன் சுதர்ஸன்

அகால மரணமான செய்தி கேட்டு எமது பாடசாலைச்சமூகம் ஆறாத் துயரில் ஆழ்ந்துள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

யா/ மூளாய் சைவப்பிரகாச
வித்தியாலயம். (561342) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியசாலையின் கண்ணீர்க் காணிக்கை



எமது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்
அவர்களின் கனிஷ்ட புதல்வன்

### செல்வன் சுதர்ஸனின்

பிரிவு குறித்து மிகுந்த வேதனை அடைகிறோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர்
வித்தியாசாலை. (89428) பாடசாலைச் சமூகம்.

## தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையின் கண்ணீர் அஞ்சலி



எமது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்
அவர்களின் கனிஷ்ட புதல்வன்

### செல்வன் சுதர்ஸன்

அவர்கள் மரணமான செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, துன்பத்தால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
(89443) பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம்.

## மரண அறிவித்தல்

### முத்துவேலு கணபதிப்பிள்ளை

(முன்னாள் ஊழியர் C.W.E யாழ்ப்பாணம்)



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேலு கணபதிப்பிள்ளை நேற்று (30.09.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துவேலு -அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கலஞ்சென்ற கருணைநாயகியின் அன்புக் கணவரும் பாலசுந்தரம் (துரை), தனலட்சுமி, நித்தியலட்சுமி (ராகினி), யோகராசா (ராசன்), தேவராஜா (ரஞ்சன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சறோஜினிதேவி, கணேஸ்வரலிங்கம், ரவீந்திரா, உதயமதி, சுஜாத்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு.திருமதி ஞானரூபன் லக்சினி, மயூரதி, லக்சன், திவாகர், சுதாகர், டிலிணி, ரதீஸ், செந்தூரான், மயூரன், சௌமியா, அனுசன், அனுச்சினி ஆகியோரின் அன்புப் பேரனும், பிரதீப்பின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்ற அன்னப்பிள்ளை (கண்ணு) மற்றும் பாக்கியம் (வவுனியா), காலஞ்சென்ற இராசலிங்கம் (மணியம்), காலஞ்சென்ற இரட்ணசிங்கம் (பஞ்சன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்லத்துரை, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சின்னம்மா (கொழும்பு), காலஞ்சென்ற திருநாவுக்கரசு, காலஞ்சென்ற பூபதி, காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை மற்றும் கமலாம்பிகை (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2009) வியாழக்கிழமை ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
மானிப்பாய். (89445) தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஊடக சுதந்திரம் பேண ஒன்றிணைவோம்!

ஊடக ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக நேற்றுமுன்தினம் ஊடக அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், எதிர்க்கட்சிகள் ஆகிய தரப்புகள் ஒன்றிணைந்து நடத்திய மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்று பலரினது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகத் தலைவர்கள் பங்குபற்றிய அந்த மாநாட்டில் சுதந்திர ஊடக இயக்கத்தின் செயலாளர் சுனில் ஜயசேகரா எழுப்பிய ஒரு கேள்வியே கவனிக்கத்தக்கதாக அமைந்திருந்தது.

உலகிலேயே மிகப் பயங்கரமான கெரில்லா அமைப்பான விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்கடித்து, சர்வதேசத்துக்கும் முன்மாதிரியாகத் தான் திகழ்வதாக இந்த அரசும், ஆட்சிப் பீடமும் சுய பிரபலாபம் பாடி வருவது தெரிந்ததே.

இவ்வாறு நினைத்துப்பார்க்க முடியாத சாதனையைப் புரிந்த படைகளை - பாதுகாப்புத் தரப்பினரை - வைத்திருக்கும் இந்த அரசினாலும், ஆட்சிப் பீடத்தினாலும் இதுவரை ஊடகவியலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கொலை வெறித் தாக்குதல்கள் தொடர்பில் ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாமல் போனது எங்ஙனம்? எடுக்க முடியாமல் இருப்பது ஏன்? இது பெரும் ஆச்சரியத்தைத் தருகின்றது என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கையில் ஊடக சுதந்திரம் மிக மோசமாக நசுக்கப்படுவதற்கு இலங்கை அரசின் மீதும், ஆட்சிப் பீடத்தின் மீதுமே குற்றச்சாட்டு விரல் நீளுகின்றது.

புலிகளைத் தோற்கடிக்கும் அளவுக்கு வலிமையும், திறமையும், தேர்ச்சியும் கொண்ட அரசினால் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பாக - அதுவும் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குள் வைத்து நடக்கும் தாக்குதல்கள் தொடர்பில் கூட - சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறுவது ஏற்புடையதா என்பதே கேள்வியாகும்.

இவ்வாறு ஒருபுறம் ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், கொலைவெறி நடவடிக்கைகள் போன்றவை - அவற்றை இழைக்கும் சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் பிடித்து நிறுத்தப்படாமல் - தொடர, மறுபுறம் ஊடக சுதந்திரத்துக்கு மேலும் ஆப்பு வைக்கும் கைங்கரியம் ஆட்சிப்பீட நடவடிக்கை ரீதியாகவும் முன்னெடுக்கப்படுகின்றமையை வெளிப்படையாக அம்பலப்படுத்துகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

ஊடக சுதந்திரம் என்பது ஊடகவியலாளர்களுக்கு மட்டும் உரிய உரிமை எனக் கணிப்பிடக்கூடியதல்ல. ஊடகவியலாளர்கள் வாயிலாக அந்த உரிமையின் பயன்களைப் பொதுமக்களே அனுபவிக்கின்றனர்; உணருகின்றனர். தகவல் அறியும் அடிப்படைச் சுதந்திரம் - உரிமை - நாட்டின் சகல பிரஜைகளுக்கும் உரியது. அந்த சுதந்திரத்தை - உரிமையை - மக்கள் அனுபவிப்பதற்கான கருவிகளே ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்கள். எனவே ஊடக சுதந்திரத்தின் பரப்பெல்லை விரிந்தது; விசாலமானது.

அந்த வகையில் பார்த்தால் ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் அடக்கப்படுகின்றமை பொதுமக்களின் உரிமையைப் பறித்து அவர்களை அடக்கும் நடவடிக்கையாகவே கருதப்படவேண்டும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பில் நடைபெற்ற மேற்படி மாநாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார். பத்திரிகைப் பேரவைச் சட்டத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்த அரசுத் தலைமை எடுக்கும் நடவடிக்கை ஊடக சுதந்திரத்தின் குரல்வளையை இறுக்கிக் கொல்லும் முயற்சி என்று வர்ணித்த அவர், ஊடக சுதந்திரத்தைக் காப்பதற்காக, இந்தப் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அரசின் எத்தனத்துக்கு எதிராகப் பொதுமக்கள் அனைவரும் ஒன்றுதிரளவேண்டும் என்றும் கோருகின்றார். இதற்காக, ஊடக சுதந்திரத்துக்காகக் குரல் எழுப்பும் தரப்புகளுடன் கைகோர்க்க அவர் அழைப்பு விடுக்கின்றார்.

ஊடகங்களின் சுதந்திரத்தை மட்டுமல்ல, அதன் மூலம் தங்களின் சுதந்திரத்தை, அடிப்படை உரிமையைப் பேணிப் பாதுகாக்கவேண்டிய ஒரு நிலைக்குள் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்தப் பொறுப்பை உணர்ந்து செயற்பட மக்கள் ஒன்றிணையவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க கோருகின்றார்.

புலிகளின் தளபதியாகப் பணியாற்றிய கருணா இன்று நாட்டின் சிரேஷ்ட அமைச்சர். புலிகளின் ஊடகப் பிரிவிலும், தொடர்பாடல் நடவடிக்கைகளிலும் நேரடியாகப் பங்குவகித்த தயா மாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டர் போன்றோருக்கு எதிராகக் குற்றச்சாட்டு ஏதும் இல்லை. ஆனால் ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு மட்டும் இருபது ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கின்றார்கள். இது என்ன நியாயம் என இந்த மாநாட்டில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதிகாரபீடத்துக்கு எதிரான கருத்துக்களை வெளியிடும் ஊடகவியலாளர்களையும் -

ஊழல்கள், முறைகேடுகள், வீண் விரயங்கள், அடக்குமுறைகள் போன்றவற்றை அம்பலப்படுத்தும் பத்திரிகையாளர்களையும் -

மௌனிக்கச் செய்வதற்காக சட்டத்தின் பெயராலும் சட்டத்துக்குப் புறம்பாகவும் எத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தனித்து ஊடகவியலாளர்களாலோ, சிவில் சமூக ஈடுபாட்டாளர்களாலோ, எதிர்க்கட்சிப் பிரமுகர்களாலோ மட்டும் ஊடக சுதந்திரத்தைக் காப்பாற்றிவிட முடியாது. அதற்கான முயற்சியில் மக்களின் பங்களிப்பு முழுமையாக அவசியம். மக்கள் தமது கடப்பாட்டைப் புரிந்துகொண்டு ஊடக சுதந்திரம் பேணும் எத்தனத்தில் ஒன்றிணையவேண்டும். அது முக்கியமானது; அவசரமானது.

# இடம்பெயர்ந்தோர் குறித்து ஆராயும் விசேட மாநாடு
## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 01

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் தேவைகள் குறித்து ஆராயும் விசேட மாநாடு இன்று முற்பகல் 9 மணியளவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான தேசிய பாதுகாப்பிற்கும், தீர்வுக்குமான விசேட செயற்றிட்டத்தின் கீழ் மனித உரிமை ஆணைக்குழுவினரின் ஏற்பாட்டில் இந்த மாநாடு நடைபெறுகின்றது.

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மற்றும் தேவைகள் தொடர்பாக ஆராய்ந்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்த விசேட மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாட்டுக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களின் தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக அரச அதிபர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர்கள், யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் அதிகாரிகள், பாவனையாளர் அதிகாரசபையின் அதிகாரிகள், தேர்தல் திணைக்களத்தின் உதவி ஆணையாளர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், யாழ்.மாவட்டப் பொலிஸ்பிரிவின் உத்தியோகத்தர்கள் எனப் பல்வேறு துறைசார் அதிகாரிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(50-9-25)

# யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றிய 45 பணியாளர்கள் நேற்று முதல் வேலை நீக்கம்
## அமைச்சர் டக்ளஸ் அந்த ஊழியர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்

யாழ்ப்பாணம், ஒக்.01

யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றிய 45 ஊழியர்கள் நேற்று முதல் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

வேலை நீக்கப்பட்ட 45 ஊழியர்களில் 35 பேர் நேற்றுப் புதன்கிழமை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

தங்களை வேலை நீக்கம் செய்துள்ளதனால் தாங்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகவும் மீண்டும் தங்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதற்கு அமைச்சர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்த சமயம் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாரிய நஷ்டத்தில் இயங்குவதால் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த கால நிர்வாகம் சங்கத்தின் நிதி நிலைமையைப் பாதிக்கக் கூடிய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதால் இந்த ஊழியர்களை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் தற்போதைய தலைவர் எஸ்.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களின் கோரிக்கைகளை செவிமடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊழியர்கள் ஒவ்வொருவரினதும் சுய விபரக் கோவைகளை தன்னிடம் ஒப்படைக்குமாறும் கூட்டுறவுத் துறையில் அல்லது யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வேலைவாய்ப்புக் கிடைக்கும் போது பாதிக்கப்பட்ட இந்த ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு தான் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இன்றைய சூழ்நிலையில் வேலைவாய்ப்பை இழந்தவர்கள் எத்தகைய கஷ்டங்களுக்கு முகம் கொடுப்பார்கள் என்பதைத் தான் நன்கு அறிவதாகவும் எதிர்வரும் ஜனவரி மாதம் வரை பொறுமையாக இருக்குமாறும் வாய்ப்புக் கிடைக்கும் போது வேலை நீக்கம் செய்யப்பட்ட 45 ஊழியர்களுக்கும் முன்னுரிமையடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குவதற்குத் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

(50)

# மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு புதிதாக இளைஞர்கள் நியமிக்கப்படுவர்

கொழும்பு, ஒக். 01

யாழ்.மாநகர சபையில் தனியொரு பிரிவாக அமைக்கப்படவுள்ள தீயணைப்புப் பிரிவில் சேவையில் ஈடுபடுவதற்காக இளைஞர்கள் புதிதாக நியமிக்கப்பட்டு விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா இத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மாநகரசபையில் தீயணைப்புச் சேவைக்குத் தனியான நவீனமயப்படுத்தப்பட்ட பிரிவு இதுவரை அமைக்கப்படவில்லை. இதனால் தீயணைப்புச் சேவையில் ஆளணிப் பற்றாக்குறை மற்றும் நவீன கனரக வாகனங்கள் இன்மை ஆகியவற்றால் சேவையினை முழுமையாக வழங்கமுடியாமல் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு மாநகரசபையில் தீயணைப்புப் பிரிவினருக்கென தனியான பிரிவு அமைப்பதற்கு சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துரித நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறு தீயணைப்புச் சேவைக்குத் தனியான பிரிவு அமைக்கப்படும் போது இளைஞர்கள் 50 பேர் நியமிக்கப்பட்டு அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கு விமானப் படையினரின் உதவியினைக் கோரியுள்ளோம். அவர்களுடைய பதில் கிடைத்ததும் தீயணைப்புச் சேவைக்கு ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நியமிக்கப்படவுள்ளனர் - என்றார் அவர்.

(50-9)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு; யாழ். செயலகத்தில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 01

வடக்குப் பிரதேச இளைஞர்களுக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு இன்று முதலாம் திகதி யாழ். செயலகத்தில் அரச அதிகாரிகளுக்கான தெளிவுறுத்தும் கருத்தரங்கு இடம்பெறுகின்றது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மற்றும் சேமநலன்புரி அமைச்சர் கெஹலியரம்புக் வெலவின் பணிப்பின் பேரிலேயே இந்த தெளிவுறுத்தல் கருத்தரங்கு இடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்ற பயிற்சிகள் தொடர்பான தெளிவுறுத்தற் கருத்தரங்குகள் விரைவில் மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்படுமென அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சி)

# புலிகள் - எரித்திரியா ஆயுதப் பரிமாற்றம்: நோர்வே அரசுக்கு தொடர்பு இல்லை
## இலங்கைக்கான அந்த நாட்டுத் தூதுவர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 01

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு எரித்திரியாவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு, நோர்வே அரசு உதவி வழங்கியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்று இலங்கைக்கான அந்நாட்டுத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

எரித்திரியாவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களுக்கு நோர்வே உதவி வழங்கியதாக அண்மையில் இலங்கையில் பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

நோர்வே அரசு தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக சுமத்தப்படும் சகலவிதமான குற்றச்சாட்டுகளும் உண்மைக்குப் புறம்பானவை என இலங்கைக்கான அந்நாட்டுத் தூதுவர் டோர் ஹார்ட்ராம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பக்கச்சார்பற்ற வகையில் இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கே நோர்வே அரசு அதிக முனைப்புடன் செயற்பட்டது.

புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றை பாதுகாப்பாக அனுப்பி வைக்க மாலைதீவு அரசிடம் நோர்வே உதவி கோரியதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டும் பொய்யானது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாலைதீவு அரசிடம் இவ்வாறான கோரிக்கை விடுக்கப்படவில்லை.

இலங்கையின் முன்னணி ஊடகங்களில் நோர்வே அரசிற்கு எதிராக அடுக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை கண்டு நாம் அதிர்ச்சியடைந்தோம்.

இவ்வாறான செய்தி வெளியிடப்படுவதற்கு முன்னர் நோர்வே தரப்பின் கருத்துக்கு ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுக்க வில்லை. பொதுவான ஊடகதர்மம் இங்கு பின்பற்றப்படாமை வேதனையளிக்கிறது. - என்றார்.

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 16 | 02.10.2009 வெள்ளிக்கிழமை |
| திதி: | திரயோதசி மு.ப. 10.27வரை |
| நட்சத்திரம்: | சதயம் மு.ப. 9.05 வரை |
| சுபநேரம்: | 06.02 - 07.32 |
| ராகுகாலம்: | 10.32 - 12.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் பழைய
மாணவரும் தற்போதைய
அதிபருமாகிய

**திரு.இரத்தினம் பாலகுமார்**

அவர்கள் அதிபர் சேவை தரம் - 1
இற்கு பதவி உயர்வு பெற்றதை
இட்டு கல்லூரியின் நிறுவுநர் தினமான
இன்று அவரை இதயபூர்வமாக
வாழ்த்துகின்றோம்.

நல்லுறவு மன்றம்
யா/செங்குந்த இந்துக் கல்லூரி.

(89448)



## மெய்கண்டான் மாதாவின் கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட
புதல்வன்

**செல்வன் சுதர்ஸனின்**

பிரிவு குறித்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய வழக்கம்பரை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

யா/ பண்ணாகம் மெய்கண்டான் (சி/561349)
மகா வித்தியாலயம், சுழிபுரம். பாடசாலைச் சமூகம்.



## யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
ப. விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புத்திரன்

**செல்வன் சுதர்ஸனின்**

திடீர் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியும்
ஆழ்ந்த கவலையும் அடைவதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா
வித்தியாசாலை, கந்தரோடை,சுன்னாகம். அதிபர். ஆசிரியர்கள், மாணவர்கள்.

(89444)



## பிரகாசம்
## அமுதவிழா மலர் வெளியீடு



யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

காலம் :- 02.10.2009 வெள்ளிக்கிழமை காலை 9 மணி
இடம் :- பாடசாலை மண்டபம்
தலைவர் :- திருமதி.ச.யோகேஸ்வரன்
(அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி)

பிரதமவிருந்தினர்
உயர்திரு.எஸ்.கே.யோகநாதன்
பீடாதிபதி, தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்

நிகழ்ச்சிநிரல்

* விருந்தினர் அழைப்பு
* கொடியேற்றல்
* மங்கள விளக்கேற்றல்
* இறைவணக்கம்
* வரவேற்பு நடனம்
* வரவேற்புரை - திருமதி கி.திவாகரன், ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி
* ஆசியுரை - சிவஸ்ரீ நித்தியானந்தக் குருக்கள்
* தலைமையுரை - திருமதி ச.யோகேஸ்வரன், அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.
* வாழ்த்துரை - திரு.ஆறு.திருமுருகன், அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
  திரு.துரை எங்கரசு, கோட்டக் கல்விப் பணிப்பாளர், சங்கானை
  திரு.நாகேந்திரம் பாலகிருஷ்ணன், ஆசிரியர், யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
* வெளியீட்டுரை - திரு.சு.சுந்தரசிவம், பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்
* பிரதி வழங்கல்
* ஆய்வுரை - கவிஞர் திரு.சோ.பத்மநாதன், ஓய்வுபெற்ற அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை
* ஏற்புரை - திரு.சி.ரங்காதரன், ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.
* பிரதம விருந்தினர் உரை
* நன்றியுரை - திருமதி உ.நவதீசன், ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலைச் சமூகத்தினர்.

(89323)


## வல்லிபுர ஆழ்வார் கோயில் சப்பறத் திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஒக். 1

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சப்பறத் திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் பூசை ஆரம்பமாகி 1008 சங்காபிசேகம் இடம்பெற்று மு.ப. 10 மணிக்கு சுவாமி வெளிவீதி ஊலா வருவார்.

மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை ஆரம்பமாகி முத்துச்சப்பறத்தில் சுவாமி வெளிவீதி உலா வருவார். (அ-7-236)

## ஆசிரியர்தின விளையாட்டுப் போட்டிகள் தீவகத்தில் நாளை ஆரம்பம்

ஊர்காவற்றுறை, ஒக். 1

தீவகக் கல்வி வலயத்தினால் எதிர்வரும் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களுக்கிடையில் பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

அதன் பிரகாரம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள போட்டிகள் விவரம் வருமாறு:-

* கோட்ட மட்ட அணிகள் பங்குபற்றும் அஞ்சல் ஓட்டப் போட்டிகள் காலை 7 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறும்.
* கோட்டங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி பிற்பகல் ஒரு மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறும்.
* கோட்டங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி பிற்பகல் ஒரு மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறும். (அ-16)


## பால் மாடு விற்பனைக்கு

நாம்பன் கன்றுடன் கூடிய, தற்பொழுது 16 போத்தல் பால் கறந்து கொண்டிருக்கும் மாடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0212229472


## திருட்டுப் போன பாடசாலை உபகரணங்கள் பொலிஸாரால் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயத்திலிருந்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் திருட்டுப்போன டி.வி.டி பிளேயர், கணனி, ஒலிபெருக்கி ஆகியன மீட்கப்பட்டு பாடசாலை அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளன.

இத்திருட்டுத் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸில் அதிபர் முறைப்பாடு செய்திருந்தார். பொலிஸார் நடத்திய புலன் விசாரணையில் மீன் வியாபாரி ஒருவரிடமிருந்து பொருள்களை மீட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

பொருள்களை அதிபர் இனம் காட்டியதன் பேரில் நீதிமன்றம் அவற்றை அதிபரிடம் ஒப்படைத்துள்ளது. சந்தேக நபரான மீன் வியாபாரி தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-267)

## மகாத்மா காந்தியின் பிறந்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 1

இந்திய தேச பிதா மகத்மா காந்தியின் 140 ஆவது பிறந்த தினம் நாளை வெள்ளிக்கிழமை கைதடி - நுணாவில் அறவழி நிலையத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நிலையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் [illegible] கலந்து கொள்வார். (50-202)


## மாபெரும் மலிவு விற்பனை

Sale Sale

தீபாவளித் தினத்தை முன்னிட்டு
வாடிக்கையாளரின் நலன் கருதி
17/10/2009 வரை எங்கும் இல்லாத
மாபெரும் மலிவு விற்பனை.
★அனைத்து ஆடைகளுக்கும் விசேட விலைக்கழிவு

**லைடன் புடைவை நிலையம்**

இல.410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2381 (சி/561341)



## வீடு வாடகைக்கு

யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் தங்குவதற்கு உகந்த சகல வசதிகளுமுடைய வீடு வாடகைக்குத் தேவைப்படுகிறது. வீடு வைத்தியசாலையில் இருந்து ஒரு கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்திற்குள் இருக்க வேண்டும். வீடு வாடகைக்கு விட விரும்புபவர்கள் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம். அல்லது தபால் மூலம் மாத வாடகை உட்பட விவரங்களைத் தெரிவிக்கலாம்.

**பணிப்பாளர்**

போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். தொ. பே. : 0212227351.

(சி/561339)



## கண்ணீர்ப் பூக்கள்



எமது வலயக் கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன் அவர்களின்
கனிஷ்ட புத்திரன்

**செல்வன் சுதர்ஸனின்**

திடீர் மரணத்தால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் பாடசாலைச் சமூகம்.

(89440)



## இதய அஞ்சலிகள்



முன்னாள் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரும்
தற்போதைய வலிகாமம் வலயக் கல்விப்
பணிப்பாளருமான ப.விக்னேஸ்வரன்
அவர்களின் கனிஷ்ட புத்திரன்

**செல்வன் சுதர்ஸனின்**

திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். அன்னாரது குடும்பத்தினரது துயரத்தில் நாமும் பங்கு கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கோண்டாவில்
இராமகிருஷ்ண மகா வித்தியாலயம். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(89449)



## கண்ணீர் அஞ்சலி

எமது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புதல்வன்

**செல்வன் சுதர்ஸனின்**

திடீர் மரணத்தால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

மயிலணி, ஆசிரியர் கழகம்,
சுன்னாகம். யா/ மயிலணி சைவ மகாவித்தியாலயம்.

(89430)



## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியரான பா.சீராளன்
அவர்களின் அன்புத்தந்தையார்

**செல்லையா பாலராமன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்.
(89446) மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை.



## மரண அறிவித்தல்

### சதாசிவம் செல்லத்துரை (குரும்பசிட்டி)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியா, பண்டாரிக் குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் செல்லத்துரை 29.09.2009 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - பறுவதம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும், பூரணத்தின் அன்புக் கணவரும், வசந்தராசன், ஜீவதாசன், விப்பிரவாசன், பத்மலோசன், சொரூபினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2009) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் பண்டாரிக் குளத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்டாரிக்குளம்,* தகவல்:
*வவுனியா.* செ. பூரணம் (மனைவி).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ரீதியில் ஏற்கனவே உள்ள சாதனையை முறியடித்து புதிய அத்தியாயத்தை உருவாக்குவதே எனது அடுத்த இலக்கு



ஏற்கனவே தேசிய மட்டத்தில் சாதனையாகப் பதியப்பட்டுள்ள 4 மீற்றர் உயரத்தைத் தாண்டி அடுத்தஆண்டு புதிய சாதனை ஒன்றை நான் படைக்க வேண்டும் என்பதே எனது இலக்கு. அதற்காக நான் தொடர்ந்து உழைத்து வருகின்றேன்.

,மைதானத்தில் சென்று பார்த்தபோது எனக்கு பயமாக இருந்தது. போட்டியாளர்கள் என்னை விடத் தோற்றம் கூடியவர்களாகக் காணப்பட்டதுடன், அவர்கள் கொண்டு வந்த கோல் மற்றும் பாதணிகளும் தரமிக்கவைகளாக இருந்தன. மைதானத்தில் காணப்பட்ட மெத்தையும் என்னைப் பிரமிக்க வைத்தமையால்

செவ்வி: நேசன்

சற்றுப் பயம் அடைந்தேன்.

பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீரன் மகாதேவன் திருவரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தனது சாதனை தொடர்பாக அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வி வருமாறு:

ஆரம்பத்தில் நான் விளையாடச் செல்லும் போது எனக்கு வீட்டில் ஆதரவு கிடைக் கவில்லை. எனது தந்தை 2004ஆம் ஆண்டு இறந்து விட்டார். வீட்டிலும் பொருளாதாரக் கஷ்டம். இதன் காரணமாக நான் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதில் அம்மாவுக்கு விருப்பம் இருந்தும் சம்மதம் தராத நிலை காணப்பட்டது.

எனது மாமா மனாதீபன் கொழும்பில் வேலை செய்கின்றார். அவர் கல்லூரியின் பழைய மாணவனும் கூட. அவர் தான் ஆசிரியர்கள், அதிபரின் வேண்டுதலின் பேரில் காலணியை வாங்கித் தந்து உதவி செய்து ஊக்குவித்தார்.

10 வயதில் இருந்து பாடசாலை மட்டத்தில் 100 மீற்றர், 200 மீற்றர், நீளம் பாய்தல் போட்டிகளில் கலந்து கொண்டு கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் எனப் பரிசில்கள் பெற்றுவந்தேன்.

15 வயதுப் பிரிவுக்கு வந்ததும் ஓட்டத்துடன் ஈட்டி எறிதலிலும் கலந்து கொண்டு வெற்றி பெற்றேன். இந்தக் காலத்திலேயே எனது ஆசிரியர்களும், பயிற்றுவிப்பாளர்களான கபாஸ்கரன், பாகீஸ்வரன் ஆகியோர் ஏனையவர்களுக்கு கோலூன்றிப் பாய்தலுக்கான பயிற்சி அளிக்கும்போது அவர்களுடன் நானும் பயீற்சி பெறத் தொடங்கினேன்.

படிப்படியாக பயிற்சி பெற்ற நான், 17 வயதுப் பிரிவி னருக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் முதற்தடவையாக தேசிய மட்டத்தில் கலந்துகொண்டு தங்கப் பதக்கம் வென்றமை எனக்கு பெரும் மகிழ்ச்சியாக இருப்பதுடன், வீட்டிலும் பெரும் மகிழ்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆரம்பத்தில் எனது அம்மா காட்டாத அக்கறையை நான் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றதன் பின்னர் காட்டுகின்றார்.

தற்போது நான் 17 வயதுப் பிரிவில் கனிஷ்ட வீரனாகவே இருக்கின்றேன். இந்த ஆண்டு 3.40 மீற்றர் பாய்ந்து தங்கப்பதக் கத்தை வென்றேன். அடுத்த ஆண்டும் 17 வயதுப் பிரிவில் கலந்து கொள்ளவுள்ளேன். தேசிய சாதனையாக 4 மீற்றர் இருக்கிறது. இதனை நான் அடுத்த ஆண்டு முறிய டித்து புதிய சாதனையை ஏற்படுத்துவேன் என்ற இலக்குடன் தொடர் பயிற்சியில் ஈடுபடவுள்ளேன்.

நான் கல்லூரியில் பயிற்சி பெறும் போது மெத்தை என்பது இரண்டு அடி கூட உயரம் இல்லை.அத்துடன், பஞ்சு மெத்தை அதுவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. அதிக உயரத்தில் இருந்து வீழ்ந்தால் கை, கால், இடுப்பு முறியும் என்ற பயமும் காணப்படுவதுடன் அடிபட்ட நிலையும் உண்டு. இதனால் பாய்வதற்குப் பயம் பெரும் தடையாக இருக்கின்றது.

கொழும்பில் பாயும் போது பயிற்சியில் பாய்வதைவிட 10 சென்ரிமீற்றர் கூடப் பாய்ந்துள்ளேன். இது அங்குள்ள மெத்தைகள் நான்கு அடிவரை உயரமானவையாகக் காணப்படுவதனால் பாயும் உயரம் குறைவாக இருப்பதான தோற்றம் என்னைக் கூடிய உயரம் தாண்டக்கூடிய மனநிலையை ஏற்படுத்தியதுடன் பயத்தையம் நீக்கியுள்ளது.

இந்தநிலையில் அடுத்தாண்டுக்கான நான் தொடர்ந்து எடுக்கவுள்ள பயிற்சி என் னைச் சாதனை புரிய வழி ஏற்படுத்தும் - என்றார்.

## கோலூன்றிப் பாய்தலில் தங்கம் வென்ற அருணோதய மாணவன் திருவரன் செவ்வி

## சரஸ்வதியை வென்று சம்பியனானது கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம்

நாவற்குளி,ஒக்.1

52ஆவது படைப்பிரிவினரால் கடந்த 21ஆம் திகதி நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் வெற்றிக் கேடயத்தை தனதாக்கிக் கொண்டது.

15 ஓவர்களைக் கொண்ட இப்போட்டியின் இறுதிச்சுற்றில் கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழகமும் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்றியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சரஸ்வதி விளையாட்டுக்கழகம் 13.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 57 ஓட்டங் களைப் பெற்றது. இதில் ஆகக் கூடுதலான ஓட்டங்களாக 16 ஓட்டங்கள் பானுவால் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஆகக் கூடுதலாக 3 விக்கெட்டுக்களை கலைமகள் கைப்பற்றினார்.

பதிலுக்கு 58 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய வளர்மதி விளையாட்டுக்கழகம் 11.4 ஓவர்களில் 8விக்கெட்டுக்களை இழந்து 61ஓட்டங்களைப் பெற்று வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது. இதில் ரகுமான் இரண்டு 6 ஓட்டங்கள் ஒரு 4 ஓட்டங்கள் அடங்கலாக 19 ஓட்டங்களை கூடிய ஓட்டங்களாகப் பெற்றார். சுகுணன் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

முதலிடத்தைப் பெற்ற கழகத்திற்கு 523ஆவது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் லியனகே வெற்றிக் கேடயத்தையும், சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார். (50- 288)

## விளையாட்டு விழா நிரல் தயாரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.1

வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்படவுள்ள சங்கானை,சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் நிரந்தர ஆசிரியர்களுக்கான (இணைப்பு உட்பட) மெய்வல்லுநர் பெருவிளையாட்டுக்கள் நாளை மறுதினம் சனி, மறுநாள் ஞாயிறு ஆகிய இரு திணங்களும் காலை 8மணிக்கு அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

பெரு விளையாட்டுப் போட்டிகள் விலக்கல் முறையில் நடைபெறவுள்ளது. இதற்கான நிரல் தயாரிப்பதற்காக மேற்படி கோட்டங்களைச் சேர்ந்த பொறுப்பாசிரியர்கள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வலிகாமம் கல்வி வலயத்துக்கு சமுகமளிக்குமாறு மேற்படி கல்வி வலய உடற் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (50- 201)

## தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,ஒக்.1

மறைந்த அதிபர் தனபாலன் ஞாபகார்த்த 5 ஓவர் 6 பேர் பங்கு பற்றும் கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகிறது.

சென்.ஜோன்ஸ் கல்லூரியும் யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கமும் இணைந்து சென்.ஜோன்ஸ் கல்லூரியின் மறைந்த அதிபர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக,




யாழ். மாவட்டப் பாடசாலைகளின்19 வயதுப் பிரிவினருக்கிடையில் நடத்தும் ஐந்து ஓவர்கள்,ஆறு பேர் கொண்ட கடினப் பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இரண்டாவது தடவையாக இன்று வியாழக் கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

16 அணிகள் பங்குபற்றவுள்ள இச் சுற்றுப் போட்டியில் அணிகள் ஏ,பி,சி,டி என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. ஏ,பி,சி,டி என்ற ஒழுங்கின்படி போட்டிகள் முறையே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளன.

தெரிவுப் போட்டிகள் யாவும் குறிப்பிட்ட மைதானங்களில் இன்று நடைபெறும். தொடர்ந்து நாளையும் நடைபெறும்.

காலிறுதிப் போட்டிகள் மற்றும் 03ஆம் திகதியில் நடைபெறும் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

'ஏ' பிரிவில் விக்டோறியாக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி ஆகிய அணிகளும்,'பி' பிரிவில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகிய அணிகளும், 'சி' பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய அணிகளும், 'டி' பிரிவில் மகாஜனக்கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி,யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஆகிய 16அணிகள் உள்ளடங்குகின்றன.

கடந்த வருடம் முதன் முதலாக நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியனானதுடன் இரண்டாம், மூன்றாம் இடங்களைமுறையேசென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகிய அணிகள் சுவீகரித்து சென்றன. இறுதிப் போட்டி 3ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3மணிக்கு நடைபெறவுள்ளதுடன், கூடவே கைதடி நவில்ட் பாடசாலைக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி 15 வயதுப் பிரிவினருக்கும் இடையிலான காட்சிப் போட்டியும் நடைபெறவுள்ளது.(50-86)

## தெல்லிப்பழை, கோப்பாய் கோட்ட பாடசாலைகளின் இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.1

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**அருணோதயக் கல்லூரி மைதானம்**

13 வயதுப் பிரிவு -

* மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி.
* தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
* இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் எதிர் மல்லாகம் மகா வித்தியாலயம்

16வயதுப் பிரிவு-

* தெல்லிப்பளை யூனியன் கல்லூரி எதிர் குட்டியபுலம் [illegible] தமிழ்க் கலவன் பாடசாலை

**மகாஜனக் கல்லூரி மைதானம்**

13வயதுப் பிரிவு -

* காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி எதிர் தெல்லிப்பளை கட்டுவன் புலன் மகாவித்தியாலயம்

16வயதுப்பிரிவு -

* அளவெட்டி அருணோதயக் கல்லூரி எதிர் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

16வயதுப் பிரிவு-

* அளவெட்டி அருணோதயக் கல்லூரி எதிர் மல்லாகம் மகா வித்தியாலயம்.(50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்ப்பாணம் மாநகரசபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பதவிப் பிரமாணம் செய்த போது எடுக்கப்பட்ட படங்கள். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், வணபிதா. ஜெயக்குமார் அடிகளார் ஆகியோர் மங்கள விளக்கேற்றுகின்றனர். முதன்மை உறுப்பினர் மு.றெமிடியஸ், தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் ந.அமிர்தவாசகம் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்வதையும் அவர்களைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் எஸ்.குலநாயகம் புதிய உறுப்பினர்களான என்.இராஜதேவன், மரிய கொறற்றி அன்ரன் ஆகியோருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, முன்னாள் ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனப் இமாம், சொலமன் சூ.சிறில், எஸ்.ஸ்ரீகாந்தா, மாவை சேனாதிராஜா ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள ஆறு படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்தில் காணலாம்.
(படங்கள்: லக்ஸ்மன்)

# அரசியல்வாதிகளுக்கு இவ்வளவு பாதுகாப்பு யுத்தம் முடிந்த பின்னரும்கூடத் தேவைதானா?

## மங்கள சமரவீர எம்.பி. கேள்வி



கொழும்பு, ஒக்.1

தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளதால் ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் ஆகியோரின் பாதுகாப்பை உடனடியாகக் குறைக்குமாறு மங்கள சமரவீர எம்.பி. அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதன்படி ஜனாதிபதியின் பாதுகாப்புக்காக 50 மெய்ப்பாதுகாவலர்கள், 06 வாகனங்கள் மாத்திரம் வழங்கப்படவேண்டும் என்றும் -

அமைச்சர்களின் பாதுகாப்புக்காக 03 மெய்ப்பாதுகாவலர்கள், 02 வாகனங்கள் மாத்திரம் வழங்கப்படவேண்டும் என்றும் - அவர் சொன்னார்.

அதேபோல் பிரதி அமைச்சருக்கு ஒரு மெய்ப்பாதுகாவலர் மற்றும் ஒரு வாகனம் வழங்கப்படுவதோடு எம்.பிக்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு எதுவித பாதுகாப்பும் வழங்கப்படத் தேவையில்லை என்றும் அவர் சொன்னார்.

ராஜகிரியவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கூட்டுத்தாபனத் தலைவர்கள், அமைச்சர்கள், உறவினர்கள், பிள்ளைகள், அரசுக்காக வக்காலத்து வாங்குபவர்கள், அரசுக்கு நெருக்கமானவர்கள் உள்ளிட்ட பலருக்கும் பாதுகாப்பும் வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

அரசியல்வாதிகளுக்கு இருக்கின்ற அச்சுறுத்தல்களின் அடிப்படையில் இவை வழங்கப்படவில்லை. அரசின் அதிகாரத்தை இந்நாட்டு மக்களுக்குக் காண்பிக்கும் நோக்கில்தான் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

இவை போதாதென்று அமைச்சர்களின் பாவனைக்காக மேலும் மேலும் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆசியாவிலேயே கூடிய வாகனங்கள் பாவிக்கும் அரசியல்வாதிகள் இலங்கை அரசியல்வாதிகள்தான்.

யுத்தம் முடிவுற்ற பிறகும் எதற்கு இப்படியானதோர் ஏற்பாடு? யுத்தம் முடிந்ததும் தமக்கு நிவாரணம் கிடைக்கும், சோதனைச் சாவடிகள் நீக்கப்படும், பொருள்களின் விலைகள் குறையும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அவை எவையும் இடம்பெறவில்லை.

அரசியல்வாதிகளுக்குத் தாறுமாறாகப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால் மக்கள் அஞ்சுகின்றனர். பாதுகாப்புப் படை வாகனங்கள் அதிக வேகத்தில் வீதிகளில் ஓடித்திரிவதால் மக்கள் பீதிக்குள்ளாகின்றனர். இந்தப் போக்கு உடன் கைவிடப்பட வேண்டும்.

தற்போதைய நிலைமைக்கு ஏற்ப ஜனாதிபதிக்கு 50 மெய்ப்பாதுகாவலர்களும், 06 வாகனங்களும் வழங்கினால் போதும். அதேபோல் அமைச்சர்களுக்கு 03 பாதுகாவலர்களும், 02 வாகனங்களும் வழங்கப்படவேண்டும். பிரதி அமைச்சர்களுக்கு ஒரு பாதுகாவலரும் ஒரு வாகனமும் தாராளமாகப் போதும் என்றார்.

(சி)

## கண்ணீர் அஞ்சலி



எமது வலயக் கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன் அவர்களின்
கனிஷ்ட புத்திரன்
செல்வன் சுதர்ஸனின் திடீர் மறைவு
காரணமாக துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின்
ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், உடுவில். (89421)

## கண்ணீர்க் காணிக்கை



எமது வலிகாமம் வலயக் கல்விப்
பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன்
அவர்களின் கனிஷ்ட புதல்வன்
செல்வன் சுதர்ஸனின் மறைவு
கேட்டு மிகவும் மனம்
வருந்துகின்றோம். இவரின்
மறைவு குறித்து ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/ வட்டு.மத்திய
கல்லூரிச் சமூகம்.
வட்டுக்கோட்டை. (சி/561310)

## யா/ இணுவில் மத்திய கல்லூரியின் கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட
புதல்வன் செல்வன் சுதர்ஸனின்
பிரிவுத்துயர் அறிந்து வேதனையடைவதோடு,
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்.
யா/இணுவில் மத்திய கல்லூரி. (89424)

## கண்ணீர் அஞ்சலி



செல்வன் வி.சுதர்ஸன்
அவர்களின் எதிர்பாராத மறைவினால்
ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவரது தந்தை
ப.விக்னேஸ்வரன் (வலயக் கல்விப்
பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)
அவர்கள் மற்றும் அவர்தம்
குடும்பத்தினருடன் நாமும்
ஆத்மார்த்தமாய் இணைந்து
துயர்பகிர்கின்றோம்.

வாழ்வக சமூகம்.
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம். (சி/561329)

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன் அவர்களின் பாசமிகு
புதல்வன் விக்னேஸ்வரன் சுதர்ஸன்
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசார ஊழியர்கள்.
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி. (89422)

## மரண அறிவித்தல்

### கிறிஸ்தோப்பர் லூயிஸ்



சில்லாலை சென் ஜேம்ஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பர் லூயிஸ் (29.09.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர்-றோசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் மேரி மெக்டலனின் (மலர்) அன்புக் கணவரும் சுகுணா, சுஜாதா, சுமதி, சுகந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது நல்லடக்க திருப்பலி இன்று (01.10.2009) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் பண்டத்தரிப்பு புனித சந்தியோகுமையோர் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்பு பூதவுடல் சந்தி யோகுமையோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்அந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி.தாசன் (மொறாயஸ் மூக்குக் கண்ணாடி அகம் யாழ்ப்பாணம்)
மற்றும் சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சென்.ஜேம்ஸ் வீதி,
சில்லாலை. (89419)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'ஈழமுரசு' பத்திரிகைக்காக எஸ்.இதயச்சந்திரன் வரைந்த கட்டுரை இது.**

# நாராயண மந்திரமும் தமிழின அரசியல் நலனும்

சிறுபான்மை பெரும்பான்மை என்கிற சொற்பதங்களெல்லாம் முதலாளித்துவ ஜனநாயக அரசியல் கட்டமைப்பினுள் இலகுவாகப் பாவிக்கப்படும் விடயங்கள். அதனையே பூர்வீக தேசிய இனமொன்றின் மீது போர்த்தி அழகு பார்க்கலாம் அல்லது அதனை ஒடுக்குவதற்குப் பயன்படுத்தலாம். சிறுபான்மை தேசிய இனமென்பதற்குப் பதிலாக 'சிறுபான்மை மக்கள்' என்கிற குறுகிய வட்டத்திற்குள் இதனை அடக் கிக்கொள்ளலாம். இதனையே ஒடுக்கும் பெரும் தேசிய இனங்களும், அதற்கு முண்டு கொடுக்கும் நாடுகளும் ஏற்றுக்கொண்டு, தமது நலனிற்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றன.

தொடர்ச்சியான நிலப்பரப்பைக் கொண்ட ஓர் இனமாக தமிழ் மக்களை ஏற்றுக்கொள்ள இவர்கள் மறுப்பார்கள். சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்ட நாள் தொடக்கம், திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களால் கபளீகரம் செய்யப்பட்ட தமிழர்களின் பூர்வீக நிலங்கள் குறித்த அக்கறை இவர்களிடம் இல்லை. தோற்கடிக்கப்பட்ட மக்களுக்கு எதுவித அரசியல் உரிமையும் கிடையாது என்பதோடு, ஜனநாயக முறையில் போராடக்கூட முடியாது என்பதையும் இவர்கள் வலியுறுத்த ஆரம்பித்துள் ளார்கள்.

இவர்களைப் பொறுத்தவரை, தேசிய இன விடுதலைப் போராட்டமானது பயங்கரவாதமாகப் பார்க்கப்படுகின்றது. அவ்வாறு பார்ப்பதன் ஊடாகவே தமது நலன்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதே வல்லரசாளர்களின் கணிப்பு. அறம் சாராத, அதிகார சந்தர்ப்பவாதத் திலிருந்து கிளம்பும் பேரினவாதச் சிந்த னைகள், இங்கு நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஊடாக, சிறுபான்மையி னரின் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படு கின்றது. அதற்குத் தாளம் போடுவதையே வல்லாதிக்க நாடுகளும் விரும்புகின்றன.

இனி, 'தமிழ்த் தேசியம்' என்கிற செல் லாடலே, தமிழ் மக்களின் போராட்டங் களில் இருக்கக்கூடாதென்பதில் இந்தியா உறுதியாக இருக்கின்றது. அதேபோன்று, 'தமிழீழம்' என்கிற இலட்சியம் இல்லாமல் தமிழ் மக்கள் தமது போராட்டத்தை நடத்தலாமென்று மேற்குலகு விரும் புகிறது. ஆனால், இவர்களில் எவருக்கும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் குறித்த கரிசனை இருப்பதாகத் தெரியவில்லை. முள்ளிவாய்க்காலில் மக்கள் படுகொலை செய்யப்படும் போது, கண்ணையும், காதையும், வாயையும் பொத்திக்கொண்டவர்கள், எஞ்சியிருக்கும் மக்களின் அரசியல் உரிமைக்காகக் குரல் கொடுப்பார்களென்று எதிர்பார்க்க முடியாது.

அண்மையில் புதுடில்லியில் நடை பெற்ற மாநிலங்களின் பொலிஸ் துறை உயர்நிலை அதிகாரிகளின் மாநாட்டில் இந்திய தேசிய பாதுகாப்புத்துறை செய லாளர் எம்.கே.நாராயணன் உதிர்த்த கருத்துச் சிதறல்களை நாம் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். புலிகளுக்குப் புத்துயிர் அளிக்க புலம்பெயர் தமிழ் மக்கள் தயாராகி வருகின்றார்களாம். மறுபடியும் ஓர் ஆயுதப் போராட்டம் துளிர் விடுவதாகவும், அதற்கான பெருமளவு நிதியுவிகளை வழங்கத் தமிழ் மக்கள் முனைகின்றனர் எனவும் நாராயணன் கூறுகின்றார். எதனையும் எதிர்கொள்ளத் தாம் தயாராக உள்ளோம் என மஹிந்தர் பாணியில், சவால் ஒன்றும் இவரால் விடப்பட்டுள்ளது.

ஆகவே, இந்திய நலனும் ஈழத்தமி ழரின் அரசியல் அபிலாஷைகளும் ஒன் றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பவர்கள், நாராயணனின் அகண்ற பிராந்திய வல்லாதிக்க பார்வையினையும் கருத்திற்கொள்ளவேண்டும். இந்தியப் பேரரசு உடைந்து சின்னாபின்னமானால் சீனாவின் ஆதிக்கம். குறிப்பாக இலங்கையில் - அதிகரித்த ஈழத்தமிழரின் அரசியல் நலனை நிரந்தரமாக அழித்துவிடுமென்கிற ஒரு வாதத்தை இவர்கள் முன்வைக்கலாம்.

ஆனாலும், உடையாத இந்தியா, ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைக்காக, சிங்களப் பேரினவாதத்தை பகைத்துக்கொள்ளுமா - என்கிற கேள்வியையும் இன்னொரு சாரார் முன்வைப்பார்கள். கேந்திர முக்கியத்துவ இடங்களைத் தக்கவைக்க, பிராந்திய வல்லாதிக்க சக்திகள் முன்னெடுக்கும் நகர்வுகளில், ஈழத் தமிழ் மக்களின் அரசியல் நலன்கள், பகடைக்காய்களாகவே பயன்படுத்தப்படுகின்றன.

எதுவுமே புரியாதவர் போன்று நாராய ணன் உதிர்க்கும் அரசியல் கருத்துகள் இதற்கு வலுச்சேர்க்கின்றன. இந்தியாவின் பிரச்சினை புலிகளல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. விடுதலைப் புலிகளுக்குப் பதிலாக வேறெவரும், தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தால், அவர்களையும் நசுக்கிவிட வேண்டுமென்பதே நாராணன் போன்ற இந்தியக் கொள்கை வகுப்பாளர்களின் ஏகோபித்த முடிவு, ஆனாலும், 48 இலிருந்து 77 வரை முத லாளித்துவ ஜனநாயக வழியில் அரசியல் போராட்டம் நடத்தியவர்கள், வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஊடாக தமிழீழத் தனியரசுதான் ஒரே தீர்வென்பதை முன்வைத்தார்கள். அதற்கான அங்கீகாரமும் மக்களால் வழங்கப்பட்டது. இடையில், அமைதிப் படையாக உள்நுழைந்து இந்தியாவால் உருவாக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணசபையில் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளினால் 'ஈழப் பிரகடனம்' செய்யப்பட்டது. 1976 இலிருந்து 2009ஆம் ஆண்டுவரை விடுதலைப் புலிகள் முன்னெடுத்த ஆயுதம் தாங்கிய அரசியல் போராட்டத்திலும் 'தமிழீழம்' என்கிற இலட்சியமே முன்வைக்கப்பட்டது. ஆகவே, ஈழத்தமிழினத்தின் ஆயுத, அரசியல் போராட்டம் யாவற்றிலும் பிரிந்து சென்று தனிநாடு அமைக்கும் கோட்பாடு, வலியுறுத்தப்பட்டு வந்திருப்பதை நோக்கவேண்டும்.

இதில் போராட்ட வடிவங்கள் மாறினாலும் இறுதி இலக்கு தடம்புரளாமல், காவிச் செல்லப்பட்டிருப்பதைப் புரிந்துகொள்ளலாம். இந்நிலையில், ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்டாலும்,



விடுதலைப் புலிகள் இன்னமும் அழியவில்லை என்கிற நாராயணனின் பார்வையினை பல கோணங்களில், ஆய்விற்கு உட்படுத்த வேண்டும்.

இலங்கையில் இந்தியா காட்டும் கரி சனையும், எல்லை தாண்டுவதாக சீனா மீது இவர்கள் சுமத்தும் குற்றச் சாட்டுக்களும் ஒரே தளத்தில் உருவாக்கப்படும் விவகாரங்கள் பே ல் தெரிகின்றன.

ஈரானிய அதிபர் அகமது நிஜாத்தின் மறு அவதாரம் போல், மேற்குலகை அச் சுறுத்தும் மஹிந்தரின் நடவடிக்கைக ளையிட்டு இந்தியாவிற்கு கலக்கமுண்டு. ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையை நிறுத்தினால் சீனா, இந்தியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் எமது வியாபாரத்தை கொண்டு செல்வோமென்று மேற் குலகை அதிரவைக்கும் சிங்களம், நாளை இதே பாணியில் இந்தியாவையும் வெருட்டலாம். 'ஆறு கடக்கும் வரை தான் அண்ணனும் தம்பியும்.'

**- இதயச்சந்திரன் -**

போர்க் குற்றச்சாட்டிலிருந்து தன்னைக் காப்பாற்றும் வரையில்தான், இந்தியாவின் இராஜதந்திரப் பலம் மஹிந்தருக்குத் தேவை. சிங்களத்தின் இழுத்த இழுப்பிற்கு ஆடும் நாராயணன் போன்றவர்களுக்கு, இச்சூத்திரம் புரிய, சில நாள்கள் செல்லும்.

---

# ஜி.எஸ்.பி. ஆபத்திலிருந்து தப்புமா இலங்கை

இலங்கை இன்று சர்வதேச ரீதியில் எதிர்நோக்கிவரும் பாரிய பிரச்சினை என்ன?

மேலோட்டமாகப் பார்க்கும் போது பல பிரச்சினைகளை இலங்கை எதிர்நோக்கி வருகின்றது. ஜெனீவாவில் இடம்பெற்ற 12ஆவது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாநாட்டில் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க



ஆற்றிய உரையின் அடிப்படையில், சர்வதேச சமூகத்திற்கு மத்தியில் இலங்கை அரசு மனித உரிமை சம்பந்தமாக மூன்று விடயங்கள் தொடர்பாக அக்கறை செலுத்துகிறது.

வவுனியா தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள சுமார் மூன்று லட்சம் வன்னி மக்கள் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன என அரசு தெரிவித்துள்ளது. சனல் 4 தொலைக்காட்சியில் வெளியிடப்பட்ட மனிதப் படுகொலைகளைச் சித்தரிக்கும் காட்சிகள் போலியானவை என நிராகரித்தல். மூன்றாவது, ஊடகவியலாளர் திஸநாயகத்திற்கு விதிக்கப்பட்ட 20 வருட கடூழிய சிறைத்தண்டனையை நியாயப்படுத்தல். இந்த மூன்று விடயங்கள் குறித்தே இலங்கை அரசு அக்கறை செலுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளரான நவநீதம்பிள்ளை தனது ஆரம்ப உரையில் இலங்கை தொடர்பாக இரண்டு விடயங்களை முன்வைத்திருந்தார். முதலாவது, ஊடகவியலாளர் திஸநாயகம் சிறைவைக்கப்பட்டமை இரண்டாவது, வன்னி மக்கள் முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை. இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் அடிப்படையற்ற வகையில் கீழ் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த முகாம்களுக்குச் செல்ல மனித நேய உதவி அமைப்புக்களுக்கு வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன. நிவாரண அமைப்புக்களின் அதிகாரிகள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என நவநீதம்பிள்ளை தெரிவித்திருந்தார். அமைச்சர் மஹிந்த சமரசிங்க, இலங்கைக்கு இதுவரை கிடைத்துவந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் நிவாரணம் அற்றுப் போகக் கூடியதாகக் காணப்படும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை குறித்து எதனையும் சர்வதேச சமூகத்திற்குத் தெரிவிக்கவில்லை.

இந்த வரி நிவாரணத்தின் கீழ் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் 7 ஆயிரத்து 200 பொருள்களை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக்கள் கிடைத்து வந்தன. இதன்மூலமே சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் இறக்குமதி செய்யப்படும் குறைந்த விலையிலான உற்பத்திகளோடு இலங்கை உற்பத்தியாளர்கள் போட்டியிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 27 மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை கடைப்பிடிக்கும் நாடுகளுக்கே ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எனினும், இலங்கை கடந்த காலங்களில் ம[illegible] விடயங்களைக் கடைப்பிடிக்க வில்லையென்றே கூறப்படுகிறது. எனக்குத் தெரிந்து, பல வருடங்களாக இலங்கையிலுள்ள பல மனித உரிமை அமைப்புகள் இந்த நிவாரணச் சலுகைகளை மனித உரிமைகளை மதிக்கும்படியாக இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதற்காக பயன்படுத்த வேண்டுமெனக் கூறிவருகின்றன. இதில் ஒரு முன்னேற்றம் என்னவெனில், ஜெனீவா மனித உரிமைக் குழுவின் தீர்மானங்களை மதிக்க வேண்டும் என்பதை இலங்கை அரசு தொடர்ந்தும் தவிர்த்து வந்துள்ளது.

ஆண்டின் பின்னர் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இலங்கைக்கு அற்றுப் போகும் நிலை இருந்த போதிலும், அந்த வருடத்தின் இறுதியில் இலங்கை எதிர்கொண்ட ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நிவாரணத்தை மேலும் மூன்று வருடங்களுக்கு இலங்கைக்கு வழங்குவதென ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்தது. இந்த நிலையில், 2008ஆம் ஆண்டின் பின்னர், இந்த வரி நிவாரணத்தை வழங்குவதா, இல்லையா என்பது குறித்து விசாரணைகளை நடத்த வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் யோசனை முன்வைத்தது.

எனினும், இலங்கை அரசு அவ்வாறான விசாரணைகளுக்குத் தாம் இணங்கப் போவதில்லையெனத் தெரிவித்தது. எனினும், ஐரோப்பிய ஒன்றியம் இந்த விசாரணைகளுக்காக சுயாதீன ஆணைக்குழுவொன்றை நியமித்தது. கடந்த மூன்றாம் திகதி வெளியாகிய 'எக்கனொமிஸ்ட்' சஞ்சிகையின் அடிப்படையில் இந்த ஆணைக்குழு 130 பக்கங்கள் அடங்கிய - இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. இலங்கை முக்கியமான மனித உரிமை விடயங்களை கவனத்திற்கொள்ளாமல் தவறவிட்டுள்ளது என்றும், ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நிவாரணத்தைப் பெற இலங்கை பொருத்தமற்றது எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள், ஊடகவியலாளர்கள் கடத்தப்படுகின்றமை, அரசியல்மயப்படுத்தப்பட்ட நீதித்துறை, விசாரணைகள் நடத்தப்படாத காணாமல் போனவர்கள் குறித்த சம்பவங்கள் போன்ற குற்றங்களுக்கு தண்டனை வழங்காத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த தமிழ் மக்களை அரசு தீமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டிருப்பது புதிய வகையிலான சிறைபிடிப்பாகும் என அந்த

**சுனந்த தேசப்பிரிய**

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிவாரணம் இல்லாமல் போகும் நிலையில், இலங்கையின் ஆடைத் தொழில்துறை மாத்திரமல்லாது மேலும் பல தொழில்துறைகளுக்கு அது மரண அடியாகவே இருக்கக்கூடும். இந்தத் தீர்க்கமான பிரச்சினை குறித்து விசேடமாக மனித உரிமைகளுடன் தொடர்புடைய இந்த விடயம் குறித்து ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கை கருத்துக்களை வெளியிடாமையானது அதிசயமானதாகும்.

இந்த வரி நிவாரணத்தை வழங்குமாறு கோரிக்கையும் விடுக்கப்படவில்லை. நிறைவேற்றப்படாத மனித உரிமைகள் தொடர்பாகக் கூறுவதற்கு எதுவும் இல்லை என்பதே இதன்மூலம் தெரியவருகிறது. உண்மையில் வவுனியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சுமார் மூன்று லட்சம் வன்னி மக்களின் பிரச்சினையைத் தவிர இலங்கைக்கு சர்வதேச ரீதியான

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - கண்டி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## வணிகக் கல்வியும் கணக்கீடும் - I 81-T-I

**அறிவுறுத்தல்கள்:**
- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **01-40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1, 2, 3, 4 என எண்ணிடப் பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவுசெய்க.**

01. பொருட்களினதும் சேவைகளினதும் பண்பை வேறுபடுத்திக் காட்டும் விடயங்களில் ஒன்று,
1) அளவு. 2) தொழில்நுட்பம்.
3) கேள்வி. 4) தொட்டு உணரும் தன்மை.

02. பின்வருவனவற்றுள் வசதி பண்டமாக கருதக்கூடியது,
1) அரிசி. 2) பத்திரிகை. 3) கணினி. 4) தங்க நகை.

03. நிறுவன அமைப்புகளை தனியார்துறை, பொதுத்துறை என இரு வகையாக வேறுபடுத்துவது எதன் அடிப்படையில்,
1) உரிமை. 2) நோக்கம். 3) மூலதனம். 4) பொறுப்பு.

04. மத்திய வங்கி தேசிய உற்பத்தியை வகைபடுத்துவதற்கு இணங்க விவசாய தொழில் உற்பத்தியில் அடங்காதது,
1) வேளாண்மை. 2) சுரங்கம் அகழ்தல்.
3) காடாக்கல். 4) மீன்பிடி.

05. 2007ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்த தேசிய உற்பத்திக்கு அதிக பங்களிப்பு செய்த தொழிற்றுறை,
1) விவசாயம். 2) கைத்தொழில்.
3) சேவை. 4) ஏனையவை.

06. ஒப்பந்தம் ஒன் று இல்லாத பங்குடமையில் பிணக்குகள் ஏற்படும்போது தீர்த்துக் கொள்ளக்கூடிய சட்டபிரிவானது,
1) மோசடிகள் தவிர்ப்பு கட்டளைச்சட்டம்.
2) கம்பனிச்சட்டம்.
3) வியாபார பெயர் பதிவுச்சட்டம். 4) பங்குடைமை கட்டளைச்சட்டம்.

07. கணக்கீட்டில் "இரட்டை வேடம்" அணியும் ஏடு எது?
1) விற்பனை நாளேடு. 2) கொள்வனவு நாளேடு.
3) காசேடு. 4) பொதுத் தினசேரி.

08. வணிகச்சூழலில் புறச்சூழல் காரணியாக கருதப்பட முடியாத ஒரு காரணி,
1) சனத்தொகை. 2) வாடிக்கையாளர்.
3) பொருளாதாரம். 4) தொழில்நுட்பம்.

- **பின்வரும் நடவடிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு 9ஆம், 10ஆம் மற்றும் 11ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A - 12,000 ரூபா பெறுமதியான பண்டங்கள் "மதன்" என்பவரிடம் கொள்வனவு.
B - வாடகைக் கட்டணமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 4,000
C - நிறுவன பாவனைக்காக 5000 ரூபா பெறுமதியான தளபாடக் கொள்வனவு.
D - 1,000 ரூபா பெறுமதியான பண்டங்கள் சுரேசுக்கு திருப்பி அனுப்பப் பட்டது.
E - நிறுவன பயன்பாடு கருதி 7500 ரூபா பெறுமதியான இயந்திரம் ஒன்று "எரிக்" என்பவரிடம் கொள்வனவு செய்யப்பட்டது.

09. காசேட்டில் பதியப்படவேண்டிய கொடுக்கல்வாங்கலில் ஒன்று,
1) A 2) B 3) D 4) E

10. பொதுத்தினசேரியில் பதியப்பட வேண்டிய கொடுக்கல்வாங்கல்,
1) A 2) B 3) C 4) E

11. கொள்வனவு நாளேட்டில் பதியப்படவேண்டிய கொடுக்கல்வாங்கல்,
1) A 2) C 3) D 4) E

12. மொத்த வியாபாரத்தினையும், சில்லறை வியாபாரத்தினையும் வேறுபடுத்தும் மிகப்பிரதான அம்சம்,
1) பொருட்களின் விலை. 2) கொள்வனவாளர் நோக்கம்.
3) விற்பனையாளனின் நோக்கம். 4) பொருட்களின் அளவு.

13. ரூபா 70,000 பெறுமதியான இயந்திரமொன்றின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகும். அதன் கழிவுப் பெறுமானம் 20,000 ரூபா ஆகும். அவ்வாறாயின் நேர்கோட்டு முறைக்கமைய ஆண்டுக்கு அதன் பெறுமானத் தேய்வின் அளவு,
1) ரூபா 9,000 2) ரூபா 7,000 3) ரூபா 2,000 4) ரூபா 5,000

14. தளபாடக் கொள்வனவு 7,300 ரூபா கொள்வனவு கணக்கில் பதியப்பட்டுள்ளது இங்கு ஏற்பட்டுள்ள வழு,
1) இரட்டிப்பு வழு. 2) கோட்பாட்டு வழு.
3) ஈடு செய்வழு. 4) விடுதல் வழு.

15. பின்வருவனவற்றில் மூலதன செலவாக கருதக்கூடியது,
1) மின்சார செலவு. 2) இயந்திர திருத்தச் செலவு.
3) பொறி பொருத்தும் செலவு. 4) கட்டட பழுதுபார்த்தல் செலவு.

16. வரவு மீதிகளை மட்டும் கொண்டுள்ள கணக்கின் வகைகளைத் தெரிக.
1) சொத்து கணக்கும் வருமான கணக்கும்.
2) பொறுப்புக் கணக்கும் உரிமை கணக்கும்.
3) சொத்து கணக்கும் செலவினக் கணக்கும்.
4) பொறுப்புக் கணக்கும் செலவினக் கணக்கும்.

17. 600 ரூபா பெறுமதியான சில்லறை காசு கட்டு நிதியினைப் பேணும் "கஞ்சன்" நிறுவனத்தின் குறித்த காலப்பகுதிக்கான செலவானது 426 ரூபாவாக இருந்தது எனின், மீளநிரப்ப வேண்டிய வசக்கட்டின் பெறுமதி,
1) 174 ரூபா. 2) 426 ரூபா. 3) 1026 ரூபா. 4) 600 ரூபா

18. சேவை நோக்கமுள்ள (இலாப நோக்கமற்ற) வணிக[illegible] மூலமாவது,
1) நன்கொடை. 2) சந்தா.
3) சிறு வியாபாரம். 4) டிக்கட் விற்பனை.

19. பொருளொன்றை விற்பனை செய்யும்போது குறித்த விலையில் இருந்து குறைக்கப்படும் பெறுமாணம் அழைக்கப்படுவது,
1) கொடுத்த கழிவு. 2) பெற்ற கழிவு.
3) கனியக் கழிவு. 4) வியாபாரக் கழிவு.

20. அடிக்கடி நிகழும் மிகக்குறைந்த பெறுமானம் கொண்ட கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்யும் மூல ஏடு,
1) சில்லறைக் காசேடு. 2) காசோடு.
3) முறையான நாட்குறிப்பு. 4) உட்திரும்பல் நாளேடு.

21. காப்புறுதி வகைகளில் மிகப்பழைமையானது எது?
1) மோட்டார் வாகன காப்புறுதி. 2) தீயபாய காப்புறுதி.
3) கடலபாய காப்புறுதி. 4) ஆயுளுறுதி.

22. வங்கிக் கணக்கில் உள்ள வைப்புக்களின் அளவுக்குட்பட்டதாக வழங்கப்படும் அட்டை,
1) செலவு அட்டை. 2) வரவு அட்டை.
3) கடன் அட்டை. 4) செலாவணி அட்டை.

23. வணிக வங்கிகளை ஏனைய வங்கிகளில் இருந்து வேறுபடுத்தும் பிரதான காரணி,
1) சேமிப்பு வைப்பு. 2) நிலையான வைப்பு.
3) நடைமுறைக் கணக்கு. 4) கடன் வழங்கல்.

24. "போக்கிரி" என்பவர் 100,000 ரூபா பெறுமதியான இரண்டு ஆயுளுறுதி ஒப்பந்தங்களை இரு வேறு காப்புறுதி நிறுவனங்களில் 10 வருட ஒப்பந்தத்தின் கீழ் பெற்று, 4 வருடம் தவணைக்கட்டணம் செலுத்திய பின் இயற்கையாக இறந்து போனார். அவருடைய குடும்பத்தாருக்கு காப்புறுதி நிறுவனங்கள் வழங்கும் மொத்த நட்ட ஈட்டுத்தொகை,
1) 100,000/= 2) 200,000/= 3) 40,000/= 4) 80,000/=

25. சங்கர் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிலிருந்து வழக்கிழந்தவையாகக் காணப்பட்ட இருப்புக்களை சேகர் திருப்பி அனுப்பவேண்டி ஏற்பட்டது. சங்கர் நிறுவனம் அப்பொருட்கள் தமக்கு கிடைத்தது என்பதை அறிவிப்பதற்கு சேகர் நிறுவனத்திற்கு அனுப்பும் ஆவணத்தையும் அதனுடன் தொடர்பான மூல ஏட்டையும் கொண்ட தொகுதியாக இருப்பது,
1) செலவுத்தாள் - வெளித்திரும்பல் நாளேடு.
2) வரவுத்தாள் - வெளித்திரும்பல் நாளேடு.
3) வரவுத்தாள் - உட்திரும்பல் நாளேடு.
4) செலவுத்தாள் - உட்திரும்பல் நாளேடு.

26. பின்வருவனவற்றில் எக்கொடுக்கல்வாங்கல் காசேட்டில் இரு பதிவுகளையும் பதிவதாகக் காணப்படும்,
1) கடன் கொடுத்தோனுக்கு காசோலை மூலம் கொடுப்பனவு செய்தல்.
2) சில்லறைக் காசாளனுக்கு முற்பணம் கொடுத்தல்.
3) வணிக தேவை கருதி வங்கியிலிருந்து பணம் மீளப்பெறல்.
4) சொந்த தேவை கருதி வங்கியிலிருந்து பணம் பெற்றுக்கொள்ளல்.

27. வியாபார இலாபநட்டக் கணக்கினைத் தயாரிக்கையில் பேரேட்டில் மூடப்படுகின்ற கணக்குகளின் வகைகள்,
1) வருமானக் கணக்கும், செலவினக் கணக்கும்.
2) சொத்துக் கணக்கும், பொறுப்புக்கணக்கும்.
3) செலவினக் கணக்கும், சொத்துக்கணக்கும்.
4) உரிமை கணக்கும், பொறுப்புக் கணக்கும்.

28. உற்பத்தி நிறுவனம் ஒன்றின் சில தகவல்கள் வருமாறு,
மூலக்கிரயம் - 1500 ரூபா, நேர் செலவுக்கிரயம் 6000 ரூபா, மேந்தலைக்கிரயம் 10,000 ரூபா, நேரில் பொருள் கிரயம் - 3,000 ரூபா, உற்பத்தி செய்த அலகுகள் 100 எனின், அலகுக்கிரயம் யாது?
1) ரூபா 150 2) ரூபா 280 3) ரூபா 340 4) ரூபா 250

29. சொத்து அதிகரித்து பொறுப்பும் அதிகரிக்கும் கொடுக்கல்வாங்கலானது,
1) காசுக்கு விற்பனை 50,000 ரூபா.
2) கடனுக்கு விற்பனை 60,000 ரூபா.
3) கடனுக்கு தளபாடம் வாங்கியது 25,000 ரூபா.
4) வங்கிக்கடன் திருப்பி செலுத்தியது 15,000 ரூபா.

30. போக்குவரத்து முறையொன்றின் அடிப்படை அம்சமாக கருதப்பட முடியாதது,
1) பாதை. 2) வேகம். 3) சக்தி. 4) சாதனம்.

31. முதலீட்டுக்கான வாய்ப்பு என்பது,
1) நுகர்வை அதிகரிப்பதன் மூலம் அதிகரிக்கும்.
2) சேமிப்பதன் மூலம் அதிகரிக்கும்.
3) வட்டி வீதம் குறைக்கப்படுவதன் மூலம் ஏற்படும்.
4) மேற்கூறிய அனைத்து நடவடிக்கையாலும் ஏற்படும்.

32. தனி வியாபாரம் ஒன்றை ஆரம்பித்து எத்தனை நாட்களுக்குள் பதிவு செய்யப்படல் வேண்டும்,
1) 7 நாட்கள். 2) 14 நாட்கள். 3) 21 நாட்கள். 4) 30 நாட்கள்.

- **கீழ்வரும் தகவல்கள் பிரகாரம் 33ஆம், 34ஆம் மற்றும் 35ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

சரவணன் நிறுவனத்தின் சில கொடுக்கல்வாங்கல்கள் வருமாறு:-

| | |
|---|---|
| 2008.03.01 | காசுமீதி 65,000/=, வங்கி மீதி 20,000/= |
| 2008.03.03 | கொள்வனவு 40,000/= |
| 2008.03.05 | விற்பனை 25,000/= |
| 2008.03.10 | வங்கியில் வைப்பு 6,000/= |
| 2008.03.12 | ரகுவுக்கு விற்பனை 40,000/= |
| 2008.03.15 | சம்பளம் காசோலை மூலம் கொடுத்தது 3,000/= |
| 2008.03.16 | மா கொள்வனவு 20,000/= |
| 2008.03.18 | குமாரிடம் கொள்வனவு 30,000/= |
| 2008.03.20 | மின்சாரம் செலுத்தியது 3,000/= |
| 2008.03.22 | கடனுக்கு விற்பனை 20,000/= |
| 2008.03.27 | வாடகை கொடுத்தது (காசோலை மூலம்) 4,000/= |
| 2008.03.31 | காசுக்கு விற்பனை 30,000/= |

33. சரவணன் நிறுவனத்தின் மார்ச் மாதம் நடைபெற்ற மொத்த காசு விற்பனை,
1) 115,000 ரூபா 2) 55,000 ரூபா 3) 95,000 ரூபா 4) 30,00 ரூபா

34. 2008.03.31இல் நிறுவனத்தில் காணப்படும் காசுமீதி,
1) 40,000 ரூபா 2) 61,000 ரூபா 3) 57,000 ரூபா 4) 51,000 ரூபா

35. 2008.03.31இல் நிறுவனத்தின் ஏடுகளில் காணப்படும் மொத்த கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் மீதிகள் முறையே,
1) 60,000 ரூபா, 90,000 ரூபா. 2) 60,000 ரூபா, 30,000 ரூபா
3) 20,000 ரூபா, 50,000 ரூபா 4) 20,000 ரூபா, 30,000 ரூபா.

தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரும் சங்க நலன்புரி நிலையமும் இணைந்து ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற பல்கலைக்கழக அனுமதிபெற்ற சங்கத்தின் பணியாளர், அங்கத்தவர் ஆகியோரின் பிள்ளைகளுக்கு கல்வி நிதி வழங்கும் நிகழ்வும் இளைப்பாறிய சங்கப் பணியாளருக்கு பிரிவுபசார விழாவும் அண்மையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றன.

ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளர் செல்வி வேலுப்பிள்ளை சிவஞானத்திற்கு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.சிவலிங்கம் தங்கச் சங்கிலி வழங்குவதையும் ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற த.தர்சனுக்கு சமாச பொதுமுகாமையாளர் ஜெ.பி.குணரத்தினம் கல்வி நிதி வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: தென்னவன்)

# மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் உள்ளூராட்சி மன்றங்களும் பங்களிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1

மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளது.

பாடசாலை மட்டுமன்றி உள்ளூராட்சி சபையூடாக நூலகசேவை, பொதுஅறிவுக் கட்டுரை, கவிதை மற்றும் முன்பள்ளிகளுக்கு ஊடாக மாணவர்களின் கல்வி அபிவிருத்தியிலும் இவை செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார்.

வலி.மேற்குப் பிரதேச சபையின் சங்கானை உப அலுவலக வாணிவிழா சிரேஷ்ட நூலகர் திருமதி த.செல்வராணி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சு.புத்திசிகாமணி மேலும் உரையாற்றுகையில்:

வலி.மேற்குப் பிரதேச சபை நான்கு உப அலுவலகங்களைக் கொண்ட பரந்த பிரதேசம்.

இங்கு ஒவ்வொரு உப அலுவலகத்திலும் உள்ள நூலகங்களில் நாலாயிரம் முதல் 5 ஆயிரம் வரையிலான நூல்களை எமது மாணவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

எமது பகுதியில் உள்ள அனைத்து மாணவர்கள், பாடசாலை விட்டு விலகியவர்கள், அரச அலுவலர்கள், வயோதிபர் மற்றும் நலன்விரும்பிகள் சகல நூல்களையும் பார்ப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தி வருகின்றோம்.

எனவே எம்மிடம் உள்ள வளங்களை பயன்படுத்தத் தேவையான வசதிகளை முழுமையாக ஏற்படுத்தியுள்ளோம்.

இதற்காக வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் பிரதேச அபிவிருத்திக்காகப் பெருமளவிலான நிதியை எமக்கு வழங்கி வருகின்றது.

அந்நிதி ஊடாகவே நூல்களை உங்களுக்கு வழங்குகின்றோம் - என்றார்.

மேற்படி நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்களின் வரவேற்பு நடனங்களும் இடம்பெற்றன. (203-302)

## பாலபண்டித, பண்டித வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.1

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்படும் பாலபண்டித, பண்டித வகுப்புகள் கட்டணம் அறவிடப்படாது சங்கக் கல்லூரியான கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் நடைபெறுகின்றன.

இவற்றுக்கான புதிய வகுப்புகள் இல. 223, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மேற்படி கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளதால் மாணவர்கள் தமது பெயர்களை சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை பதிவு செய்து கொள்ளலாம் என சங்கச் செயலாளர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் தெரிவித்துள்ளார். (201)

## படையினரால் முன்பள்ளிகளின் விவரம் திரட்டல்

சுழிபுரம், ஒக்.1

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல முன்பள்ளிகளின் விவரத்தையும் படையினர் திரட்டி வருகின்றனர். முன்பள்ளியில் கல்வி கற்கும் சிறுவர்களின் தொகை, கற்பிக்கும் ஆசிரியர்கள் விவரம் போன்றவற்றை நேரடிக் கண்காணிப்பில் இராணுவ அதிகாரிகள் முன்பள்ளிகள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று அங்கு கடமையிலுள்ள ஆசிரியர்களிடம் கேட்டுப் பதிவு செய்துள்ளனர். உயர் அதிகாரிகளின் உத்தரவுக்கமைய இந்த விவரம் திரட்டப்படுவதாக, விவரம் திரட்டும் இராணுவ அதிகாரிகள் சிறுவர் பாடசாலை ஆசிரியைகளிடம் தெரிவித்துள்ளனர். (201-28)

## பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலைக்கு உபகரணக் கொள்வனவுக்கு நிதி

சுன்னாகம், ஒக்.1

பண்டத்தரிப்புப் பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா எழுபத்தையாயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் 'பாண்ட்' வாத்திய உபகரணக் கொள்வனவுக்கென 75 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் இந்நிதியுதவிகள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-38)

## கடந்தகால அசாதாரண சூழ்நிலைகளின்போது பெறுபேற்றுச் சான்றிதழ்களைக் கைவிட்ட மாணவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.1

கடந்த 2008, 2009 காலப் பகுதிகளில் இடம்பெற்ற இடப்பெயர்வு காரணமாக ஜி.சீ.ஈ. சாதாரணம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளின் பெறுபேறுகளைக் கைவிட்ட மாணவர்களுக்குப் பரீட்சைத் திணைக்களத்திடமிருந்து 2ஆவது பிரதியினைப் பெற்றுக் கொடுக்க தென்மராட்சிக் கல்வி வலயத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கும், நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறி வேறு பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்குமே பெறுபேற்றுச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகளின் சான்றிதழ்களைப் பெறவுள்ள மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபர்களிடம் உரிய படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறும் சுட்டிலக்கம் தேடுதல் மற்றும் பெறுபேற்றுச் சான்றிதழ் பெறல் ஆகியவற்றுக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை வலயக் கல்வி அலுவலகத்தினர் செலுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## வாய்க்கால் புனரமைப்புப் பணிகள் இடைநடுவில்; மழைகாலத்துக்கு முன் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.1

புனரமைக்கப்பட்ட வாய்க்கால் வேலை இடை நடுவில் கைவிடப்பட்டதால் மழை காலங்களில் வெள்ளம் தேங்கிநின்று அயலில் உள்ள குடும்பங்களுக்குத் தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டுவில் வடக்கு தேவாலயச் சந்திக்கும் பனையடிப் பிள்ளையார் கோயிலுக்குமிடையில் 750 மீற்றர் நீளமுள்ள வாய்க்கால் நீண்டகாலமாக இருந்தது.

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் ஆகிய பிரிவுகளில் மழை காலங்களில் ஏற்படும் வெள்ளம் இவ்வாய்க்கால் வழியாக வயல் வெளிக்குச் செல்லும்.

இந்த வாய்க்காலைப் புனரமைக்க கடந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் 300 மீற்றர் தூரம் வாய்க்கால் வெட்டப்பட்டு இருபக்கமும் சிமெந்துக் கட்டு அமைக்கப்பட்டது.

சிமெந்துத் தட்டுப்பாடு காரணமாக புனரமைப்பு வேலைகள் இடைநிறுத்தப்பட்டன.

கடந்த வருடம் பெய்த மழையின் போது வாய்க்காலுக்கு வந்த வெள்ளம் வெளியேற முடியாமல் தேங்கி நின்றதால் அப்பகுதிக் குடியிருப்பாளர்கள் மலேரியாக் காய்ச்சலுக்கு இலக்காகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இடை நிறுத்தப்பட்ட வேலையினை மீண்டும் இம்முறை மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் நிறைவேற்றி அப்பகுதி மக்களைத் தொற்றுநோய்களிலிருந்து காப்பாற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (203-207)




## ஆழ்கடலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்கள் திசையறியக் கூடியவாறு காக்கைதீவுக் கடற் பிரதேசத்தில் வெளிச்சவீடு அமைக்குமாறு கோரிக்கை

### சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சமூக நலத்துறை அமைச்சருக்குக் கடிதம்

சண்டிலிப்பாய், ஒக்.1

ஆழ்கடலுக்கு மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் திசையறிந்து திரும்பி வருவதற்கு வசதியாக காக்கைதீவுக் கடற் பிரதேசத்தில் கலங்கரை விளக்கம் (வெளிச்சவீடு) அமைத்துத் தருமாறு சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் என். பொன்னம்பலம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கோரியுள்ளார்.

சாவற்கட்டு மீனவர்கள் மட்டுமன்றி ஏனைய அயல் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களின் நன்மை கருதி வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பற்றி சங்கத்தலைவர் அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

யாழ். மாவட்டத்தில் முக்கியமான மீன்பிடித்துறைகளில் காக்கைத்தீவு இறங்குதுறையும் ஒன்றாகும்.

பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் இருக்கும் இந்த இறங்குதுறையில் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் தங்கள் மீன்பிடி வள்ளங்களைக் கரையோரங்களில் அணைப்பதில் பாரிய சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றார்கள்.

மீனவர்களின் நன்மை கருதி காக்கைதீவு இறங்குதுறையில் வள்ளங்களை அணைக்கக்கூடிய வகையில் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சுமார் 300இற்கும் அதிகமான கடற்றொழிலாளர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவரும் எமது சாவற்கட்டுக் கிராமத்தில் 'ஐஸ்' தொழிற்சாலை இல்லாமை மீனவர்கள் மத்தியில் பாரிய குறைபாடாக நிலவி வருகின்றது.

மீன்பிடித்தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட்டதைத் தொடர்ந்து நாளாந்தம் பிடிக்கப்படும் பெருந்தொகையான மீன்களைப் பழுதடையாமல் வைத்துச் சந்தைப்படுத்துவதற்கு 'ஐஸ்' கட்டி தேவைப்படுகின்றது.

எனவே நவீன வசதிகளைக் கொண்ட 'ஐஸ்' தொழிற்சாலை ஒன்றை எமது பகுதியில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

எமது கிராமத்திலுள்ள பெரும்பாலான வீதிகள் பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமையால் குறிப்பாக மழை காலங்களில் போக்குவரத்து செய்யமுடியாமல் இருக்கின்றன.

எனவே விவசாயிகளுக்கான வீதிகளைப் புனரமைப்பது போல் இந்த வீதிகளையும் புனரமைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவும்.

எமது மீனவக் கிராமத்தில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இட நெருக்கடியின் மத்தியில் பெற்றோர்களுடனும் ஓலைக் குடிசைகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வசதியாக நூறு வீடுகளை அமைத்துத் தருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

எமது பகுதியில் மலசலகூட வசதிகள் இல்லை. இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுகின்றன. இதனால் தொற்று நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு. எனவே 100 மலசலகூடங்கள் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவும்.

எமது மக்கள் கலை நிகழ்ச்சிகள் உட்பட ஏனைய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு வசதியான மண்டபமும் எமது கிராமத்தில் இல்லை.

எமது சங்கத்தின் செயற்பாடுகளைக் காலத்திற்கு ஏற்றவாறு விரிவுபடுத்தும் வகையில் கணனி, போட்டோப்பிரதி இயந்திரம் போன்றனவும் எம்மிடம் இல்லை. இதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்- என்றுள்ளது. (203- 11[illegible])

## தரவட்டச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.1

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11வரையான வகுப்புகளில் தமிழ்மொழியும் இலக்கியமும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்டச் செயலமர்வு எதிர்வரும் நான்காம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலோலி காந்தியூர் சனசமூக நிலைய பவள விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகச் சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினரான பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் ஆகியோர் உரையாற்றுவதையும், பருத்தித்துறை பிரதேச சபையின் செயலாளர் ச.சந்திரயோகன் பவள விழா மலரின் சிறப்புப் பிரதியை வழங்குவதையும், பவள விழாவை ஒட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்குச் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யோ.பரமேஸ்வரி பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

[படங்கள்:- கர்ணன்]

## நலன்புரி நிலைய மக்களுக்கு சமபோச சத்துணவு விநியோகம்

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் கைதடி, பனைவள நிலைய நலன்புரி முகாம் மக்களுக்கு சமபோச சத்துணவு மா வழங்கப்பட்டு வருகின்றது.

கைதடி அரசின் சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலை ஊடாக நலன்புரி நிலைய கர்ப்பிணி பெண்கள் மற்றும் 5 வயதுக்குக் குறைந்த சிறுவர், சிறுமிகளுக்கும் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணிப் பெண்களுக்கு 200 கிறாம் பொதிகள் ஆறும், சிறுவர்களுக்கு 3 பொதிகளுமாக இது வரை மேற்படி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 214 பயனாளிகளுக்கு சமபோச சத்துணவு வழங்கப்பட்டுள்ளது.

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு மகரகம, நாவின்ன தலைமைத்திணைக்களத்திலிருந்து வருகை தந்திருந்த ஆணையாளர் திருமதி றமணி குணவர்த்தன சமபோச சத்துணவுப் பொதிகளை எடுத்து வந்து வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது (203-160)

# ஈழத்தமிழர்களின் பேரவலம் தீர்க்க ஐ.நா. செயலர் முன்வர வேண்டும்!

## சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தரணி பியன்கா கோரிக்கை

கொழும்பு, ஒக். 01

இலங்கையில் தமிழருக்கு எதிராக தொடரப்பட்டிருக்கும் மனிதப் பேரவலத்தை தடுத்து நிறுத்த ஐ. நா. செயலாளர் பான் கீ மூன் உட்பட சர்வதேச சமுகத்தினர் முன்வர வேண்டும் - என்று பிரபல சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தரணி பியன்கா யக்கர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுமார் 2 லட்சத்து 80 ஆயிரம் தமிழர்கள் இலங்கையில் வுவுனியா முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கின்றமையைப் பார்த்துக் கொண்டு உலகம் சும்மா இருக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

தமிழர்கள் முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கின்றமையை ஆட்சேபித்து சர்வதேச மட்டத்தில் மனித உரிமை ஆர்வலர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசார நடவடிக்கைகளை ஆதரித்துக் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது குறித்துமேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ அரசு, 180 நாள்களுக்கு முகாம் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள் என்று கூறி வந்துள்ளது. அந்த 180 நாள்கள் தவணை முடிவதற்கு இன்னும் 50 நாள்களே மாத்திரமே உள்ளன.

ஆனால் இம் மீள்குடியேற்ற நடவடிக்கையைப் பூர்த்தி செய்து இந்த வாக்குறுதியைக் காப்பாற்ற மஹிந்த அரசு எந்த நடவடிக்கையையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

இனிவரும் நாள்களில் ஆரம்பமாகவுள்ள பருவப்பெயர்ச்சி மழை, முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் உயிர் வாழ்க்கைக்கு பெரியளவில் அச்சுறுத்தலாக அமையும். முகாம்களின் நிலைமை இன்னும் மோசமாகிவிடும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு தமிழர்களை முகாம்களில் அடைத்து வைத்து மனிதப் பேரவலத்தை நிகழ்த்துவதன் மூலம் அந்த மக்களின் உயிர் வாழ்வதற்கான உரிமையை மீறுகிறது. சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறி நடக்கிறது.

எனவே, பான் கீ மூன் உட்பட உலகத் தலைவர்கள் மனிதப் பேரவலத்துக்கு எதிராகச் செயற்பட முன்வரவேண்டும்.

ஐ. நா. சபை, செஞ்சிலுவைக் குழு உட்பட சர்வதேச மனிதாபிமான அமைப்புகளுக்கு எவ்வித மட்டுப்படுத்தலுமின்றி முகாம்களுக்கு செல்லுவதற்கான பூரண அனுமதி வழங்கப்பட வேண்டும்.

அத்துடன், இலங்கை அரசு முகாம்களில் தடுத்து வைத்திருப்போர் குறித்த அனைத்து விடயங்களையும் பகிரங்கப்படுத்த வேண்டும்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கு புலிச் சந்தேக நபர்களை அரசு ஜெனிவா உடன்படிக்கைக்கு அமைவாக மனிதாபிமானமாக நடத்த வேண்டும்.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற போது புலிகள், இராணுவம் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டன எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த இலங்கை அரசு ஐ.நாவுக்கு அனுமதி வழங்கவேண்டும்.

ஐ.நா. செயலாளர் நாயகம் தமது விசேட பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு நியமிக்க வேண்டும்.

இலங்கை அரசு அகதிகளுக்கான உதவிகள் அவர்களுக்கே சென்றடைய வேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் சமுக நல்லிணக்கத்தை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு துறைசார்ந்த சர்வதேச நிபுணர்களின் உதவிகளைப் பெற வேண்டும். - என்றார். (சி)

# ஊடகங்கள் மீதான ஒடுக்குமுறைக்கு தற்போதைய அரசே முழுக் காரணம்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 01

ஊடகத்தை ஒடுக்குவதானது மக்களை ஒடுக்குவதற்கு சமமானது. இலங்கையில் ஊடகங்கள் ஒடுக்கப்படுவதற்கு தற்போதைய அரசே முழுக்காரணம்.



- இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டினார்.

அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊடக அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும், 20 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்தை விடுதலை செய்யும்படி வலியுறுத்தியும், ஊடகப்பேரவைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நேற்றுமுன்தினம் கொழும்பில் ஊடக மாநாடொன்று இடம்பெற்றது.

ஊடக அமைப்புக்கள், எதிர்க்கட்சிகள், கலைஞர்கள், மதத் தலைவர்கள், வெகுசன அமைப்புக்கள் ஆகியன இந்த ஊடக மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இலங்கைப் பத்திரிகை சபையை மீள நிறுவுவதற்கு அரசு மேற்கொண்டு வரும் முயற்சி ஆபத்தானதென சுட்டிக்காட்டியுள்ள ஊடக அமைப்புக்கள், அரசு அம்முயற்சியைக் கைவிட வேண்டும் என்று அதனைக் கண்டிக்கும் வகையிலேயே இன்றைய ஊடக மாநாடு இடம்பெற்றது.

இந்த ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே எதிர்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இலங்கையில் ஊடகங்கள் ஒடுக்கப்படுவதற்குத் தற்போதைய அரசே முழுக்காரணம்.

அத்துடன், ஊடக சுதந்திரம் என்பது மக்களின் சுதந்திரமாகும் எனத் தெரிவித்த அவர், எந்தவொரு செய்தியையும் முழுமையாக அறிந்து கொள்ள இந்த நாட்டு மக்களுக்கு உரிமையுள்ளதுடன், ஊடகங்களினூடாகவே மக்கள் அதனை அறிந்து கொள்வதாகவும் ஊடகத்தை ஒடுக்குவதானது மக்களை ஒடுக்குவதற்கு சமமானது.

இவ்வாறு அரசு ஊடக சுதந்திரத்தை ஒடுக்க முயன்றால் அதனைத் தடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தச் செயலமர்வில் சுதந்திர ஊடக இயக்கத்தின் செயலாளர் சுனில் ஜயசேகர கருத்துத் தெரிவிக்கையில் -

1994 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் இன்று வரையில் 38 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் உலகத்திலேயே பயங்கரமான கெரில்லா அமைப்பான விடுதலைப் புலிகளைத் தோல்வியடையச் செய்த இந்த அரசால் இந்த அரசின் கட்டுப்பாட்டிலுள்ள அதுவும் அதியுயர் பாதுகாப்பு வலைய பகுதிக்குள் நடக்கும் இந்த ஊடகவியலாளர்கள் மீதான கொலைவெறித் தாக்குதல் கலாசாரத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை நினைக்கையில் ஆச்சரியமாகவுள்ளது.

இவ்வாறான தாக்குதல் சம்பவங்களின் பின்னால் அரசே செயற்படுவதால் இவை மிக எளிதாக நடைபெறுகின்றன.

இந்த ஊடகவியலாளர்கள் தீவிரவாதிகளோ, அரசியல்வாதிகளோ, ஏன் ஆயுததாரிகளோ இல்லை, இவர்கள் இந்த நாட்டில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகளை மக்களுக்கு தெரியப்படுத்தும் ஓர் ஊடக நிறுவனத்தில் பணிபுரியும் ஊடகவியலாளர்கள் இவர்கள் மீது ஏன் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுகின்றன?

இவர்கள், இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊழல் மோசடிகள், அடாவடித்தனங்களை இந்த நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் வெளிச்சம் போட்டு காட்டுவதாலேயே அவர்கள் மீது இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார்.

இந்தச் செயலமர்வில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உப தலைவர் அ.நிக்சன் கருத்து தெரிவிக்கையில் -

ஊடக சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும், பாதுகாக்க 17 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதன் மூலம் அரசமைப்பு பேரவையை உருவாக்கி சுயாதீன ஆணைக்குழு முறைமையை செயற்படுத்த வேண்டும் என குறிப்பிட்ட இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உப தலைவர், இதன் மூலம் ஊடகச் சுதந்திரம் ஒடுக்கப்படுவதை கணிசமான அளவில் தடுக்கமுடியும்.

இது தொடர்பில் ஐந்து ஊடக அமைப்புக்களும், பல அரசியல் தலைவர்களிடம் பேச்சுக்களை நடத்தி பல கோரிக்கைகளை முன்வைத்த போதும் இது தொடர்பில் எதுவித ஆக்கபூர்வ நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை - என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி, அரசிற்கு பாரிய அழுத்தத்தை கொடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, இந்தச் செயலமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ஊடகத் தொழிலாளர் சங்கத்தின் உப தலைவர் லங்கா பேஹலி கூறியவை வருமாறு -

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து ஆயுதம் தாங்கி போராடிய போராளி மற்றும் தளபதி இந்த அரசின் அமைச்சரவை அந்தஸ்த்தைப் பெற்று சுகபோக வாழ்க்கை வாழும் போது மக்களுக்கு உண்மையை புலப்படுத்தும் ஊடகவியலாளர்கள் அச்சத்துடனும், மரண பயத்துடனும் வாழும் ஓர் நிலைமை தோன்றியுள்ளது.

அத்துடன், விடுதலைபுலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்த ஜோர்ஜ் மாஸ்டர், தயா மாஸ்டர் சாதாரண மக்களைப் போன்று பிணை பெற்று சுதந்திரமாக நடமாடும் போது இந்த நாட்டில் ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் 20 வருட சிறைத்தண்டனை அனுபவிப்பது இந்த நாட்டில் எந்தளவிற்கு ஊடக சுதந்திரம் பேணப்படு கின்றது என்பதற்குச் சிறந்த உதாரணம் - என்றார்.

கொழும்பு, தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள ஜயவர்த்தன கேந்திர நிலையத்தில் இடம்பெற்ற இந்த ஊடக மாநாட்டில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர உட்பட பல அரசியல் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

இந்த ஊடகமாநாட்டின் இறுதியில் அரசால் மீள நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள இலங்கைப் பத்திரிகை சபையை உடனடியாக நிறுத்த வேண்டுமெனவும், ஊடக அடக்குமுறையைக் கண்டித்தும், கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்தைவிடுதலைசெய்யக்கோரியும் கையெழுத்து வேட்டையும் இடம்பெற்றது.

ஐந்து ஊடக அமைப்புக்களான சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், முஸ்லிம் மீடியா போரம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஊடகத் தொழிலாளர் சங்கம் உட்பட தேசிய பத்திரிகை ஆசிரியர் சங்கம், தேசிய ஊடகவியலாளர் ஒன்றியம், ஆகிய ஊடக அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்த ஊடகமாநாடும் செயலமர்வும் இடம்பெற்றன. (சி)

## கிளிநொச்சி மாவட்டத்துக்கு விரைவில் அரச அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம்.ஒக்.01

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு அரச அதிபர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் சிரேஷ்ட இலங்கை நிர்வாகசேவை (தரம் -1) சேர்ந்த அதிகாரி ஒருவர் பொது நிர்வாக அமைச்சினால் விரைவில் கிளிநொச்சி அரச அதிபர் பதவிக்கு நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (203-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு

உதயனில் வாரந்தோறும் வெளிவரும் 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதைப் படங்களில் காணலாம்.



4ஆம் வட்டாரம், புங்குடுதீவைச் சேர்ந்த லோ.ஜனார்த்தனன் பரிசு பெறுகின்றபோது...



பேரின்பநாயகம் லேன், கச்சேரியைச் சேர்ந்த எம்.ஜோன்பிரியந் பரிசு பெறுகின்றபோது...



3ஆம் குறுக்குத் தெரு, பாஷையூரைச் சேர்ந்த அன்ரன் அனுஷா பரிசு பெறுகின்றபோது...



அண்ணமார் கோயிலடி, இணுவிலைச் சேர்ந்த சா.இசைப்பிரியா பரிசு பெறுகின்றபோது...



யாழ்.இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சி.ரஜீபன் பரிசு பெறுகின்றபோது...

## விஞ்ஞானக் கரங்களுக்குள்...

பட்டப்படிப்பு ஆசையுடன்
மின்விசைக் கவர்ச்சிக்கும்
பாடநூல்களுடன்
காந்தவிசைக் கவர்ச்சிக்கும்
இனிய நண்பர்களுடன்
ஈர்ப்பு விசைக் கவர்ச்சிக்கும்
முழுதாக அடிமையாகினாள் இவள்
சேதன மாற்றீட்டை முடித்து
பரிசைத் தட்டியபோது
இவள் அறிவுக்கு பாகுமை விசை
அற்றுப் போயிற்று
இவள் இலக்கு நேர்கோட்டு
இயக்கமாக நடைபோட
சுரமானிப் பாலமும் விலகி வழிவிட
சோடியம் விளக்கு வெள்ளொளி பாய்ச்சிட
செனர் இருவாயி சடுதியாக
உடைந்திட
கதிர்த் தொழிற்பாடு சற்று
வினாடிகள் ஓய்வெடுக்க
கல்வனோமானியும்
பூச்சியவாசிப்பு ஆயிற்று
தூக்கிய இவள் வலக்கை விரல்கள்
நூறு விதம் மீள் தன்மையாகிட - அவை
எதிர்த்தன லென்சின் விதியை.

ஸ்ரீ. ஷஸ்ரூபி,
இணை மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## நட்பு

உள்ளத்தின் பூரிப்பில்
மலரும் வார்த்தைகள்
ஆத்மாவின் துடிப்பை
ஆளத்தழுவியபடி
அரங்கேறுவது நட்பு

சோகத்தைக் கூட
சுகமாய் மாற்றி
இதயத்தின் தளத்தில்
நாதமாய் ஒலிக்கும்
நிஜத்தின் நிழல் நட்பு.

இ.திரிசா,
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.



## ஏக்கம்

கண்ணிலே கனவுடனும்
நெஞ்சினிலே சுமையுடனும்
எண்ணங்களிலே ஏக்கத்துடனும்
கற்பனையிலே தவிப்புடனும்
சேரும் நாள்களை எண்ணினேன்
காலங்கள் ஓடின....
கனவுகளுடன்தான் வாழ்வா!
அன்புள்ளங்கள் எங்கே?
அரவணைக்க யார் உண்டு
பூஞ்சோலையில் பூக்கள்
மலர்கின்றன
என் உள்ளத்திலே ஏக்கம் என்ற
பூக்கள் மலர்கின்றன!!!

A. அன்ரன் ஜெறாட்,
P.R.I.நலன்புரி நிலையம்,
கைதடி.

> கேள்விக்கு என்ன பதில்?
> -40இன் சரியான விடை
> ஜே.ஆர். ஜெயவர்த்தனா.

## கேள்விக்கு என்ன பதில்? -42

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில்
நடைபெற்ற அகழ்வாராட்சியில் ஒரு
மொழி ஈரெழுத்து முத்திரையைக் கண்டு
பிடித்த தமிழ் அறிஞரின் பெயர் என்ன?
(சரியான விடையை
08.10.2009 இற்கு முன்னர்
அனுப்பிவைக்கவும்).



நேசித்த நெஞ்சை
நெருஞ்சிமுள்ளாய்
குத்தி விட்டு
இதயத்தின் இணைப்பிற்காய்
இன்னொரு இடம் தேடிச் செல்கிறாய்
பருவத்தின் தேவைக்கா?
பாவம், அவளைத் தேடினாய்
பாவி உந்தன் வேஷம்
அவளுக்கு எங்கே புரிந்தது
பெண் என்றால் என்ன உனக்கு
போதைப்பொருளா இல்லை
பொம்மைப் பெண்ணா?
காத்திருக்கிறாள் அவள்
உனக்காய் அல்ல
உன் காதலுக்காயும் அல்ல
கடமை தவறிய உந்தனுக்கு
கடவுளின் கணக்கு
யாதுஎன அறிய.....

வை.தர்சி, யாழ்ப்பாணம்.

## சிந்திக்க சில முத்துக்கள்...

* இனிய உள்ளத்தின் அடையாளம் மலர்ந்த முகம்.
* கைவிடப்பட்டவர்களுக்குத் தந்தையாய் இரு ஒடுக்கப்பட்டவர்களுக்குத் தாயாய் இரு.
* தக்க வேளையில் சொன்னசொல் வெள்ளித்தட்டில் வைத்த பொற்கனிக்கு சமனானது.
* பொன்னையும் முத்தையும் விட அறிவுள்ள பேச்சே விலையுயர்ந்த அணிகலன்.
* மதி கெட்ட பெண்ணின் அழகு பன்றிக்குப் போட்ட வைரமூக்குத்தி.
* அழிவுக்கு முந்தியது அகந்தை வீழ்ச்சிக்கு முந்தியது வீண் பெருமை.

ச. டிலானி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## கேள்விக்கு என்ன பதில்? 40 இல் பரிசு பெறுவோர்

01) க. ஞானமுத்து
கைதடி மேற்கு,கைதடி.

02) இ.சஞ்சிதா
ஏழாலை மேற்கு, ஏழாலை.

03) உ. தக்சாயணி
தரம்- 10, உடுவில் மகளிர் கல்லூரி.

## பாராட்டுப் பெறுவோர்

01) தெ. தினேஸ்
மாத்திராவளவு, கொம்மாந்துறை,
வல்வெட்டித்துறை.

02) சி. பாலசுந்தரம்
கல்வளை, சண்டிலிப்பாய்.

03) இ. வேணுகுமாரன்
கரப்பிட்டி பிள்ளையார் கோயிலடி,
அராலி தெற்கு, அராலி.

04) யோ. கரிர்த்தனா
கைதடி தெற்கு, கைதடி.

05) பிரபாகரன் கிரிஷாந்
நவோதயா வட்டு இந்துக் கல்லூரி,
சித்தங்கேணி.

06) ஏ. வினோதவன்
வராம்பற்றை, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

## இளவல்கள் வட்டம்

YOUTH

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
:-..........................................
........................ ......................................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சரம்

## மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சேலைத்தலைப்பு சிக்கி தவறிவிழுந்து பெண் காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.01

மோட்டார் சைக்கிளில் அமர்ந்திருந்த பெண்ணின் சேலைத்தலைப்பு சில்லுக்குள் அகப்பட்டதில் நிலத்தில் வீழ்ந்து காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கச்சாயில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ர.சிவபாக்கியம் (வயது30) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். (201-207)

## ஆலய மடத்திற்குச் செல்ல புதிய வீதி

வடமராட்சி,ஒக்.01

தும்பளை முத்துமாரி அம்மன் ஆலய அந்தியேட்டி மடத்துக்குச் செல்வதற்கென வீதி ஒன்று அமைக்கப்படவுள்ளது

சபா ரவீந்திரன் அறக்கட்டளை நிதியம் இவ்வீதியை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது. (201-236)

## அலுவலக மேசை அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.01

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் பழைய மாணவி திருமதி ஜெ. ஜெகதாம்பிகையால் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான அதிபர் அலுவலக மேசை ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (201- 267)

## எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்திற்கு நீர் விநியோகத் தொகுதி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.01

எழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவர்களுக்கு 'லீட்ஸ்' நிறுவனம் நீர் விநியோகத் தொகுதி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

நீரிறைக்கும் இயந்திரம், நீர்த்தாங்கி, வெளி இணைப்புக் குழாய்கள் கொண்ட இந்த அன்பளிப்பு ஒரு லட்சம் ரூபா பெறுமதியானது எனப் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (204- 267)

## குளவி தாக்கி இருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.01

மரத்திலிருந்து விழுந்த காவோலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் அவ்வழியே சென்ற இருவரைத் தாக்கியது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீசாலையில் இடம்பெற்றது.

மேய்ச்சலுக்காக ஆடு கட்டச் சென்ற ந.செல்லம்மா (வயது 56) என்பவரும் அவ்வழியே சென்ற நகாகேஸ்வரன் (வயது 46) என்பவருமே குளவிகளால் தாக்கப்பட்டவர்களாவர்.

குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கான இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (201- 207)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.01

நல்லூர் பிரதேச சமுர்த்தி அலுவலர்களுக்கான மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை;ர பிரதேச செயலக கேட்போர் கூடத்தில், இடம்பெற்றது.

மாவட்ட மத்தியஸ்த சபை அலுவலர் ப. சனாதனசர்மா இந்த நிகழ்வில் கருத்துரை வழங்கினார். (201- 207)

## வீதி அசுத்தமடைவதால் தொற்றுநோய் பரவும் அபாயம்

வண்ணை, ஒக்.01

யாழ்.நகரின் மையப் பகுதியின் ஓரங்கமான கந்தப்பசேகரம் வீதி குப்பை கூழங்கள் நிரம்பி வடிகால்களில் அடைப்புகள் ஏற்பட்டுத் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

யாழ்.பஸ்நிலையத்துக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் தெற்காகக் காங்கேசன்துறை வீதியால் நாதன்ஸ் சினிமா வாசல்வரை அமைந்துள்ள கந்தப்பசேகரம் வீதி ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் களஞ்சியங்களுக்கு வாகனங்களில் பொருள்களைக் கொண்டு செல்லும் பாதையாகவும் பொதுமக்களின் குடிமனைகள் அமைந்துள்ள பகுதியாகவும் அமைந்துள்ளது.

அப்பகுதியைத் தினமும் பயன்படுத்தும் வாகன சாரதிகள் மற்றும் குடியிருப்பாளர்கள் தேங்கியுள்ள குப்பை கூழங்களாலும், வடிகால்கள் தேங்கி நாற்றமெடுப்பதாலும் அசௌகரியங்களுக்கு மக்கள் ஆளாகின்றனர்.

சுகாதார அச்சுறுத்தல் காரணமாக தொற்றுநோய்க் கிருமிகள், நுளம்புகள் பெருகி நோய்த் தொற்று ஏற்படும் அபாயம் தோன்றி வருவதாகவும் அப்பகுதிக் குடியிருப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (201-160)

## கௌரி விரத பாமாலை நூல் இலவசமாக வழங்கல்

சுழிபுரம், ஒக்.01

வழக்கம்பரை முத்துமாரி அம்மாள் ஆலயத்தில் கேதார கௌரி விரத நாள்களில் வழிபாடு இடம்பெறும் வேளையில் கேதார கௌரி திருமுறைப் பாமாலை பாடி வணங்கும் அடியவர்களுக்கு இலவசமாகப் பாமாலை நூலை வழங்க ஆலய பஜனைச் சபையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த நூலைத் தபால் மூலம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் இருபது ரூபா பெறுமதியான தபால் முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையைச் செயலாளர், பஜனைச்சபை, சுழிபுரம் என்னும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (201-28)

## பொலிஸ் சேவைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.01

இலங்கை பொலிஸ் கான்ஸ்டபிள் சேவைக்கு விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினருக்கான நேர்முகப் பரீட்சை கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

நேர்முகப் பரீட்சையில் தோற்றியோருக்கான தேர்ச்சிப் பயிற்சிகள் (ஓட்டப் போட்டிகள்) சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் இந்தப் பயிற்சிகளில் கலந்து கொண்டனர். (201-207)

## பட்டம் வழங்கிக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.01

சாவகச்சேரி, பெரியமாவடி உழுத்தம்புலம் சித்தி விநாயகர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம், மண்டாலாபிஷேகம், சங்காபிஷேகம் ஆகியவற்றை நடத்திய பிரதம குரு சிவஸ்ரீ க. வீரபத்திரக் குருக்களுக்கு ஆலய பரிபாலன சபையினர் 'சிவாகம கிரியா பருதி' என்னும் பட்டத்தினை வழங்கியுள்ளனர். (203-207)

## தாலிக்கொடியை அபகரிக்க முயன்றோர் கூக்குரல் சத்தம் கேட்டுத் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.01

பிறந்தநாள் வீட்டுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பெண் ஒருவரின் தாலிக்கொடியினை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரிக்க முற்பட்டபோது அந்தப் பெண்மணி கூக்குரலிட்டபோது அவர்கள் தப்பியோடி விட்டனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சண்டிலிப்பாயில் ஆலங்குழாய் வீதியில் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் தனது உறவினர் ஒருவரின் பிறந்த நாள் விழாவுக்குச் சென்று விட்டு, நடந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் 'ஹெல்மட்' அணிந்தபடி பின்தொடர்ந்து வந்து இரு இளைஞர்கள் அவரது கழுத்தில் இருந்த தாலிக்கொடியினை அபகரிக்க எத்தனித்தபோது அப்பெண்மணி கூக்குரலிட்டுக் கொள்ள அவர்கள் தப்பியோடிவிட்டனர்.

குறிப்பிட்ட பெண்மணி மோட்டார் சைக்கிளின் பின்[illegible] தானித்த போது அது மாட்டுச்சாணம் பூசப்பட்டு மறைக்[illegible]

இவ்வீதியில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். (9)

# கடவுளின் கட்டளை

ஒவ்வொரு ஸ்டேஷனிலும் குழந்தைகள் தின்பண்டங்கள், பழங்கள் இவற்றை ஜன்னல் வழியாகக் கண்டனர். இறங்கி வாங்கித் தின்னலாகாதா? என்று ஏங்கினர். ஆனால் யாருமே, கீழே இறங்கவில்லை. தந்தை வெகுநேரம் கீழே இறங்கவில்லை. மக்களுக்கு வெறுப்புத் தட்டியது. ஒரு ஸ்டேஷனில் இறங்க முயற்சி செய்தனர். மூத்தவன் கூறினான், தந்தையின் உத்தரவின்படி, தந்தை கீழே இறங்கினாலேயல்லாமல் யாரும் இறங்க இயலாது. டிக்கட்டுகள் அவரிடம் உள்ளன. டிக்கட்டுகள் இல்லாமல் கீழே இறங்கினால் நமக்கு உபத்திரவம் நேரிடும். மற்றவர்களைக் கீழே இறங்காதபடி மூத்தவன் இவ்வாறு தடுத்தான்.

இதன் பொருள் என்ன? இறைவனே தந்தை. நாம் அனைவரும் அவரது மக்கள். வாழ்க்கையே ரயில் பயணம். இறைவன் என்ற தந்தை கூறுகிறார். உங்கள் இஷ்டப்படியெல்லாம் இறங்காதீர்கள். எனது உத்தரவுப்படி என்னை நீங்கள் பின்பற்ற வேண்டும். நான் சொல்லுமிடத்தில்தான் நீங்கள் இறங்க வேண்டும். அதுதான் அவரது உத்தரவு.

ஆனால் யாரும் அவரது உத்தரவுக்குக் கீழ்ப்படிவதில்லை. அவரவர் இஷ்டப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள். டிக்கட், தந்தையாகிய இறைவன் கையில் இருப்பதால், கீழே இறங்குவதால் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறோம். ரயில் பிரயாணங்களில் பல பெட்டிகளைக் காண்கிறோம். பல பெட்டிகளில் திருப்பி அனுப்புதல் என்று எழுதியிருக்கும். அவ்வாறு குறிப்பிட்ட நாள்களில் அந்தப் பெட்டியைத் திரும்ப அனுப்புதல் வேண்டும். நமது வாழ்க்கையும், அது போன்றதே. "திருப்பி அனுப்பு" என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் எழுதப்பட்ட திகதி நிலைய அதிகாரிக்கு மட்டுமே தெரியும். இறைவனே அந்த நிலைய அதிகாரி. திரும்பப் பெற வேண்டிய திகதி அவருக்கு மட்டுமே தெரியும். அல்லாது வேறு எவருக்கும் தெரியாது. குறித்தகாலத்தில் திரும்பப் பெற்றுக்கொள்ளும் பொறுப்பு நிலைய அதிகாரிக்கு மட்டுமே. ஆனால் நாம் அதற்குக் கவலைப்படுகிறோம் ஏன்? அறியாமையே இதற்குக் காரணம்.



## சாயி சிந்தனை

# மக்கள் மன்றம்

## அடைமழை வருவதற்கு முன் முகாம் மக்களுக்கான ஏற்பாடுகள் தான் என்ன?

*"காட்டில காற்று*
*கடுமையா அடிக்குது*
*பாட்டில் மரங்கள்*
*பாறி விழுகுது*
*வீட்டில இருக்கிற*
*மனிதருக்கென்ன?"*

யுத்த மழையில் நனைந்த வன்னி மக்களைத் தாக்க இப்போது வான் மழையும் நாள் குறிக்கின்றதோ என்ற ஏக்கம் எழுகின்றது. நலன்புரி நிலையங்களிலுள்ள UNHCR கூடாரங்கள் மாரி மழைக்குத் தாக்குப் பிடிக்குமோ? வெள்ள அச்சுறுத்தல், கடும்மழை, குளிர், காற்று, நுளம்புத்தொல்லை மலக்குழியில் நீர் நிறைதல், சுகாதாரக்கேடுகள், தொற்றுநோய்கள் என்பன முகாம்களிலுள்ள சிறுவர்கள், குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் முதியவர்கள் மற்றும் அனைவரையும் வாட்டி வதைக்குமல்லவா?

மாரிகாலத்திற்கு முன் அரச அதிகாரிகள் அமைச்சர்கள் மற்றும் ஐ.நா போன்ற தொண்டு நிறுவனங்கள் முன்னேற்பாடுகள் செய்ய முனைந்துள்ளார்களா அல்லது இடம்பெயர்க்கப்பட்ட மக்களைச் சொந்த இடங்களில் சுதந்திரமாகக் குடியேற்றி அவர்கள் தமது சொந்த மண்ணில் சொந்தக் கடலில் சொந்த வயலில் சுதந்திரமாக, அச்சமின்றி, சந்தோசமாகத் தொழில் செய்யக் கூடிய நிலை உருவாக்கப்படுமா?

குறிப்பாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் போன்ற மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்கு வசதியாக; முன்னேற்பாடாக உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றனவா? பாடசாலைகள் திருத்தப்படுகின்றனவா? கச்சேரிகள் புனரமைக்கப்படுகின்றனவா? மருத்துவமனைகள் புதுப்பிக்கப்படுகின்றனவா? வீடுகள் கட்டப்படுகின்றனவா? நூலகங்கள் அமைக்கப்படுகின்றனவா?

அரச அதிகாரிகளையும் பிரமுகர்களையும் மேளதாளங்களுடனும் மாலை மரியாதைகளுடனும் வரவேற்றால் மட்டும் போதுமா? இடம்பெயர்ந்த மக்களை அவர்கள் சொந்த இடங்களுக்கு மேள தாளங்களுடன் அழைத்துச் செல்லவேண்டாமா?

தமிழர்கட்சிகள் ஒற்றுமையுடன் செயற்பட்டு இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். தமிழ் மக்களின் மனங்களை வெல்ல அரசு உழைக்க வேண்டும், அதாவது தமிழ் மக்களைச் சொந்த இடங்களில் மீள்குடியேற்றும் மனிதாபிமான நடவடிக்கையில் மனப்பூர்வமாக அரசாங்கம் ஈடுபடவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அமைச்சர்கள் மூடிய பாதையைத் திறந்து வைக்கின்றார்கள். அவர்கள் வன்னி மக்களுக்கும் ஒரு பாதையை திறந்து வழிகாட்ட வேண்டும்.

- எஸ்.நவம், யாழ்ப்பாணம்.



வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின்கீழ் அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பனை நடுகை வேலைத் திட்டம் நடைபெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வருகை தந்த வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸுக்கு சங்கத்தின் தலைவர் எஸ்.காந்தராசா மாலை சூட்டி வரவேற்பதையும் பிரதேச செயலர் பனை விதையை நாட்டுவதையும் படத்தில் காணலாம். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அச்சுவேலி அமைப்பாளர் எம்.தர்மராசா, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.[illegible]மோகன், அச்சுவேலி தெற்கு கிராம சேவையாளர் பி.சாந்தரூபன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படங்கள்:- அச்சுவேலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிகக் கல்வியின் தொடர்ச்சி........

36. ஆயுட்காப்புறுதிக்குப் பொருந்தாத காப்புறுதித் தத்துவம்,
   1) உரிமை தத்துவம். 2) உச்ச நம்பிக்கை தத்துவம்.
   3) நட்டஈட்டுத் தத்துவம். 4) பதிலாள் வைப்புத் தத்துவம்.

37. சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்படாத அம்சம் அன்று,
   1) எதிர்பார்க்கப்படும் விற்பனை. 2) எதிர்பார்க்கப்படும் செலவு.
   3) எதிர்பார்க்கப்படும் நிதி ஒக்கீடு. 4) எதிர்பார்க்கப்படும் இலாபம்.

38. பின்வருவனவற்றுள் எது ஒரு வணிக கொடுக்கல்வாங்கல் ஒன்று,
   1) வைப்பு செய்த 2,000 ரூபா பெறுமதியான காசோலை மறுக்கப்படல்.
   2) உரிமையாளர் நிறுவனத்தில் இருந்து 6,000 ரூபா பெறுமதியான சரக்குகளை தனது சொந்த தேவைக்காக எடுத்துச் சென்றார்.
   3) நிறுவனத்திற்கு புதிய பொறி ஒன்று வாங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
   4) உரிமையாளர் 25,000 ரூபா பெறுமதியான தனது சொந்த தளபாடத்தை நிறுவனத்தில் ஈடுபடுத்தியுள்ளார்.

39. பரீட்சை மீதியொன்றில் காட்டப்பட்டுள்ள ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு ரூபா 2,000 ஆகும். கடன்பட்டோர் மீதி 50,000 ரூபா ஆகும். வணிகத்தின் கோட்பாடுகளுக்கமைய ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு கடன்பட்டோரின் 5% ஆகும். இலாப நட்டக்கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய தொகை,
   1) 2,000 ரூபா. 2) 4,500 ரூபா 3) 2,500 ரூபா 4) 500 ரூபா

40. ஐந்தொகை ஒன்றைத் தயாரிக்கும்போது அதில் குறித்த வணிகத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும் எனக்கூறி நிற்கும் கணக்கீட்டு எண்ணக்கரு,
   1) அட்டுறு எண்ணக்கரு.
   2) தொழில் முழுமைக் கூற்று எண்ணக்கரு.
   3) கிரய எண்ணக்கரு. 4) இணைதல் எண்ணக்கரு.

## வணிகக் கல்வியும் கணக்கீடும் - II 81-T-II

அறிவுறுத்தல்கள்:
* **முதலாம் வினா உட்பட பிரிவுகள் அ, ஆ ஆகியவை ஒவ்வொன்றிலிருந்தும் 2 வினாக்கள் வீதம் தெரிவுசெய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை தருக.**
* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. 01) அ. ''வணிகம்'' என்ற பதத்தின் பொருளை விளக்குக.
   ஆ. ''ஆதிகால மக்கள் தமது தேவை விருப்பங்களைப் பூர்த்தி செய்துகொள்ள சிரமங்களை எதிர்நோக்கினர்.'' இதற்கான காரணங்கள் 2 தருக.
   02) அ. ''வணிகங்கள் இல்லாது சமூக நிலைப்பாடு ஒன்று இல்லை'' எனக்கூறப்படுகிறது. இக்கருத்தை விளக்குக.
   ஆ. ''உற்பத்தி'' என்ற பதத்தை உதாரணம் காட்டி விளக்குக.
   03) அ. பிரதேச சிறப்புத் தேர்ச்சி ஏற்பட காரணமாய் அமையும் காரணிகள் 2 தருக.
   ஆ. சிற்றின சூழல் காரணிகளை ஆய்வு செய்வதன் மூலம் ஒரு நிறுவனம் 2 விடயங்களை அறிந்துகொள்ளலாம். அவை இரண்டும் எவை?
   04) அ. பலவகையான வணிகங்கள் காணப்பட்டபோதும், அவை எல்லாவற்றிற்கும் உரித்தான சில பொதுவான பண்புகள் உள்ளன. அதில் இரண்டினைக் குறிப்பிடுக.
   ஆ. பங்குடமையோடு தொடர்புடைய சட்டங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   05) கம்பனி தொடர்பாக பின்வரும் பதங்களைச் சுருக்கமாக விளக்குக.
   அ. சட்ட ஆளுமை.
   ஆ. வரையறுத்த பொறுப்பு.
   06) அ. ஒரு நிறுவனம் தனது உற்பத்திப் பொருளுக்கான விலையைத் தீர்மானிக்கும்போது கருத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயங்கள் இரண்டினைத் தருக.
   ஆ. நிதித்திட்டத்தில் உள்ளடக்கப்படும் இரு அம்சங்களையும் குறிப்பிடுக.
   07) அ. கொள்ளல் கொடுத்தல் கணக்கிற்கும், வருமானச் செலவு கணக்கிற்கும் இடையிலான இரு வேறுபாடுகளைத் தருக.
   ஆ. நடைமுறைச் சொத்துக்களின் பண்புகள் இரண்டு தருக.
   08) அ. பொதுத்தினசேரியை தயாரிக்க பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
   ஆ. ''வெளிக்காட்டும் வழு'' என்றால் என்ன? உதாரணம் தருக.
   09) அ. ''எல்லா வருமானங்களும் பெறுவனவுகள் அல்ல'' இக்கருத்தை விளக்குக.
   ஆ. பெறுமானத்தேய்வில் தாக்கத்தை ஏற்படுத்தும் பொருளாதாரக் காரணிகள் இரண்டு தருக.
   10) அ. காசேட்டின் கழிவு நிரல்கள் ஏன் சமப்படுத்தப்படுவதில்லை?
   ஆ. பின்வருவனவற்றுக்கான மூல ஆவணங்களைக் குறிப்பிடுக.
   a) காசோலை வழங்கல்.
   b) காசோலை மறுக்கப்படல்.

### பகுதி - 11 ''அ'' - வணிகக்கல்வி

(விரும்பிய இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக)

02. 1) அ. பின்வரும் வணிகங்கள் பதிவு செய்யப்படும் சட்டங்களைக் குறிப்பிடுக.
   a) தனியாள் வணிகம்
   b) கம்பனி.
   ஆ. கம்பனி ஒன்றை பதிவுசெய்ய கம்பனி பதிவாளருக்குச் சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் 2 தருக.
   2) பின்வரும் வணிகங்கள் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய இடங்களைத் தருக.
   a) தொழிற்சாலைகள். b) முகவர் தபால் நிலையம்.
   c) அச்சகம். d) பேக்கரி
   3) அ. ''வணிக எண்ணம்'' என்றால் என்ன?
   ஆ. வணிக எண்ணம் எவ்வாறு வணிக திட்டத்துடன் தொடர்புபடும்?
   4) அ. கிரயத்திட்டம் தயாரிப்பதன் நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   ஆ. மூலக்கிரயத்தை, மேந்தலைக் கிரயத்திலிருந்து வேறுபிரித்துக் காட்டுக.
   5) பின்வருவன தொடர்பாக சிறுகுறிப்பு எழுதுக.
   அ. காசுப்பாய்ச்சல் கூற்று. ஆ. வருமானக் கூற்று.

03. 1) நடைமுறைக் கணக்கைப் பேணுவதால் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக் கூடிய அனுகூலங்கள் நான்கு தருக.
   2) அ. காசோலை என்றால் என்ன?
   ஆ. ''காசோலையானது பணக்கொடுப்பனவை உறுதிப்படுத்தும்'' இக்கூற்றை உதாரணம் மூலம் விளக்குக.
   3) அ. காசோலையில் ''குறுக்குக் கோடிடல்'' என்றால் என்ன?
   ஆ. குறுக்குக் கோடிடல் வகைகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.
   4) அ. ''கடனட்டை'' மூலம் வியாபாரி ஒருவர் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் இரண்டு தருக.
   ஆ. கடனட்டைக்கும் வரவட்டைக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.
   5) அ. வணிக வங்கியல்லாத நிதி நிறுவனங்களை இரு வகைப்படுத்தலாம். அவை எவையென்று குறிப்பிட்டு உதாரணம் தருக.
   ஆ. போக்குவரத்தின் அடிப்படை அம்சங்களைத் தருக.

04. 1) அ. ''ஒரு நபரோ அல்லது பலரோ பொறுப்பேற்க வேண்டிய நட்டத்தை அதிகமான பிரிவினருக்கிடையே பகிர்ந்துகொள்ளல் காப்புறுதியாகும்'' இக்கூற்றை விளக்குக.
   ஆ. இலங்கையில் ''காப்புறுதி சபையின்'' பணிகள் 2 தருக.
   2) அ. தொடர்பாடல் செயற்பாட்டை பாய்ச்சல் கோட்டு படத்தில் காட்டுக.
   ஆ. வணிகத்துக்கு தொடர்பாடல் துணைபுரியும் விதத்தை சுருக்கமாக விளக்குக.
   3) அ. ஒரு நிறுவனம் பங்கு வழங்குவதன் மூலம் நிதி திரட்டுவதால், அந்நிறுவனத்திற்கு கிடைக்கும் அனுகூலங்கள் 2 தருக.
   ஆ. வங்கிக்கடனைப் பெறும்போது ஒரு வியாபாரி கவனம் செலுத்தவேண்டிய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   4) அ. ''முதலீட்டு மூலம்'' ஒன்றை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய மிக முக்கிய காரணிகள் இரண்டைத் தருக.
   ஆ. காணி கட்டடம், தங்க ஆபரணங்கள் போன்றவற்றில் முதலிடும் ஒருவருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   5) பின்வரும் சோடிப்பதங்களின் வேறுபாட்டைத் தருக.
   அ. சாதாரண பங்கும் முன்னுரிமை பங்கும்.
   ஆ. பணச்சந்தையும் மூலதனச் சந்தையும்.

### பகுதி - 2 ''ஆ'' கணக்கீடு

(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக)

05. 1) பின்வரும் எண்ணக்கருக்களைச் சுருக்கமாக விளக்குக.
   அ. அலகுசார் எண்ணக்கரு.
   ஆ. பண அளவீட்டு எண்ணக்கரு.
   2) ''கிளார்க்'' நிறுவனத்தின் கணக்குப் பதிவாளர் கணக்குப் பதவியலில் போதிய பயிற்சியின்மையால் பிழைவிட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இப்பிழையானது பரீட்சை முதலின் வரவு நிரலை 5,000/=இனால் குறைத்துக் காட்டியது. இத்தொகை தொங்கல் கணக்கு ஒன்றினூடாக சீர்செய்யப்பட்டது. அதன் பின்னர் பின்வரும் வழுக்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டன.
   அ. தளபாட திருத்தச் செலவானது 2,000/= தளபாட கணக்கில் பதியப்பட்டு இருந்தது.
   ஆ. மின்சார கணக்கு மீதியானது 500/= பரீட்சை மீதியின் செலவு நிரலில் பதியப்பட்டிருந்தது.
   இ. கொள்வனவு நாளேட்டின் கூட்டுத்தொகையானது 2,000/= இனால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.
   ஈ. கொடுத்த சம்பளம் 6,000/= அதற்குரிய கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.
   வேண்டப்படுபவை:
   1. திருத்த நாட்குறிப்பு பதிவுகள். 2. தொங்கல் கணக்கு.

06. 1) காசேட்டின் இரட்டை தொழிற்பாட்டை விளக்குக.
   2) இரட்டை பதிவு முறை என்றால் என்ன?
   3) 2008ஆம் ஆண்டுக்கான ''லக்ஸ்மனின்'' காசேடும், வங்கிக்கூற்றும் வருமாறு:-

லக்ஸ்மனின் ஜனவரி மாத காசேடு 2008

| திகதி | விவரம் | வங்கி | திகதி | விவரம் | வங்கி |
|---|---|---|---|---|---|
| 08.01.01 | மீதி/வ | 24,500 | 08.01.03 | வாடகை - 257242 | 4,000 |
| 08.01.05 | சர்வான் - 753421 | 7,600 | 08.01.07 | மின்சாரம் - 257243 | 1,500 |
| 08.01.10 | சந்தர்போல் - 236269 | 3,500 | 08.01.10 | சுரேஸ் - 257244 | 4,500 |
| 08.01.17 | திலக்கரட்ன - 673721 | 7,800 | 08.01.17 | ரமேஸ் - 257245 | 2,500 |
| 08.01.28 | அக்ரம் - 263251 | 3,800 | 08.01.26 | சம்பளம் - 257246 | 5,000 |
| 08.01.29 | சனத் - 623753 | 6,000 | 08.01.28 | பண்டார - 257247 | 4,000 |
| | | | 08.01.31 | மீதி/ சென்றது | 31,700 |
| | | 53,200 | | | 53,200 |

லக்ஸ்மனின் ஜனவரி மாத வங்கிக்கூற்று 2008

| திகதி | விவரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 08.01.01 | மீதி/வ | | | 24,500 |
| 08.01.07 | காசோலை இல - 257242 | 4,000 | | 20,500 |
| 08.01.08 | வைப்பு - 753421 | | 7,600 | 28,100 |
| 08.01.12 | வைப்பு - 236269 | | 3,500 | 31,600 |
| 08.01.13 | காசோலை இல - 257243 | 1,500 | | 30,100 |
| 08.01.15 | காசோலை இல - 257244 | 5,400 | | 24,700 |
| 08.01.22 | வைப்பு - 673721 | | 7,800 | 32,500 |
| 08.01.23 | காசோலை புத்தகம் | 150 | | 32,350 |
| 08.01.24 | காப்பறுதி | 2,000 | | 30,350 |
| 08.01.25 | காசோலை இல - 257245 | 2,500 | | 27,850 |
| 08.01.30 | முதலீட்டு இலாபம் - ABC | | 4,000 | 31,850 |

வேண்டப்படுபவை:-
அ. சீராக்கங்களுடனான காசேடு.
ஆ. காசேடை சீராக்கம் செய்த பின்னர் வங்கி கணக்கிணக்கக் கூற்று.

07. 2008 - டிசம்பர் 31இல் ''விட்டோரி'' வியாபாரத்தின் பரீட்சைமீதி வருமாறு:-

| | | |
|---|---|---|
| கொள்வனவும் விற்பனவும் | 150,000 | 220,000 |
| கடன்பட்டோனும் கடன்கொடுத்தோனும் | 60,000 | 45,000 |
| உட்திரும்பல் | 3,000 | |
| காப்புறுதி | 7,000 | |
| பொதி செய்செலவு | 6,000 | |
| முதலீட்டு வருமானம் | | 6,000 |
| காணி - கட்டடம் | 200,000 | |
| தளபாடம் - கிரயத்தில் | 25,000 | |
| 01.01.2008இல் சரக்கிருப்பு | 30,000 | |
| விளம்பரம் | 7,000 | |
| சம்பளம் | 12,000 | |
| கூலிகள் | 8,000 | |
| 10% வங்கிக்கடன் | | 40,000 |
| 20% முதலீடுகள் - 01.04.2008 | 60,000 | |
| பெற்ற வாடகை | | 9,000 |
| மூலதனம் | | 270,000 |
| காசு மீதி | 38,000 | |
| வங்கி மேலதிக பற்று | | 19,000 |
| மின்சாரம் | 8,000 | |
| பெறுமானத்தேய்வு ஏற்பாடு - 01.01.2008 தளபாடம் | | 5,000 |
| | 614,000 | 614,000 |

மேலதிக தகவல்கள்:-
1) 2008.12.31 இல் இருந்தபடி சரக்கிருப்பு 50,000/=
2) தளபாடத்திற்கு கிரயத்தில் ஆண்டுக்கு 5% தேய்விடுக.
3) முற்பணமாக செலுத்தப்பட்ட மின்சார கட்டணம் 1,000/=
4) முதலீட்டு வருமாணம், வங்கிக்கடன் வட்டி என்பன சீராக்கம் செய்யப்படவேண்டும்.

வேண்டப்படுபவை:-
அ. 2008 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக் கணக்கு.
ஆ. 2008 - டிசம்பர் 31இல் உள்ளவாறான ஐந்தொகை.

-நிறைவுற்றது-

ஆசிரியர் : திரு.S.ஜோன்கிங்ஸ்லி,
கம்பளை இந்துக் கல்லூரி, கண்டி.
077-6015386



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் கைது விவகாரத்தினால் இந்திய-இலங்கை உறவில் பாதிப்பு

## ஏற்படும் என்கிறார் இலங்கை அமைச்சர் பெரேரா

கொழும்பு, செப். 30

கடல் எல்லையை மீறினார்கள் என்பதற்காக இலங்கை, இந்திய மீனவர்கள் பரஸ்பரம் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படுகின்றமை தொடர்ந்தால் இரு நாடுகளுக்கும் மத்தியிலான உறவுகள் மோசமாகப் பாதிக்கப்படலாம் என இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா எச்சரித்துள்ளார்.

இவ்வாறான சூழ்நிலை உருவாகுவதற்கு முன்னர் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இவ்விடயத்தை ஒட்டி அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடல் எல்லைகளை மீறியமைக்காக இந்திய, இலங்கை மீனவர்கள் கைது செய்யப்படுவதும், தடுத்து வைக்கப்படுவதும் தொடர்வதால் இரு நாடுகளுக்கும் மத்தியிலான பதற்ற நிலை மேலும் தீவிரமடையலாம்.

இரு நாடுகளும் பழிவாங்குவதற்காக இவ்வாறு மாறிமாறி மீனவர்களைக் கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தலில் ஈடுபடுவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

மேலும், இந்தப் பிரச்சினைக்கான தீர்வு எதுவும் எமக்குத் தென்படவில்லை.

இதன் காரணமாக எதிர்காலத்தில் இந்திய - இலங்கை உறவுகள் மீது கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம்.

இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர். நாங்கள் அவர்களை விடுவிக்கிறோம். பின்னர் மீண்டும் அவர்கள் கைதுசெய்யப்படுகின்றனர்.

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மிகக் கடினமானவையாக உள்ளன.

இலங்கை மீனவர்களை இந்தியாவில் விடுவிப்பதற்கு நீண்ட காலம் எடுக்கின்றது.

இந்திய எல்லைக்காவல் படையினரால் கைது செய்யப்படும் இலங்கை மீனவர்கள், தமிழ்நாடு சிறைச்சாலைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். தமிழ்நாடு அரசு அவர்களை விடுவிக்க முன்வந்தாலும் இறுதி முடிவை இந்திய மத்திய அரசே எடுக்கவேண்டும்.

மேலும் இந்த மீனவர்களை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான நிதியுதவியும் அவசியம்.

கடந்த ஒரு வருட காலப் பகுதியில் மாத்திரம் மீனவர்களை அழைத்து வருவதற்கான விமானக்கட்டணமாக 23 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மேலும் கைதான மீனவர்களின் படகுகளை மீட்டுவருவதும் நீண்ட நடைமுறையாகவுள்ளது. - என அவர் தெரிவித்துள்ளார்.

# ஈழ அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை; வெகுவிரைவில் அமுல்படுத்த வேண்டும்

## பழ.நெடுமாறன், கம்யூ. பாண்டியன் வலியுறுத்து



சென்னை, செப். 30

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இங்கு நிரந்தரமாக தங்கும் உரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற தி.மு.க.வின் தீர்மானத்தை விரைவில் அமுல்படுத்த வேண்டும் - என்று பல்வேறு கட்சிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தி.மு.கவின் முப்பெரும் விழாவில், 'தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் இங்கேயே நிரந்தரமாக தங்குவதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்துக்குமான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்து தர வேண்டும்' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் குறித்து பிற இயக்கங்களிலிருந்து வந்துள்ள கருத்துகள் வருமாறு -

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் -

இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவில் நிரந்தரமாக தங்குவதற்கான உரிமை வழங்கப்பட வேண்டும் என்பது 25 ஆண்டு கால கோரிக்கையாகும். அக்கோரிக்கைக்காக தி.மு.க. இப்போதுதான் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தீர்மானத்தோடு விட்டுவிடாமல், அத்தீர்மானத்தை உடனடியாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தி.மு.க. அரசு மேற்கொள்ள வேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் -

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தமிழகத்தில் நிரந்தரமாக தங்கும் உரிமை வழங்க வேண்டும் என பல்வேறு அமைப்புகள், பல ஆண்டுகளாக கோரி வருகின்றன. இந்தக் கோரிக்கையை பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே அமுல்படுத்தியிருக்க வேண்டும் - என்றார்.

# மக்களுக்குப் பயனளிக்காத கச்சதீவு ஒப்பந்தம் எதற்கு?

## தூக்கி வீசுங்களென டில்லியில் விஜயகாந்த் ஆவேசம்

கச்சதீவு ஒப்பந்தத்தால் மக்களுக்குப் பயன் ஏற்படவில்லை என்றால் அந்த ஒப்பந்தம் எதற்கு. அதை தூக்கி வீச வேண்டியதுதானே. - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் ஆவேசமாக கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும், தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தி வருகிறது என்றும், இதனை மத்திய, மாநில அரசுகள் கண்டு கொள்ளாமல் இருக்கின்றன என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் இலங்கைக் கடற்படையை கண்டித்தும், இதற்கு நிரந்தர தீர்வு காண மத்திய அரசை வலியுறுத்தியும் விஜயகாந்த் தலைமையில் புதுடில்லியில் நேற்றுமுன்தினம் நடந்தது.

அதில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு பேசினார்.

எம்.பிக்கள் டில்லியில் கூட்டம் போட்டு பிரதமரிடம் மனுக் கொடுக்கிறோம் என்கிறார்கள். அங்கே தமிழகத்தில் முதலமைச்சர் மீனவர் பிரச்சினைக்காக பிரதமருக்கு கடிதம் எழுதுகிறேன் என்கிறார்; பிரதமரும் நான் முதல்வருக்கு கடிதம் எழுதுகிறேன் என்கிறார்.

இதுதான் தொடர்ந்து நடந்து வருகிறது. - என்றார்.

---

# யா/சில்லாலை றோ.க.த.க. பாடசாலையின் இதய அஞ்சலிகள்



எமது மதிப்புக்குரிய வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புத்திரன்

**செல்வன் சுதர்ஸனின்**

பிரிவு குறித்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

யா/சில்லாலை றோ.க.த.க. பாடசாலை, பண்டத்தரிப்பு.

(89345)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# துயர் பகிர்கின்றோம்

வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அவர்களின் புதல்வன்

**அமரர் விக்னேஸ்வரன் சுதர்ஸன்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதோடு, அன்னாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

(89409)

# கண்ணீர்ப் பூக்கள்



எமது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அவர்களின் கனிஸ்ட புதல்வன்

**செல்வன் சுதர்ஸனின்**

அகாலமரணச் செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

யா/ கீரிமலை நகுலேஸ்வர ம.வி, சண்டிலிப்பாய்.

பாடசாலைச் சமூகம்.

(89340)

---

# ஜி.எஸ்.பி...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அழுத்தங்களை ஏற்படுத்தும் தேசிய ரீதியான பிரச்சினையானது ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நிவாரணமாகும்.

வவுனியா தடுப்பு முகாம்களில் இருக்கின்ற மக்கள் தொடர்பான அரசின் திட்டம் குறித்து விரிவாக விளக்கிய அமைச்சர், தீர்க்கமான பல விடயங்களைத் தவறவிட்டிருந்தார். அதில் முக்கியமானது கடந்த மே 26ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கை தொடர்பான விசேட கூட்டத்தொடரில் வழங்கிய உறுதிமொழியாகும். முகாமில் வைக்கப்பட்டுள்ள மக்கள் 180 நாள்களுக்குள் மீளக்குடியமர்த்தப்படுவர் என அரசு உறுதியளித்திருந்தது.

இந்த நாட்கள் குறித்து இம்முறை முழுமையாக அரசு மறந்துபோயிருந்தது. அதேவேளை, மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் தயான் ஜயதிலக்க அரசியல் தீர்வு குறித்து தொடர்ந்தும் கூறிவந்தார். எனினும் இம்முறை இலங்கை அரசு இதுகுறித்து எந்த வார்த்தையையும் குறிப்பிடவில்லை. அத்துடன், ஜனாதிபதிக்கும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய, யுத்த காலத்தில் அனைத்துத் தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் தொடர்பாக ஆராயும் கட்டமைப்பு தொடர்பாகவும் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் முன் வழங்கிய உறுதிமொழிகள், இலங்கை அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கும் உறுதிமொழிகள் போன்று காற்றில் பறக்கவிடப்படுமா என்பதே இன்றுள்ள கேள்வியாகும். ★

'நன்றி: தமிழ் குளோபல்'

---

# கண்ணீர் அஞ்சலி

**அமரர் விக்னேஸ்வரன் சுதர்ஸன்**

கண்மணியே கற்கண்டே கல்விக்கதிபதி என்ற
பொன் மணியே விஞ்ஞான மாணவனே - மண்ணின்று
மதிகேடாய் போனீயோ விதியுனை அழைத்ததுவோ
ஆகடியம்! ஆகடியம்!! ஆ.!

ஆறாத் துயருற்றிருக்கும் தாய், தந்தை சகோதரர்களுக்கும் உற்றார், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்துக் கூத்தனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஒய்வு பெற்ற அதிபர்கள்,
காரைநகர்.

(89413)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 04 ★ 09 ★ 1924 | 02 ★ 09 ★ 2009 |

மாவிட்டபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி தம்பிமுத்து இரத்தினம்மா**

அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியை இன்று (01.10.2009) வியாழக்கிழமை உடுப்பிட்டியில் வசிக்கும் மகள் திருமதி தவநாயகி நவரட்ணம் அவர்களின் இல்லத்தில் காலை 6 மணி தொடக்கம் 10 மணிவரை திரியோதசி திதியில் நடைபெற இருப்பதால் மேற்படி கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி அனைவரையும் வேண்டுகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மகன் -தம்பிமுத்து மன்மதராஜா (சுவிஸ்)
மகள் - தங்கநாயகி (தங்கப்போன்-ஜேர்மனி)
மகள் - அகிலா (சிலை-பிரான்ஸ்)
மகன் - ஜெயசோதிராஜா (ஜேர்மனி)
பேரன் - ந.அருந்தவராசா (பிரான்ஸ்)
மகன் - விஜயராசா (லண்டன்)
மகன் - ரவீந்திரராசா (லண்டன்)
மகன் - குகராசா (சண்டிலிப்பாய்)
நவரட்ணம் ராகுலன் (கொழும்பு)
நவரட்ணம் கௌதமன் (இந்தியா)
மருமகன் நவரட்ணம்

உடுப்பிட்டி.

(சி/561120)

# ஆறாம் ஆண்டு நினைவுப் பூக்கள்

**அமரர் கிறிஸ்ரியன் ஸ்ரனிஸ் ஜெயகானந்தன் (B.A)**



| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 06★09★1974 | 01★10★2003 |

அன்னைக்குத் தலைமகனாய், தாதைக்கு தோழனுமாய்
ஆசைச் சோதரிக்கு அன்பான அண்ணனுமாய்
ஐயா நம் மனைதனையே அகலாது சுற்றி வந்தீர்
பொய்யான வாழ்விதென்று மெய்தேடிப் போனீரோ?
பூமிக்குள் பூகம்பம் சில தினங்கள், எம்
ஏகாந்த துயரவெள்ளம் யுகம்யுகமாய்
சாமிக்குள் கலந்த ஐயா எம் ஜெயகானந்தா!
சாந்திகொள்வாய்! சாந்திகொள்வாய்!! சாந்திகொள்வாய்!!!

சென்.ஆன்ஸ் ஒழுங்கை,
பாண்டியன்தாழ்வு.

உன்பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் சமுதாயத்தினரை ஆரோக்கியமான எதிர்காலச் சந்ததியாக உருவாக்க உழைப்போம்

சிறுவர்களின் உள உலகு மிகவும் விசாலமானது. அவ்வுலகத்தினுள் அவர்கள் சுதந்திரமாகச் சிறகடித்து வாழ எத்தனிப்பார்கள். அந்த வாழ்வுக்குள் அவர்களின் தேடல்கள் மிகவும் அழகானவையும் மகிழ்ச்சிகரமானவையும் ஆகும். ஆயினும், அவர்கள் வாழும் உலகுக்குள் அவர்கள் மீது சுமைகளும் சுரண்டல்களும், நெருக்குதல்களும் திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. யுத்தத்தால் அவர்களுக்குள் விதைக்கப்பட்ட வடுக்கள் அவர்களின் வாழ்வையே கேள்விக் குறியாக்கியுள்ளன.

இந்நிலையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அவர்கள் வாழும் சூழலின் நிலைமைகள் சிநேக பூர்வமானதாகவும், சுதந்திரமானவையாகவும் சுகாதாரமானவையாகவும் இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

வளர்ந்து வரும் உலக மாறுதல்களுக்கு அமைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே நிர்வகித்துக் கொள்வதற்கும், மனப்பாங்கு ரீதியிலான நல்ல மாற்றங்களில் தேர்ச்சியடைவதற்கும் கல்வியறிவுடையவராக இருப்பது அவசியமாகின்றது. இதற்காக பெற்றோர்களும் பெரியோர்களும் தமது தரப்புக் கடமை குறித்து ஆழமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டிய பணிகளில் முழுமையாக ஈடுபடவேண்டிய நிலை காணப்படுகிறது.

குடும்பத்தில் பிள்ளைகளின் வளர்ப்பு முறையே அவர்களின் உடல் உள ஆரோக்கியத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அத்துடன் அவர்களது ஆளுமைப் பண்பு என்பது அவர்கள் சிறுவயதில் இருந்து பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்களின் தொகுப்பின் வெளிப்பாடுகளாகவும் அமைகின்றன.

பிள்ளைகள் தமது கலாசாரத்தைப் பற்றியும் ஒழுக்க விழுமியங்கள் பற்றியும் அறிவதுடன், அவற்றைப் பின்பற்றும் முறை பற்றியும் அறிந்து கொள்ள நாம் உதவுவதுடன், அவற்றில் நேர்த்தியான பயிற்சியும் பெற அவர்களை வழிப்படுத்த வேண்டும். இவற்றைப் பிள்ளைகள் தமது தாய்மொழியினூடாகப் பெறும்போது அவர்களின் மனிதவியல் தேர்ச்சிப் பெறுமானம் அதிகமாகின்றது.

இன்று நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உலகம் ஒரு கிராமமாக மாறிவிட்டது. இதன் விளைவால் பல நன்மைகள் காணப்படினும், பல்வேறு ஊடகங்களின் செல்வாக்குகள் காரணமாக மாணவர்கள் மத்தியில் விரும்பத்தகாத பண்புகள் இழையோடிப் பரவி வருகின்றன என்பதை உணரமுடிகின்றது. சினிமாக்களின் அனுபவங்களும் அவற்றினால் ஏற்படுத்தப்படும் தூண்டல்களும் மாணவர்களின் முடிவெடுத்தல் தன்மையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வருவது சமுதாயத்தின் வளர்ச்சியில் ஆரோக்கியமாக அமையாது.

எவ்வாறு மாணவர்களை இப்பொறிகளுக்குள் விழாமல் தடுக்க முடியும்? என்பதைப்பற்றி சிந்தித்து வேகமாகவும் விவேகமாகவும் செயற்படுவது பெரியோர்களின் கடமையாகவுள்ளதுடன் பிள்ளைகளின் மனவளர்ச்சிப் பாதை நன்நிலையில் பயணிப்பதற்கும், சவால்களைத் தெளிவாக எதிர்கொள்வதற்கும் அவர்களுக்கு நாம் வழிகாட்டவேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிள்ளைகளினதும் தனித்துவத்தினை அங்கீகரித்து அவர்களது ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிக்கொணர உதவுவதுடன், அவர்களது மன ஓசைகளுக்கு நன்கு செவிகொடுத்தும் நற்சமுதாய உருவாக்கத்திற்குக் கைகொடுத்தும் உதவுதல் எமது எதிர்கால சமுதாயம் ஆரோக்கியமான சமுதாயமாக அமைவதற்கு வழி வகுப்பதாய் அமையும்.

**வை.சசிகுமார்**, ஆசிரியர்,
கைதடி முத்துக்குமாரசுவாமி
மகா வித்தியாலயம்.

********************

**இன்று (ஒக்ரோபர் 01) சர்வதேச சிறுவர், முதியோர் தினமாகும். அதனையொட்டி இவ் ஆக்கங்கள் இங்கு பிரசுரமாகின்றன**

# ஆதரவற்ற முதியோர் மீது அக்கறை காட்டுதல் ஒட்டுமொத்த சமூகத்தின் கடமைகளில் ஒன்றே

ஒரு வருடத்தின் ஒக்ரோபர் முதலாம் திகதி சர்வதேச முதியோர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. ஆரம்பத்தில் ஐ.நா. சமவாயத்தால் ஒக்ரோபர் முதலாம் திகதி சிறுவர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டபோதிலும் பின்னர் அத்தினம் முதியோர் தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் ஒக்ரோபர் முதலாம் திகதி சிறுவர் மற்றும் முதியோர் தினமாகக் கடைக்கொள்ளப்பட்டு வருகின்றது.

எம்மைப் பெற்று, வளர்த்தெடுத்து சமூகத்தில் நற்பிரசைகளாக வாழும் வகையில் ஆளாக்கி வைப்பவர்கள் எமது பெற்றோர்களே. அவர்கள் தமது முதுமைக்காலத்தை தமது பிள்ளைகளுடன் நிம்மதியாகவும் மிகிழ்ச்சியாகவும் கழிக்கவே விரும்புவார்கள். ஆனால், இன்றைய காலகட்டத்தில் அத்தகைய பெற்றோரில் பலர் சூழ்நிலை காரணமாகப் பிள்ளைகளால் கைவிடப்பட்ட - கைவிடப்படுகின்ற நிலையை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு பிள்ளைகளால் கைவிடப்படுகின்ற பெற்றோர் மற்றும் அநாதரவான முதியோர்களுக்கு ஆதரவளித்து பராமரிக்கும் கைங்கரியத்தை முதியோர் இல்லங்கள் நிறைவேற்றி வருகின்றன.

அந்த வகையில், இலங்கையில் பல முதியோர் இல்லங்கள் காணப்படுகின்ற போதிலும் அரச நிர்வாகத்தின் கீழ் அநுராதபுரம், மீரிகம, கைதடி ஆகிய இடங்களில் முதியோர் இல்லங்கள் அரசினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர தொண்டு ஸ்தாபனங்கள் மற்றும் மத ஸ்தாபனங்கள் சில முதியோரைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் தொண்டு அடிப்படையில் முதியோர் இல்லங்களை நடத்தியும் வருகின்றன.

அந்த வகையில் 1954 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவினால் கைதடியில் திறந்து வைக்கப்பட்ட முதியோர் இல்லத்தில் [சாந்தி நிலையம்] யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த முதியோர்கள் தங்க வைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

சந்திப்பு:தருப்பகன்

எமது சமூகத்தில் பிள்ளைகளிருந்தும் அவர்களது பராமரிப்பில் தங்கி வாழ இயலாத- மற்றும் பிள்ளைகளாலேயே புறமொதுக்கப்படுகின்ற மற்றும் ஏதோ வகையில் அநாதரவான நிலையில் வாழ நேர்ந்துள்ள முதியவர்கள் குறித்த கரிசனையையும் விழிப்புணர்ச்சியையும் எமது சமூகத்தின் மத்தியில் குறிப்பாக எமது இளம் சமூகத்தினர் மத்தியில் ஏற்படுத்த அவர்களை முதியோர்கள் குறித்து ஒரு கணம் சிந்திக்க வைத்து இன்றைய முதியோர் தினம் ஒரு வாய்ப்பை வழங்குகின்றது. எனவே இவ்விடயம் தொடர்பாகக் கைதடியில் இயங்கிவரும் முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் என். இராஜலிங்கம் அவர்களது கருத்தைக் கேட்டறிந்து அதனை வாசகர்களுக்கு வழங்குவது பொருத்தமாக இருக்குமென எண்ணினோம். எமது வினாக்களுக்கு அவர் வழங்கிய பதில்கள் பேட்டி ரூபத்தில் கீழே தரப்படுகின்றன:

**கேள்வி:** முதியவர்கள் வீடுகளிலிருந்து வெளியேறி முதியோர் இல்லங்களை நாடி வருவதற்கான காரணங்கள் எவை?

**பதில்:** அவர்களுக்கு அங்கு அன்பு, அரவணைப்பு கிடைக்கப் பெறாமையே இதற்குப் பிரதான காரணம்.

அத்தோடு கணவன் மனைவியரிடையே ஏற்படும் பிணக்கு, பிள்ளைகளினால் வெறுக்கப்படுதல், தாயும் பிள்ளைகளும் சேர்ந்து தந்தையைப் புறக்கணித்தல், தந்தையும் பிள்ளைகளும் சேர்ந்து தாயைப் புறக்கணித்தல், மருமக்களினால் ஒதுக்கப்படுதல்.

பிள்ளைகளுக்குச் சிறுவயதிலிருந்தே பெற்றோர்கள் மீது நாட்டமின்மை - பாசமின்மை - நெருக்கமாக உறவாடும் வாய்ப்பு அற்றுப் போதல் போன்ற காரணங்களும் மற்றும் பொருளாதார வறுமைநிலை, இடப்பெயர்வு, இருப்பிட வசதியின்மை போன்றவற்றால் அநாதரவு நிலைக்கு உட்படல் மற்றும் அவர்களது பிள்ளைகள் வெளிநாட்டில் இருப்பதனால் அவர்களைப் பராமரிக்க யாருமில்லாத நிலை, உணவு வசதி கிட்டாமை போன்ற பல காரணங்களால் முதியோர்கள் முதியோர் இல்லங்களை நாடி வருகின்றனர்.

அத்தோடுபிள்ளைகளின் அன்பு, அரவணைப்பு அக்கறை என்பவை கிடைக்கப்பெறாத பெற்றோர்கள் மனநிலை விரக்தியுற்றவர்களாக மாறுகின்றனர். சில முதியோர்கள் பிள்ளைகளின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இயங்க விரும்பாத - தமது சுதந்திரம் இழக்கப்படுவதாகக் கருதும் நிலை என்பவை காரணமாக மனத்தாக்கம் மற்றும் 'நாம் எதற்காகப் பிள்ளைகளுக்குப் பாரமாக இருக்க வேண்டும்' என்ற பச்சாதாப கழிவிரக்க உணர்வு என்பவை முதியோர்களை முதியோர் இல்லங்களை நாடிச் செல்லத் தூண்டுகிறது.

அத்துடன் நோய்வாய்ப்படும் முதியவரொருவர் நெருங்கிய உறவினரல்லாத தூரத்து உறவினர்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நோய் குணமடைந்தபின்னர் யாரும் அவரை அழைத்துச் சென்று பராமரிக்க விரும்பாது தவிர்க்கும் நிலையில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் அவர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பி வைக்கின்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

**கே:** முதியோர்களை பிள்ளைகளோ அல்லது வேறு எவரோதான் கூட்டிவந்து முதியோர் இல்லத்தில் அனுமதிக்கிறார்களா?

**ப:** அநேகமானவர்களை அவர்களது உறவினர்கள் கூட்டிவந்து விடுகின்றனர். ஒரு சிலர் மாத்திரம் உறவினர்களுடன் தொடர்ந்து இருக்க விருப்பமின்றித் தாமாகவே இங்கு வந்து சேர்ந்துகொள்கின்றனர்.

**கே:** அவ்விதம் முதியோர் இல்லத்தில் ஒருவரைச் சேர்ப்பதில் எத்தகைய நடைமுறை பின்பற்றப்படுகிறது.

**ப:** இங்கு தங்கி வசிக்க அனுமதி பெற விரும்பும் ஒரு முதியவரோ முதாட்டியோ 60 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். அவர்கள் இங்கு தங்குவதற்குரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி தத்தம் பிரிவு கிராம சேவை அலுவலர் மூலம் உறுதிப்படுத்திக்கொண்டுவரப்படல் வேண்டும்.

அத்துடன் அவர், தானே தனது அன்றாட அவசிய கருமங்களை ஆற்றக்கூடியவராகவும் மனநிலை பாதிக்கப்படாதவராகவும் தொற்று நோயெதனாலும் பீடிக்கப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**கே:** தற்போது கைதடி முதியோர் இல்லத்தில் எத்தனை முதியவர்கள் தங்கி வாழ்ந்து வருகின்றனர்? அவர்களை அவர்களது உறவினர்களெவரும் சந்தித்துச் செல்வதுண்டா?

**ப:** தற்போது 186 முதியோர்கள் இங்கு உள்ளனர். அவர்களில் 108 ஆண்களும் 78 பெண்களும் அடங்குகின்றனர்.

அவர்களில் பலரை அவர்களது உறவினர்கள் வந்து பார்த்துச் செல்கின்றார்கள். அதுவுமின்றி மூன்று மாதத்திற்கு ஒரு தடவை முதியவர்கள் விரும்பினால் தமது பிள்ளைகளிடமோ அல்லது உறவினர்களிடமோ சென்று ஓரிருநாள் தங்கிவிட்டுத் திருப்பிவர அனுமதிக்கப்படுகின்றனர். சிலவேளைகளில் விசேட தேவையின் பொருட்டும், வெளியே சென்று வர அனுமதிக்கப்படுகின்றனர்.

**கே:** இங்கு தங்கி வாழும் அம் முதியோர்கள் எத்தகைய மன உணர்வுடன் வாழ்ந்து வருகின்றனர்.

**ப:** அன்பால் எதனையும் சாதிக்கலாம். அடக்குமுறையால் முடியாது. இங்கு வருபவர்களில் சிலர் கோபப்படும் சுபாவம் கொண்டவர்களாக இருப்பர். சிலர் அமைதியான சுபாவம் கொண்டவர்களாக இருப்பர், சிலர் இலேசில் கதைக்க விரும்பாதவர்களாக இருப்பர். சிலர் எதற்கெடுத்தாலும் சண்டித்தனப் போக்கில் செயற்படுபவராகக் கதைப்பவராக இருப்பர். அவர்கள் எல்லோரையும் ஒவ்வொரு வகையில் அணுகி அவர்களது உள்ளக்கிடக்கைகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டு அவர்கள் மற்றவர்களுடன் சிநேகபூர்வமாக, அன்பாகப் பழகவேண்டியதன் அவசியத்தை நாம் வலியுறுத்திக்கூறி அவர்களை வழிநடத்துவோம்.

**கே:** முதியோர்கள் பற்றிய விழிப்புணர்ச்சி எமது இன்றைய இளம் சந்ததியினரின் மத்தியில் - குறிப்பாக மாணவர்கள் மத்தியில் உருவாகுவதற்குத் தாங்கள் எத்தகைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறீர்கள்?

**ப:** யாழ்.குடாநாட்டில் இயங்கும் எந்தப் பாடசாலை மாணவர்களாக இருந்தாலும் தனியாகவோ குழுவாகவோ சுற்றுலா செல்லும்போது இப்படியான முதியோர் இல்லங்களுக்கும் வந்து செல்லவேண்டும். அப்போதுதான் இங்கு தங்கியிருக்கும் முதியோர்களுடன் கலந்துரையாடி அவர்களது மன உணர்வுகள் குறித்து தெரிந்து கொள்ள இயலும். அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு குணாதிசயங்களை, இயல்புகளை உடையவர்களாக இருப்பதை அவதானித்து அவர்களது வாழ்க்கைப் பின்னணி குறித்து கற்றுணர இயலும். அவர்களுடன் கலந்துரையாடும்போது குறித்த ஒரு விடயம் பற்றி பல தரப்பட்ட கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுவதைக் கற்றுணர முடியும். இங்கு தங்கி வாழும் முதியவர்கள் ஏற்கனவே வாழ்ந்து அனுபவித்தவர்கள். வாழ்க்கையில் பல அனுபவங்களை பட்டுணர்ந்திருப்பர். அவர்களிடமிருந்து வாழ்க்கை குறித்த பல விடயங்களைக் கற்றுக் கொள்ளலாம். கலந்துரையாடும் போது அவர்கள் தங்களது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துவார்கள். இதன் மூலம் மாணவர்கள், முதியோரின் அனுபவங்களை தெளிந்துணர வாய்ப்புக் கிட்டும். ★★★★★★★★★★★★★

# மூத்த பிரஜைகளின் தேவைகளுக்கென கொடிவாரம் மூலம் நிதி சேகரிப்பு

**யாழ்.** மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை முதலாவது கொடிவாரத்தை இன்று தொடக்கம் தொடர்ந்து ஒரு வார காலத்திற்குக் கொண்டாடத் தீர்மானித்துள்ளது. இப் பேரவையில் இணைந்து இயங்கிக்கொண்டிருக்கும் சகல பிரதேச மூத்த பிரஜைகள் சங்கங்களும் இதற்கான ஒத்துழைப்பினை வழங்கி கொடிகளை விற்பனை செய்வதற்கு உதவுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பிரதேச சங்கங்கள் மூத்த பிரஜைகளின் பிரச்சினைகளைக் கண்டறிந்து வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றன. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்த மாவட்ட ரீதியிலான மூத்த பிரஜைகள் பேரவையும் நிதி நெருக்கடிகளுக்கு மத்தியிலும் முடிந்த உதவிகளைச் செய்கின்றது. குறிப்பாக பயிற்சி பெற்ற பணியாளர்களின் உதவியும் பல மூத்த பிரஜைகளின் சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. ஆள் பற்றாக்குறை காரணமாக அனைவரது தேவைகளையும் ஒரே சமயத்தில் பூர்த்தி செய்ய முடியாத ஓர் இக்கட்டான நிலையில் இச்சபை உள்ளது. எனவே மூத்த பிரஜைகளின் சகல பிரச்சினைகளையும் கண்டு உதவிட நிதி போதாமையும் தடையாக உள்ளது. ஆகவேதான் கொடிவாரத் தினை வெற்றிகரமாக நடைபெறச்செய்வதற்கு அனைத்து மக்களினதும் மாணவர் களினதும் உதவிகளையும் பங்களிப்பினையும் ஒத்துழைப்பினையும் மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை வேண்டிநிற்கின்றது.

வ.பரமசிவம், ஜே.பி, கௌரவ செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1126 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மகரம் 23 33 47 55

29-09-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 4,884,850/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 221,672 | 20/- | 4,433,440/- |
| 2 இலக்கங்கள் | 20,425 | 40/- | 817,000/- |
| 1 இல. + லக்கினம் | 20,273 | 60/- | 1,216,380/- |
| 2 இல. + லக்கினம் | 1,789 | 200/- | 357,800/- |
| 3 இலக்கங்கள் | 537 | 1000/- | 537,000/- |
| 3 இல. + லக்கினம் | 55 | 10,000/- | 550,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,884,850/- | - |
| மொத்தம் | | | 8,511,620/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 264,759 | | 9,011,620/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,875,250/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காக வெற்றியாளர் : டபிள்யூ.எம்.அஜந்த குமார வெல்லவாய

கைத்தொலைபேசி வெற்றியாளர்: டபிள்யூ.ஏ.பீ.பெர்னாந்து பிலியந்தலை

2009 ஒக்டோபர் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கண்டி | 400554343-0-11 |
| மட்டக்களப்பு | 400554277-3-36 |
| கொழும்பு | 400554948-7-44 |
| கொழும்பு | 400543993-3-06 |
| கேகாலை | 400547724-6-21 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## கண்ணீர் அஞ்சலிகள்



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அவர்களின் பாசமிகு புதல்வன்

### செல்வன் சுதர்ஸன்

அவர்களின் அகாலமரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

யா/வயாவிளான் மத்தியமகாவித்தியாலயம், உரும்பிராய்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,

(89438)

## இதய அஞ்சலிகள்



எமது வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புத்திரன்

### செல்வன் வி.சுதர்ஸன்

அவர்களது திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத் தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை, மானிப்பாய்.

அதிபர், ஆசிரியர் நல்லுறவு மன்றம்.

(89434)

## கண்ணீர் அஞ்சலி



எமது வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புதல்வன்

### சுதர்ஸன்

அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

யா/உடுவில் மான்ஸ் த.க.பாடசாலை. (89442)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,

## கண்ணீர் அஞ்சலி



எமது வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புத்திரன்

### சுதர்ஸன்

அவர்களின் பிரிவு குறித்து வேதனை அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்.

## சாரதி தேவை

ஒரு ஆன்மீக ஸ்தாபனத்துக்கு சகல வாகனங்களும் ஓடக்கூடிய சாரதி ஒருவர் தேவை.

விளம்பர இல: 3945
மே/ப.உதயன், யாழ்ப்பாணம்.

(சி/561343)

## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, குருசோ வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:**
T.P: 0776146434

(89417)

## வேலையாள்கள் தேவை

- **Hard ware Technician (Male)**
- **M.S Office, DTP தெரிந்த பெண் பிள்ளைகள்**

நாளை (02.10.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நேரில் வரவும்.

**Pan city,**
**Pandathareppu.**

## கசிப்பு வைத்திருந்தவருக்கு 80 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.01

சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த சாவகச்சேரி தபால்கந்தோர் வீதியைச் சேர்ந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் நபருக்கு 80 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் 36 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(50 - 207)

## விஞ்ஞான பாட மீட்டல் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.01

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9, 10, 11 ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான விரைவு மீட்டல் பரீட்சை எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறும்.

சகல விஞ்ஞான பாட ஆசிரியர்களும் இப்பரீட்சைக்கான மதிப்பீட்டுத் தாள்களை நாளை வெள்ளிக்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(50-207)

## சிறுவர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.1

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி அல்லாரை ஐங்கரன் முன்பள்ளியின் சிறுவர்தின விழா இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளியில் நடைபெறும்.

சாவகச்சேரி பிரதேச சபை பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி கௌரீஸ்வரி விக்னகுமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு பிரதேச சபை சிரேஷ்ட தொழில் நுட்ப அலுவலர் ந.ஜெயபாலசுந்தரம் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார்.

நிகழ்வில் முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகளும் மாணவர்கள் கௌரவிப்பும் இடம் பெறும்.

(50-207)

## கண்ணீர்க் காணிக்கை



எனது மதிப்பிற்குரிய ஆசானும் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய ப.விக்னேஸ்வரனின் புத்திரன்

### செல்வன் சுதர்ஸன்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நீராவியடி வீரகத்தி விநாயகரின் திருப்பாதம் பணிகின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

ஐடியல் அக்கடமி, சண்டிலிப்பாய், காரைநகர், யாழ்ப்பாணம், மானிப்பாய்.

(சி/561340)

நிர்வாகி.

## கண்ணீர் அஞ்சலிகள்



எமது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புதல்வன்

### சுதர்ஸன்

இறைபதம் அடைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்
யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.

(89426)

யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயத்தின்

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புதல்வன்

### செல்வன் வி.சுதர்ஸனின்

பிரிவு அறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம். அன்னாரின் ஆத்மசாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை, அராலி, வட்டுக்கோட்டை.

(89432)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர்.

## மரண அறிவித்தல்

### நடராஜா செல்லத்துரை

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், 37/2, செட்டித் தெரு நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா செல்லத்துரை நேற்று (30.09.2009) புதன்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானவல்லியின் கணவரும் திருமதி விஜயகுமாரி அருள்தாசன் (ஜெயந்தி), சுரேந்திரகுமார் (ஓய்வூதியர்) ஆகியோரின் தந்தையும், பேராசிரியர் மனோ சபாரத்தினத்தின் மைத்துனரும், திருமதி உ. சுரேந்திரகுமாரின் (உப அதிபர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), காலஞ்சென்ற அருள்தாசன் ஆகியோரின் மாமனும் கலாநிதி ராஜ்குமார், சகிலா குணசீலன் ஆகியோரின் பேரனும், மாதங்கி, துசிதரன், பிரதீசன், சுவஸ்திகா, ஆதித்யா ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02.10.2009) வெள்ளிக் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/2, செட்டித்தெரு, நல்லூர்.

தகவல் :
சுரேந்திரகுமார் (மகன் ).

## மரண அறிவித்தல்

### திருமதி பாலசிங்கம் சந்திரா



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், நவாலிவடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சந்திரா 28.09.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இலட்சுமி - காலஞ்சென்ற நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், வேலு பாலசிங்கத்தின் அருமை மனைவியும், ஜெசிந்தா (சுவிஸ்), ஜெயராஜ் (சுவிஸ்), ஜெயக்குமார் (டோகா), தர்மினி, வனஜா (மாணவி, நவாலி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவக்கொழுந்து, இராசையா, இந்திரா, துரைசேகரன் (சுவிஸ்), ஞானசேகரம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அம்பிகைபாகனின் (சுவிஸ்) அன்பு மாமியாரும் பிரசாத், தாரங்கன் ஆகியோரின் பேர்த்தியும், பசுபதி, புஸ்பவதி காலஞ்சென்ற தவராசா மற்றும் குமாரி (சுவிஸ்), வாணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2009) வியாழக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வடக்கு, மானிப்பாய்.

தகவல் :
இராசையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்நாமிலும், கம்போடியாவிலும் சூறாவளியால் அனர்த்தங்கள்

நொம்பெங், ஒக். 01

பிலிப்பைன்ஸ், வியட்நாம் ஆகிய நாடுகளைத் தாக்கிய கெட்ஸானா சூறாவளி, மத்திய கம்போடியாவையும் மூர்க்கமாகத் தாக்கியது. இதில் கம்பொங் தொம் மாகாணத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

கடும் மழையோடு வியட்நாமைத் தாக்கிய இச்சூறாவளியின் அனர்த்தங்களுக்கு 30 பேர் பலியாயினர். 2 லட்சம் பேர் வரை வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள் ளனர். மத்திய மாகாணங்களில் பயங்கர வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த சூறாவளி, கடும் மழை, வெள்ளப் பெருக்கு ஆகியவற்றின் அனர்த்தங்களுக்கு வார இறுதியில் பிலிப்பைன்ஸில் 246 பேர் பலியாயினர். பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். 3 லட்சத்து 80 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் தற்காலிகமாகக் கொட்டில்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

வட கம்போடியா, தென் லாவோஸ் ஆகியவற்றைத் தாக்குவதற்கு முன்னர் கெட்ஸானா சூறாவளி பயங்கர மழையோடு வியட்நாமைத் தாக்கியது. இது மணிக்கு 150 கிலோ மீற்றர் வேகத்தில் விரைந்தது. வியட்நாமில் பல பகுதிகளில் வெள்ள அனர்த்தங்கள் விளைந்தன.

இதையடுத்து, இச்சூறாவளி கம்போடியாவைத் தாக்கியது. பேரிடர் தவிர்ப்பு முகாமைத்துவ தேசியக் குழுத் தலைவர் லி தச் குறிப்பிடுகையில், ''நேற்று புதன் கிழமை இச்சூறாவளியின் வீறு தணிந்தது. அது மணிக்கு 145 கிலோ மீற்றர் (80 மைல்) வேகத்தில் விரைந்தது'' என்றார்.

''கம்பொங் தொம் மாகாணத்தில் செவ்வாய்க்கிழமை இரவு வீடொன்று இடிந்து விழுந்தது. இடிபாடுகளுக்குள் சிக்குண்டு 9 பேர் பலியாயினர்'' என செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் சியா சீட் தெரிவித்தார்.

கம்போடியாவில் தலைநகரான நொம் பெங்கிற்கு வடக்கே, 130 கிலோ மீற்றர் (80 மைல்) தொலைவில் பயங்கர வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கம்பொங் தொம் மாகாணத்தில் கடும் மழை தொடர்ந்த பெய்கிறது. வெள்ளத்தின் மட்டம் உயர்வடைந்து வருகிறது. 78 வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

கம்போடியாவின் ஐந்து மாகாணங்கள் இந்த அனர்த்தங்களால் பெரிதும் பாதிப் புக்குள்ளாகியுள்ளன. இடம்பெயர்ந்துள்ள மக்கள் தற்காலிக தங்குமிடங்களில் தஞ்சமடைந்துள்ளார்கள். சர்வதேச நிறுவனங்களும், கம்போடிய அரசும் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடாரங்களும், உணவுகளும் வழங்கி வருகின்றன என்றும் அவர்கள் கூறினார்கள்.

கெட்ஸானா சூறாவளி மத்திய வியட்நாம் கரைப் பிராந்தியத்தை நோக்கி விரைந்த போது, டானங் நகரப் பகுதியில் பாரிய சேதங்கள் விளைந்துள்ளன. விமான நிலையமும், பாடசாலைகளும் மூடப்பட்டன என பி.பி.ஸி. நிருபர் கை டி லோனி தெரிவித்துள்ளார்.

வட தென் வியட்நாமையும், தென் வியட்நாமையும் இணைக்கும் நெடுஞ்சாலைகளும், ரயில்பாதைகளும் மூடப்பட்டுள்ளன. மத்திய வியட்நாம் மாகாணங்களில் வெள்ளம் உயர்ந்து வருகிறது. ஆயிரக்கணக்கானோர் வீடு வாசல்களை இழந் துள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 100 கிராம் நிறையுடைய வைரம் தென்னாபிரிக்காவில் கண்டுபிடிப்பு



ஜொகன்ஸ்பர்க், ஒக். 01

தென்னாபிரிக்காவின் வடகிழக்கு பிரிடோரியாவிலுள்ள குல்லினன் என்ற இடத்திலுள்ள வைர சுரங்கமொன்றில் கோழி முட்டை வடிவிலான அதிசய வைரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

100 கிராமுக்கு மேலாக இதன் எடை உள்ளது. இதன் மதிப்பு எவ்வளவு என்று இன்னும் கணக்கிடப்படவில்லை. இது 507.77 கரட் தரம் கொண்டது.. உலகிலேயே உள்ள தரமான 20 ரக வைரங்களில் இதுவும் ஒன்று.

இதே சுரங்கத்தில்தான் 3 ஆயிரத்து 106 கரட் தரம் வாய்ந்த மிகப் பெரிய வைரமும் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# ஜப்பான் எரிமலையில் ஆறு நிலநடுக்கங்கள்

டோக்கியோ, ஒக். 01

ஜப்பானின் ருயூகியூ தீவுக்கு அருகேயுள்ள எரிமலைக்கு அருகே அடுத்தடுத்து 6 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளமையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இவோ டோரி ஷிமா என்ற இந்த எரிமலைக்கு அருகே அதிகபட்சம் 5.9 ரிச்டர் அளவுகொண்ட 6 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

கடலுக்கடியில் 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கங்களால் ஆழிப்பேரலைகள் ஏதும் ஏற்படவில்லை. எனினும், அப் பகுதியில் பீதி நிலவுகிறது.

ஜப்பானின் முக்கிய நகரான ஒகினோவுக்கு 200 கி.மீ. தூரத்தில் இந்த எரிமலை உள்ளது.

# இந்தோனேஷியாவில் மீண்டும் பூகம்பம்..!

ஜகர்த்தா, ஒக. 01

இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவை நேற்று புதன்கிழமை பாரிய பூகம்பம் தாக்கியது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.9 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

படாங் நகருக்கருகே, கரைப் பிராந்தியத்துக்கப்பால், 50 கிலோ மீற்றர் தொலைவில் இது மையங்கொண்டிருந்தது என புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

கட்டடங்கள் சேதமடைந்துள்ளன என பூர்வாங்கத் தகவல்கள் வெளியாகின. எனினும், இதர சேத விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை. அதேவேளை, பசுபிக் ஆழிப்பேரலை எச்சரிக்கை மையம், ஆழிப்பேரலை அபாய எச்சரிக்கை விடுத்தது.

படாங்கிலும் இதர நகரங்களிலும் மக்கள் கட்டடங்களையும், வீடுகளையும் விட்டு ஓடினார்கள் என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

# இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே அணு யுத்தம் மூண்டால் பாக். அழிந்துவிடும்

## வரலாற்றாசிரியர் டெய்லரின் நூலில் தகவல்

நியூயோர்க், ஒக். 01

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே அணு யுத்தம் மூண்டால் பாகிஸ்தான் ஒட்டுமொத்தமாக அழிந்து விடும். அதேசமயம், 50 கோடி இந்தியர்கள் வரை மாளுவார்கள் என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளின்ரனின் பதவிக்காலத்தில் நடந்த நிகழ்வுகள் தொடர்பான நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிட்சர் விருது பெற்றவரும்,பிரபல வரலாற்றாசிரியருமான டெய்லர் பிராஞ்ச் இந்த நூலை எழுதியுள்ளார். கார்கில் போர்க்காலத்தில் நிலவிய நிலைவரம் தொடர்பாக அப்போதைய ஜனாதிபதி கிளின்ரனிடம் இந்தியத் தலைவர்கள் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் டெய்லர் இந்நூலில் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த நூலின் எட்டாவது அத்தியாயத்துக்கு பக்தாத்தில் எட்டு ஏவுகணைகள் என பெயரிடப்பட்டுள்ளது. இதில்தான் இந்தியா - பாக். அணு ஆயுதங்கள் குறித்து டெய்லர் இவ்வாறு எழுதியுள்ளார்.

இதில்,''அமெரிக்க ஜனாதிபதிகிளின்ரனை நான் சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் கூறுகையில், பாகிஸ்தான் இந்தியாவின் மீது அணுகுண்டு வீசினால் பதிலடி தர இந்தியா தயாராகவுள்ளது. இதை இந்தியத் தலைவர்களே என்னிடம் கூறியுள்ளனர்'' என்றார் என டெய்லர் குறிப்பிட்டுள்ளார்.

''ஒருவேளை அப்படி நடந்தால், இந்தியா நிச்சயம் பாகிஸ்தானை ஒட்டுமொத்தமாக அழித்துவிடும். அதனிடம் அந்த சக்தி உள்ளது. அதற்கு அப்பாற்பட்ட சக்தியும் அதனிடம் உண்டு. அதேசமயம், இந்தியாவிலும் 50 கோடி வரை மாண்டுவிடுவார்கள் என்றும் கிளின்ரனின் என்னிடம் குறிப்பிட்டார்'' என்றும் டெய்லர் தம் நூலில் மேலும் தெரிவித்துள்ளார்.

# கினி துப்பாக்கிப் பிரயோகத்துக்கு ஆபிரிக்க ஒன்றியம் கண்டனம்

கினியாவின் தலைநகரான கொனாக்ரியில் இடம்பெற்ற எதிரணியினரின் பேரணி மீது, பாதுகாப்புப் படையினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்கு ஆபிரிக்க ஒன்றியம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

நிராயுதபாணிகளான மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. இது பெரிதும் கண்டிக்கப்படத்தக்கதொரு செயலாகும். இதன்பொருட்டு, கினியா மீது தடைகள் விதிப்பது தொடர்பாக ஆராயப்படும் என்றும் இந்த ஒன்றியம் அறிவித்துள்ளது.

அடுத்த ஜனவரியில் நடைபெற வுள்ள ஜனாதிபதித் தேர்தலில், கினியின் இராணுவத் தலைவரான கெப்டன் மௌசா டடிஸ் கமரா போட்டியிட முன்வந்துள்ளார். இதற்கு ஆட்சேபனை தெரிவித்தே, எதிரணியினர் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியுள்ளனர். இதில் 50 ஆயிரம் பேர் வரை பங்குபற்றியுள்ளனர்.

# தேவாலயம் இடிந்து விழுந்ததில் 23 பேர் பலி; 60 பேர் படுகாயம்!

## கிழக்கு நேபாளத்தில் சம்பவம்

காத்மாண்டு, ஒக். 01

கிழக்கு நேபாளத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கிறிஸ்தவ தேவாலயக் கட்டட மொன்று இடிந்து விழுந்ததில், 23 பேர் கொல்லப்பட்டனர். 60 பேர் காயமடைந்தனர். இவர்களில் சிறுவர்களுமடங்குவர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இந்தத் தேவாலயம் டாரான் நகரில் அமைக்கப்பட்டிருந்தது. தலைநகரான காத்மண்டுவின் தென்கிழக்கே,ஏறத்தாழ 400 கிலோ மீற்றர் (240 மைல்) தொலைவில் இந்த இடம் அமைந்துள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்தத் தேவாலயத்துக்குள் கிறிஸ்தவ மாநாடொன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. பெருந்தொகையானோர் இதில் பங்குபற்றியிருந்தனர். அச்சமயத்தில் தற்காலிக சுவரொன்று இடிந்து அவர்கள் மீது விழுந்துள்ளது என பொலிஸ் அதிகாரி அர்ஜுன் ஹட்ஹா ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்துள்ளார்.

தற்காலிக சுவர் இடிந்து விழுந்ததும் அதற்குள் சிக்குண்ட 23 பேர் அவ்விடத்திலேயே மரணித்துள்ளனர். 60 பேர் காயமடைந்துள்ளனர். அச்சமயம் அம் மாநாட்டில், ஆயிரத்து 500 இற்கு மேற்பட்டோர் இருந்துள்ளனர் என பிரதம பொலிஸ் அதிகாரி மோகன் பிக்ராம் தஹால், ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்துள் ளார்.

# அழகுசாதனங்களிலுள்ள இரசாயனங்கள் மூலம் குண்டு தயாரிக்க முயன்ற அல் குவைதா தீவிரவாதி!

கொலராடோ, ஒக். 01

அமெரிக்காவில் கைதான அல்-குவைதா தொடர்பு தீவிரவாதி நபிபுல்லா ஜசி அழகு சாதனப் பொருள்களிலுள்ள இரசாயனங்களைப் பிரித்தெடுத்து அவற்றின் மூலம் குண்டு தயாரிக்க முயன்றுள்ளார் என அமெரிக்கப் பொலிஸார் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்கப் பொலிஸார் சமீபத்தில் அல்- குவைதாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட நபிபுல்லா ஜசி, அவரது தந்தை முகமது வலி ஜசி, அகமது வைஸ் அபசில் ஆகியோரை கைது செய்தனர். நபிபுல்லா ஜசி ஆப்கானில் பிறந்தவர். எனினும், அமெரிக்காவில் தொழில் புரிந்து வந்தவர்.

ஜசியின் மடி கணனியிலிருந்து வீட்டு உபயோகப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள் ஆகியவற்றிலிருந்து வெடி குண்டு தயாரிக்கும் முறைமை பற்றிய 9 பக்கங்களைக் கொண்ட குறிப்பேடு ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அமெரிக்கப் பொலிஸார் ஜசியை கைது செய்வதற்கு முன்னர் டென்வர் நகர் பகுதியிலுள்ள அழகுசாதனப் பொருள்கள் கடைகளில் ஜசியின் படத்தைக் காட்டி விசாரணை நடத்தியுள்ளனர்.

இவ்விசாரணையின்போது ஜசி பல கடைகளில் அழகுசாதனப் பொருள்களை அதிகளவில் வாங்கியுள்ளமை தெரியவந்துள்ளது. அப்போது ஜசி கடைக்காரர்களிடம் தனக்கு நிறைய தோழியர்கள் உள்ளார்கள் என்றும் தன்னிடம் பல பெண்கள் தொழில் புரிகிறார்கள் என்றும் அவர்களுக்கு அன்பளிப்பு செய்வதற்காகவே அதிகளவில் அழகுசாதனப் பொருள்களை தான் வாங்குகிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சட்டமா அதிபர் எரிக் ஹோல்டர் தெரிவிக்கையில், ''இந்த சதித் திட்டம் குறித்து விரிவாக விசாரணை நடத்தி வருகிறோம். 24 மணி நேரமும் இதில் கருத்து செலுத்துகிறோம். தற் போதைக்கு அமெரிக்காவுக்கு எந்த பாதுகாப்புக் குறைபாடும் இல்லை. என்றாலும், அமெரிக்க மக்கள் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். சந்தேகத்துக்கு இடமானவர்கள் எவரும் நடமாடினால், சட்ட அமுலாக்கு துறையினரிடம் தெரிவிக்க வேண்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் சுயமரியாதையுடன் வாழ உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## தமிழக அரசிடம் டாக்டர் ராமதாஸ் கோரிக்கை



சென்னை, ஒக். 01

ஈழத்தமிழர்கள் அவர்களது சொந்த மண்ணில் சிங்களவர்களைப் போன்று சம உரிமை பெற்று சுய மரியாதையுடன் வாழ தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும் - என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஈழத்தமிழர்கள் அவர்களது சொந்த மண்ணில் சிங்களவர்களைப் போன்று ஆளும் உரிமை பெற்று சுயமரியாதையுடன் வாழ்வதற்கான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய ஆட்சியாளர்கள் ஒன்று பட்டு வலியுறுத்த வேண்டும். ஈழத்தமிழர்களுக்கு அவர்கள் விரும்புகின்ற தனிப் பூமியைப் பெற்றுத்தர உறுதுணையாக இருக்க வேண்டும்.

அது வேறொரு நாட்டு பிரச்சினை என்று இருந்துவிடக் கூடாது. அப்போது தான் சுய மரியாதை - சம உரிமை, சுயாட்சிக்காகப் போராடி பலியாகியிருக்கும் லட்சக்கணக்கான ஈழத்தமிழர்களின் உயிர்த் தியாகத்திற்கு பொருள் இருக்கும். அவர்களது தியாகத்திற்கு நாம் செலுத்துகின்ற கண்ணிய மிக்க, கடமையாகவும், மரியாதையாகவும் இருக்கும்.

தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள சுமார் ஒரு லட்சம் ஈழத்தமிழர்கள் இங்கேயே நிரந்தரமாக குடியிருக்க வழிவகை செய்து தரவேண்டும் என்று காஞ்சீபுரத்தில் நடை பெற்ற அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இலங்கையில் சிங்களவர்களுக்கு நிகராக தங்களுக்கு உரிமை வேண்டும் என்று போராடியதால், அடித்து விரட்டப்பட்ட தமிழர்கள் உலகில் பல்வேறு நாடுகளுக்கு சென்று தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற பல ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற இதர மேலை நாடுகளிலும் தஞ்சம் புகுந்திருக்கும் லட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே அந்தந்த நாடுகளில் குடியுரிமை பெற்று சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் ஈழத்தமிழர்களும் என்றைக்கோ இந்திய குடியுரிமை பெற்று சுதந்திரமாக வாழ வைக்கப்பட்டிருக்க வேண்டும். இப்போது காலம் கடந்து மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கையானாலும் இது வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது, விரைந்து செயற்படுத்தப்பட வேண்டியது.

தி.மு.க. நிறைவேற்றியுள்ள இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கும், அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கும் தி.மு.க. அரசு என்ன செய்யப்போகிறது என்பது மிகவும் முக்கியமானது - என்றார்.

# கடலுக்குச் செல்லாதீர்!

## வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

சென்னை, ஒக். 01

தமிழகம், புதுச்சேரி கடலோரப் பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளா மற்றும் வட கர்நாடகப் பகுதிகளில் தென்மேற்கு பருவ மழை தீவிரம் அடைந்துள்ளது. இதையடுத்து தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், கேரளா, வட கர்நாடக பகுதிகளில் தென் மேற்கு பருவமழை மேலும் தீவிரம் அடைந்துள்ளது. இதனால் தமிழகம், புதுச்சேரியில் இடியுடன் மழை பெய்யும். கடலோரப் பகுதிகளில் மணிக்கு 55 கிமீ வேகத்தில் காற்று வீசும். மழையும் பெய்யும். இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். ஒருசில இடங்களில் இடியுடன் மழை பெய்யும். தமிழகத்தின் பிற மாவட்டங்களில் லேசான மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# செங்கல்பட்டு முகாம் ஈழ அகதிகளின் உண்ணாவிரதம் 10ஆவது நாளாக நீடிப்பு

சென்னை, ஒக். 01

செங்கல்பட்டு இலங்கை அகதிகள் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 42 பேர் நேற்றுமுன்தினம் 10 ஆவது நாளாகவும் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களில் பலர் தமிழ்நாட்டு கியூப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறப்பு முகாம் என்னும் பெயரில் செங்கல்பட்டு பூந்தமல்லி உட்பட தமிழகத்தில் பல இடங்களில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதில் செங்கல்பட்டிலுள்ள சிறப்பு முகாம் அகதிகள் மீது பொலிஸார் எந்த வழக்கையும் பதிவு செய்யாமலும் சிலர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை, தொடர்ந்து நடத்தாமலும் அலைக்கழித்து வந்தனர் எனக் கூறப்படுகிறது.

பொலிஸாரின் இந்த விரோதப் போக்கை கண்டித்து கடந்த ஜூலையில் சாகும் வரை உண்ணாவிரதத்தைத் தொடங்கினர். இவர்களிடம் பேச்சு நடத்தி வழக்குப் பதிவு செய்யாமலிருக்கும் 12 பேரை விடுதலை செய்தனர். அதன் பின்னர் உண்ணாவிரதத்தை அகதிகள் கைவிட்டனர்.

ஆனால் வழக்குப் பதிவு செய்யப்பட்ட நபர்கள் விவகாரத்தில் பொலிஸார் கேட்டிருந்த 45 நாள்கள் அவகாசம் முடிந்த பிறகும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் சிறப்பு முகாம் அகதிகள் 42 பேர் மீண்டும் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை கடந்த 20 ஆம் திகதி ஆரம்பித்தனர்.

அவர்களின் கோரிக்கைகள் வருமாறு -

இலங்கை அகதிகளை உடனடியாக வேறு முகாமிற்கு மாற்றவேண்டும். எங்கள் உறவினர்கள் உள்ள முகாமிற்கு மாற்ற வேண்டும்.

வழக்கு விசாரணைகளை விரைவாக முடிக்க வேண்டும். திறந்த வெளி முகாமிற்கு மாற்றவேண்டும். உறவினர்களுடன் சேர்ந்து வாழ வேண்டும்.

எல்லா நாட்டவரைப்போல வெளியிலிருந்து தங்களது வழக்குகளை முடிப்பதற்கு அனுமதிக்கவேண்டும் என்பன போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த உண்ணாவிரதத்தை அவர்கள் தொடங்கியுள்ளனர்.

10ஆவது நாளாக உண்ணாவிரதம் தொடர்கிறது. இவர்களில் ரமேஷ், விஜய் ஆகியோர் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் உடனடியாக அவர்களைப் பொலிஸார் செங்கல்பட்டு அரச வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சையின் பின் முகாமிற்குத் திரும்பியுள்ளனர்.

எனவே, இவர்களது உண்ணாவிரத பிரச்சினையில் தமிழக அரசு உடனடியாகத் தலையிட்டு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈழ ஆதரவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பீகாரில் படகுகள் கவிழ்ந்து 26 பேர் பலி; 50 பேர் மாயம்

ககாரியா (பீகார்), ஒக். 01

பீகாரில் இரு படகுகள் கவிழ்ந்ததில் 26 பேர் பரிதாபமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர். 50 பேர் காணமல் போயுள்ளனர்.

பீகாரில் ககாரியா மாவட்டத்தில் கடந்த செவ்வாயன்று பாக்மதி நதியில் 100 பேருடன் நாட்டுப் படகு ஒன்று சென்று கொண்டிருந்தது.

ஆற்று நீரின் வேகம் அதிகமாக இருந்தாலும் பாரம் தாங்காமலும் படகு கவிழ்ந்தது. உடனடியாக, மீட்புப் பணியில் பொலிஸாரும் தேசிய பேரழிவு நிர்வாகப் படையினரும் ஈடுபட்டனர்.

இதன்போது, 5 சிறுமிகள், 2 பெண்கள் உட்பட 18 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. 25 பேர் பாதுகாப்பாக நீந்திக் கரை சேர்ந்தனர். 50 பேரைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

விஜயதசமி பண்டிகை விழாவுக்காக பக்கத்து ஊருக்குச் சென்றுவிட்டு, சொந்த கிராமத்துக்கு படகில் மக்கள் திரும்பிக் கொண்டிருந்தபோதே விபத்து நடந்தது என பொலிஸார் கூறினர்.

இதேபோல, தர்பங்கா மாவட்டம் கமலா பாலான் நதியில் 17 பேருடன் சென்று கொண்டிருந்த படகு ஒன்று கவிழ்ந்ததில் 8 பேர் தண்ணீரில் மூழ்கி இறந்தனர். 9 பேர் நீந்திக் கரை சேர்ந்தனர்.

# 8 பேர் பாதுகாப்பில் பிரபா; ஈழ அகதிகள் வாக்குமூலம்

## அரசுக்கு உளவுத்துறை அறிக்கை

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் இன்னும் இறக்கவில்லை. அவர் 8 பேரின் பாதுகாப்புடன் பத்திரமாக உள்ளார் - என்று உளவுத்துறையினரிடம் அகதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் உள்ள முகாம்களில் கியூப் பிரிவுப் பொலிஸார் மற்றும் மாநில உளவு பொலிஸார் இலங்கைக்குச் செல்ல விரும்பும் அகதிகளின் விவரம், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் பற்றிய விவரம் உட்பட பல தகவல்கள் குறித்து கருத்துக் கேட்டுள்ளனர்.

இதற்கு அகதிகள் பதிலளிக்கையில் -

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் உயிரோடுதான் உள்ளார். அவர் 8 பேர் பாதுகாப்பில் பத்திரமாக உள்ளார். பிரபாகரன் இறந்து விட்டார் என இலங்கை அரசு நாடகம் ஆடுகிறது. பிரபாகரன் விரைவில் இலங்கையில் தோன்றுவார் - என்றனர்.

இவர்களின் கருத்துகளை பொலிஸார் அரசுக்கு அறிக்கையாக அனுப்பி வைத்துள்ளனர்.




# தமிழகத் தமிழரையும் கொல்வதற்கு மஹிந்த அரசு சதி; இந்தியா துணை

## வைகோ அனல்பறந்த ஆவேசம்

சென்னை, ஒக். 01

இலங்கைத் தமிழர்களைக் கொன்று குவித்தது போதா தென்று தமிழகத் தமிழர்களையும் கொல்வதற்கு மஹிந்த ராஜபக்ஷ அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. இதற்கு இந்தியாவும் துணை நிற்கிறது - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

தமிழக மீனவர்களை மத்திய அரசு காக்க தவறி விட்டது என்று கூறி சென்னை சேப்பாக்கத்தில் நேற்று ம.தி.மு.க. சார்பில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தைத் தொடக்கி வைத்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழர்களின் உரிமை காவு கொடுக்கப் படுகிறது. பல முனைகளில் இருந்து தமிழர்கள் மீது தாக்குதல் நடைபெறுகிறது.

மத்திய அரசை பொறுத்தவரை தமிழகத்திற்கு தொடர்ந்து தீங்கிழைத்து வருகிறது. இலங்கையில் லட்சக்கணக்கான தமிழர்களை கொன்று குவிக்க துணை போனது. இப்போது இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்கிக் கொலை செய்வதற்கும் துணை போகிறது. இதைப் பார்க்கும் போது மத்திய அரசு என்று ஒன்று இருக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

ஒரு நாட்டுப் பிரஜையை இன்னொரு நாடு தாக்கினால் அந்த நாடு, தன்னுடைய நாட்டு பிரஜையைத் தாக்கிய நாட்டை எச்சரிக்கை செய்யும்; கண்டனம் தெரிவிக்கும். பின்னர் அந்த நாட்டுடனான ராஜ தந்திர உறவையே துண்டித்துக்கொள்ளும்.

ஆனால் ஆயிரக்கணக்கான இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தினமும் தாக்கப்படுகிறார்கள். நூற்றுக் கணக்கான தமிழக மீனவர்கள் கொல்லப் பட்டு இருக்கிறார்கள். இது இந்திய அரசுக்கு கேவலமாக இல்லையா? கேட்டால் நம்முடைய மீனவர்கள் கடல் எல்லையை தாண்டிச் சென்றதால் தாக்கப்பட்டனர் எனக் கூறுகிறார்கள்.



இந்த கொடுமைகளை கண்டிக்க இந்திய அரசுக்கு திராணியில்லை. தமிழக மீனவர்கள் மீது தினமும் தாக்குதல் நடக்கிறது. இதனை தமிழக மீனவர்கள் அப்படியே பொறுத்துக் கொண்டு இருக்கமாட்டார்கள்.

இந்த விடயத்தில் மத்திய அரசின் போக்கு இந்தியாவின் பாதுகாப்புக்கே தீங்காக அமையும். சீனாவும், பாகிஸ்தானும் இன்று இலங்கையிலே தளம் அமைத்து விட்டன. இதனால் எதிர்காலத்தில் தென் பகுதியில் இருந்தும் இந்தியாவுக்கு ஒரு அபாயம் உருவாகி வருகிறது என்பதை மத்திய அரசு உணரத் தவறிவிட்டது.

இலங்கைப் படையே தமிழக மீனவர்கள் மீது தினமும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த செயலை பொறுத்தவரை சிங்களவர்களின் கைக்கூலி அரசாகவே மத்தியில் உள்ள மன்மோகன் சிங் அரசு செயற்பட்டு வருகிறது - என்றார்.

# சென்னையில் விமானத்தளம் அமைக்கிறார் நடிகர் அஜித்

சென்னை, ஒக். 01

நடிகர் அஜித், சென்னை அருகே மினியேச்சர் விமானத் தளம் அமைக்கிறார்.

விளையாட்டில் பயன்படுத்தப்படும் சிறிய ரக ஹெலிக்கொப்டர்கள் மற்றும் விமாணங்களை பொது இடங்களில் பறக்க விட பாதுகாப்புக் கருதி அரசு தடை செய்துள்ளது.

இதையடுத்து, இதற்காக தனியாக ஒரு இடத்தை 'ரேடியோ கொன்ட்ரோல் பைலட் அசோசியேஷன்' என்ற அமைப்பின் மூலம், மதுராந்தகம் அருகே தேர்ந்தெடுத்துள்ளனர். டாக்டர் அருள் மொழிவர்மன், ஒளிப்பதி வாளர் அரவிந்த் ஆகியோருடன் இவ் வமைப்பை அஜீத் நடத்துகிறார்.

இங்கு ஹெலிக்கொப்டர் தளம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதன் தொடக்க விழா அடுத்த மாதம் நடக்கிறது. சிறிய ரக விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களை இயக்க [illegible] இங்கு வரலாம் எனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருத்துக்களைக் கூறக்கூடிய உங்களின் சுதந்திரத்துக்காக உயிரைக் கொடுத்தும் போராடுவேன்

## இலக்கியகர்த்தாக்களுடனான சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ்

வண்ணை, ஒக். 01

கலை இலக்கியங்களை நீங்கள் சுதந்திரமாகப் படைக்கவேண்டும், அதற்காக நீங்கள் சுதந்திரமாகச் சிந்திக்க வேண்டும், உங்களது ஆற்றல்களையும், சிந்தனையின் தேடல்களையும் எமது மக்களுக்காகத் தொடர்ந்தும் நீங்கள் சரிவரப்பயன்படுத்த வேண்டும் என்பதுதான் எங்களது விருப்பம்.

உங்களது கருத்துக்கள் அனைத்தையும் நான் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிடினும், அந்தக் கருத்துக்களைக் கூறக்கூடிய உங்களது சுதந்திரத்திற்காக நான் உயிரைக் கொடுத்தும் போராடுவேன்- என்றார் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

யாழ்ப்பாணத்தின் எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய கர்த்தாக்களுடனான சந்திப்பொன்று அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

நீங்கள் எதிர்கொள்ளும் தடைகள் எதுவாயினும் அவைகளைக் கண்டறிந்து அந்தத் தடைகளை அகற்றி உங்களைச் சுதந்திரமான இலக்கியப் படைப்பாளியாக நீடித்து வாழவைக்கவேண்டும் என்பதற்காகவே நாம் உங்களை அழைத்திருக்கின்றோம்.

கலை இலக்கியப் படைப்பாளிகள் வெறுமனே கலை இலக்கியங்களை மட்டும் படைத்துக்கொண்டிருப்பவர்கள் அல்லர். தமது படைப்பிலக்கியங்களுக்கு ஊடாக ஒரு சமுதாயத்தையே புதிதாகப் படைப்பவர்கள் என்றுதான் நான் கருதுகின்றேன். தாம் வாழ்கின்ற சமகால சமுதாயத்தில் இருந்து புதியதொரு சமுதாயத்தைப் படைப்பவர்களே கலை இலக்கியப் படைப்பாளிகளாவர்.

மக்கள் அழுதால் ஒரு படைப்பாளி தானும் அழுவான். மக்கள் சிரித்தால் படைப்பாளி தானும் சிரிப்பான். மக்கள் ஆனந்தக் கூத்தாடினால் அவர்களோடு சேர்ந்து படைப்பாளியும் ஆனந்தக் கூத்தாடுவான்.

எமது போராட்ட வரலாற்றில் எமது மக்கள் அழுதிருக்கின்றார்கள், சிரித்திருக்கின்றார்கள். ஆனாலும் ஆனந்தக் கூத்தாடும் அளவிற்கு எமது மக்கள் இதுவரை முழுமையான மகிழ்ச்சியை அனுபவித்திருக்கவில்லை என்பதை நான் உங்களிடம் கூறிவைக்க விரும்புகின்றேன்.

உங்களது படைப்பிலக்கியங்களில் நீங்கள் வாழும் சமகால சமூக, பொருளாதாரம் பற்றிய விடயங்களை மட்டும் வெளிக்கொண்டு வரவேண்டுமாயின் அதையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன். அரசியல் விடயங்கள் குறித்து நீங்கள் உங்களது படைப்பிலக்கியங்களில் எழுத வேண்டுமாயின் அதையும் நான் மன விருப்பங்களோடு ஏற்றுக்கொள்கின்றேன்.

ஆனாலும், உங்களது படைப்புகளில் நடைமுறைச்சாத்தியமற்ற வெறும் கவர்ச்சிகரமான வெற்றுக்கோஷங்களுக்கு மட்டும் இடமளித்துவிடாதீர்கள். உணர்ச்சிவசப் பட்டுப் பேசும் அறிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துவிடாதீர்கள்.

நடைமுறைச்சாத்தியமற்ற கவர்ச்சிகரமான பேச்சுகளும், உணர்ச்சிகரமான அறிக்கைகளும், அளவிற்கு மிஞ்சிய வன்முறைகளும் தான் இன்று எமது மக்களுக்குப் பாரிய அழிவுகளை ஏற்படுத்தி அவலங்களை மட்டும் சந்திக்க வைத்திருக்கிறன.

அனுபவங்கள்தான் சிறந்த வழி காட்டி, சிறந்த ஆசான். எமது கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எமது இலக்கு நோக்கி நகர்வதற்குப் படைப்பு இலக்கியவாதிகளான நீங்களும் நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்று நான் உங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன் - என்றார். (அ-160)

# மாநகர சபையின் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுப் பதவிப்பிரமாணம்

நல்லூர்.ஒக்.01

இலங்கை தமிழரசுக்கட்சியின் சார்பில் யாழ்.மாநகரசபைக்கு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் யாழ்.வீரசிங்கம்மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதலில் தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினரான ந.அமிர்தவாசம், மாநகரசபையின் தேசிய கூட்டமைப்பின் முதன்மை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி மு.றெமிடியஸிற்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். அவரைத்தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் மற்றுமொரு மூத்த உறுப்பினரான- எஸ்.குலநாயகம் முன்னிலையில் அ.மேரியம்மாள், அ.கொர்ணேலியஸ், வ.யேக்கப், கா.ந.கனகரத்தினம், என்.இராகதேவன், அ.பரஞ்சோதி, மரிய கொறற்றி அன்ரன் ஆகியோர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சொலமன் சிறில், என்.சிறிகாந்தா, எம்.இமாம், யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், உட்பட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும், யாழ்.ஆயரின் சார்பில் அருட்திரு சி.ஜி.ஜெயக்குமார் அடிகளாரும் மங்கள விளக்கேற்றி ஆசியுரை வழங்கினர். தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான ஆதரவாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். சத்தியப்பிரமாணத்தைத் தொடர்ந்து தந்தை செல்வா சதுக்கத்தில் உள்ள செல்வாவின் உருவச்சிலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, மாநகரசபை உறுப்பினர் சட்டத்தரணி றெமிடியஸ் உட்பட பலர் மாலை அணிவித்ததுடன் நினைவுச்சமாதியில் மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர். (50-111)

(படங்கள் 6 ஆம் பக்கத்தில்)

# பண்ணைக்கடலில் விழுந்த ஓட்டோவை மீட்டு ஐவரின் உயிரைக் காப்பாற்றினர் இராணுவ வீரர்கள்

யாழ்ப்பாணம், ஒக்.01

பயணிகளுடன் சென்ற முச்சக்கர வண்டி (ஓட்டோ) பண்ணைப் பாலத்துக்குள் வீழ்ந்த வேளை அப்பகுதியில் கடமையாற்றிக் கொண்டிருந்த படையினர் அதனை மீட்டு அதில் பயணம் செய்தவர்களை உயிராபத்தில் இருந்து மீட்டனர்.

குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த 5 பேர் வேலணை சாட்டி தேவாலயத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்தனர். பண்ணைப் பாலத்துக்கு மேலாகச் சென்ற போது ஓட்டோ கல்லுடன் மோதி கட்டுப்பாட்டை இழந்து 20 அடி ஆழத்தில் வீழ்ந்தது.

இவ் விபத்து இடம்பெற்ற வேளை பண்ணைச் சோதனைச்சாவடியில் கடமையாற்றிக் கொண்டிருந்த 11 ஆவது சிங்க முகாமைச் சேர்ந்த இரண்டு இராணுவ வீரர்கள் ஓட்டோவில் பயணம் செய்தவர்களைக் காப்பாற்றியுள்ளனர். லான்ஸ் கோப்ரல் குணவர்த்தன, ரைபின் வீரர் பண்டார ஆகிய இருவருமே விபத்தினால் ஆபத்துக்குள்ளான பயணிகளை மீட்டனர்.

இவ் விபத்தில் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த எம்.தினேஷ்குமார் என்.சுஜிதா, எஸ்.சிசிலியா, ஆர்.வெலன்சியா (சிறுமி), ஆர்.ரொஷான் (குழந்தை) ஆகியோரே காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை இரண்டு படையினரின் பெறுமதிமிக்க 2 கையடக்கத் தொலைபேசிகள் கடலுக்குள் வீழ்ந்துள்ளது எனினும் அதனைப் பொருட்படுத்தாது உடனடியாக விரைந்து விபத்துக்குள்ளானவர்களைக் காப்பாற்றியுள்ளனர். 11 ஆவது சிங்க முகாமின் கட்டளை அதிகாரி உடனடியாக அவ் விடத்துக்கு வருகை தந்து அப்படையினரின் செயலைப் பாராட்டினார். (அ-201)





SM COMPUTER CENTER
கணினி நிறுவன திறப்புவிழா
02.10.2009 வெள்ளிக்கிழமை
அனைத்துப்பிரிவுகளுக்குமான கணினி கற்கை நெறிகள் (All Computer Courses)
இணையத்தேடல் (Net Browsing )
இணைய உரையாடல் (Video conference)
முகம் பார்த்து கதைத்தல்
கணினி விளையாட்டுக்கள் (Games)
Typing, Printing,Scaning,Laminating, Photocopy ,Video mixing, Photo graphic
Kit card
Reload
Fax
Net call
Lacal
IDD calls
பெரியரசடிச்சந்தி
கண்டி வீதி, சாவகச்சேரி
077 6442212
077 6707475

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'சுடர் ஒளி' மீதான அதாவுல்லாவின் குற்றச்சாட்டு ஊடக சுதந்திரத்தின் மீதான பாரிய அச்சுறுத்தல்

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் விசனம்

கொழும்பு, ஒக். 01

'சுடர் ஒளி' பத்திரிகை பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் துணைபோகும் பத்திரிகை என அமைச்சர் அதாவுல்லா குற்றம் சாட்டியிருப்பது ஊடக ஜனநாயகத்திற்கு விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தல் - என்று இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

'சுடர் ஒளி' ஒரு தமிழ்த்தேசிய பத்திரிகை. இலங்கை அரசின் ஊடக சட்ட திட்டங்களுக்கு அமைவாக கொழும்பிலிருந்து சகல சமூகங்களின் பிரச்சினைகளையும் வெளிக்கொண்டு வருகின்றது.

அமைச்சர் அதாவுல்லாவின் செயற்பாடு ஒன்றை விமர்சித்து செய்தி வெளியிட்டமைக்காக 'சுடர் ஒளி' பத்திரிகையை பயங்கரவாதத்துடன் தொடர்புள்ள பத்திரிகை என குற்றம்சுமத்துவது நாட்டின் சட்டதிட்டங்களை அவமதிக்கும் செயலாகவே எமது ஒன்றியம் கருதுகின்றது.

அமைச்சர் என்ற அந்தஸ்தில் இருந்து கொண்டு எதனையும் கூறலாம் என்று நினைப்பது ஜனநாயக நாட்டுக்குரிய பண்பு அல்ல. அதுவும் ஊடகங்கள் தொடர்பாக கண்ணை மூடிக்கொண்டு குற்றம் சுமத்துவது ஊடக அடக்குமுறையின் மற்றுமொரு வடிவமாகும்.

எனவே, 'சுடர் ஒளி' பத்திரிகை தொடர்பில் அமைச்சர் அதாவுல்லா கூறிய கருத்துக்கள் வாபஸ்பெறப்பட வேண்டும். அத்துடன் ஊடகத்துறை அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என எமது ஒன்றியம் பகிரங்கமாக கோரிக்கை விடுகின்றது - என்றுள்ளது. (அ-சி)

# இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரி; அரசின் திட்டத்துக்கு மாணவர்கள் எதிர்ப்பு

கொழும்பு, ஒக். 01

இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரியை அமைக்கும் அரசின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மருத்துவபீட மாணவர்களின் செயற்பாட்டுக்குழு நேற்று கொழும்பில் சுவரொட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு கம்பஹா மாவட்டம் மாலேபேயில் தனியார் மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. அரசு இத்தனியார் மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று சுவரொட்டிப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் வலியுறுத்தினர்.

மேற்படி தனியார் மருத்துவக் கல்லூரிகளால் மருத்துவப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள் 80 லட்சம் ரூபா வரை செலவிட வேண்டி ஏற்படும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# இராணுவ பஸ்—அம்புலன்ஸ் விபத்து ஒருவர் பலி; 12 படையினர் காயம்

கொழும்பு, ஒக்.01

அநுராதபுரம், தம்புள்ள- ஹபரணை பிரதான வீதியில் சிகிரியாவுக்கு அருகில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இராணுவத்தினரின் பஸ்ஸும் அம்புலன்ஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் அம்புலன்ஸ் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் 12 இராணுவத்தினரும் மாணவன் ஒருவனும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் தம்புள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# பாதாள உலக உறுப்பினர்கள் இருவர் மாளிகாவத்தையில் கைது

கொழும்பு, ஒக்.01

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9.15 மணியளவில் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து இரண்டு துப்பாக்கிகளும் இரண்டு மகசின்களும் 24 ரவைகளும் கைப்பற்றப்பட்டன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமல் மெதிவக்க தெரிவித்தார்.

இவர்கள் இருவரும் பல கொள்ளை, கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# திருமலை பொலிஸ் விடுதியில் சப் இன்ஸ்பெக்டர் தற்கொலை

கொழும்பு, ஒக். 01

திருகோணமலைப் பொலிஸ் விடுதிக்குள் 26 வயதுடைய சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைத்துப்பாக்கியினால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார். இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவுக்கும் நேற்று அதிகாலைக்கும் இடைப்பட்ட நேரத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான நிமல் மெதிவக்க தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் , சடலம் நேற்று திருமலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

## அகதி முகாமில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களைத் தடுக்க முயன்றுள்ளனர்.

இதன் காரணமாக சீற்றமடைந்த இடம்பெயர்ந்த மக்கள் காவலரண்கள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது பலர் காயமடைந்துள்ளனர். துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கிய குழந்தையொன்றும் காயமடைந்துள்ளது. தற்போது அந்தக் குழந்தை நடமாட முடியாத நிலையிலுள்ளது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அரசை யு.என். எச்.சி.ஆர். கோருகின்றது.

அரசு இந்தச் சம்பவம் குறித்து உடனடி விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்.

### உறவினர்களுடன் தங்கியிருக்கும் தேவையைப் புலப்படுத்தியுள்ளது

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதையும் அவர்களுக்கு நடமாட்ட சுதந்திரத்தை வழங்குவதையும் துரிதப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச சமூகமும் விடுத்துவரும் வேண்டுகோள்களை சமீபத்தைய சம்பவம் மீண்டும் வலியுறுத்துகின்றது.

இடம்பெயர்ந்த மக்களை அவர்களது உறவினர்களுடன் தங்கியிருக்க அனுமதிக்கும் திட்டத்தை அரசு அமுல்படுத்த வேண்டியதன் தேவையையும் இந்தச் சம்பவம் புலப்படுத்தியுள்ளது.

மக்கள் அதிகளவு வாழும் முகாம்களின் சன நெரிசலைக் குறைப்பதற்கான மேலதிக முயற்சிகள் அவசரமாகத் தேவைப்படுகின்றன. குறிப்பாகப் பருவப்பெயர்ச்சி மழை காலம் நெருங்கும் சூழ்நிலையில் இது அவசியமாகவுள்ளது.

மழை காரணமாக வெள்ளம் ஏற்படுவதுடன், வாழ்நிலை பாதிக்கப்படலாம். இடம்பெயர்ந்தவர்களின் உடல் நலம் மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படலாம்.

ஜூன் மாதம் முதல் அரசின் வேண்டுகோளையேற்று, மழை காலத்தை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஐ.நா. அமைப்புகள் ஈடுபட்டுள்ளன.

எனினும், அங்கு வாழும் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளும்போது, முகாம்கள் மழையை எதிர்கொள்ளக்கூடிய நிலைகளில் இல்லை என யு.என்.எச்.சி.ஆர். அரசின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றது.

### வீடுகளுக்குச் செல்லவிடாது இடைத்தங்கல் முகாம்களில்

முகாமில் உள்ள விடுதலைப் புலிகளை இனம் காண்பதற்கான அரசியல் நடவடிக்கைகள் காரணமாக மக்களுக்கு நடமாட்ட சுதந்திரம் வழங்கப்படவில்லை.

பொதுமக்களை விசாரணை செய்யும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி, விடுவிப்பதை விரைவுபடுத்துமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறோம். செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் மூவாயிரத்து 300 இடம்பெயர்ந்தவர்கள் தமது வீடுகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படாமல் அவர்களுடைய சொந்த இடத்தில் உள்ள புதிய இடைத்தங்கல் முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இது குறித்தும் நாங்கள் கவலையடைந்துள்ளோம்.

அவ்வாறு சொந்த இடங்களுக்கு கொண்டு செல்லப்படுவோருக்கு இடைத் தங்கல் முகாம் அவசியம் எனக் கருதினால் கூட இரண்டு வாரங்களுக்கு மேலாக சிலர் இந்த இடைத் தங்கல் முகாம்களில் வைக்கப்பட்டுள்ளமை கவலையளிக்கிறது.

(அ-சி)

## கோடீஸ்வர வர்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் தெரிவிக்கப்படுகிறது. புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் நாயுடு அமெரிக்க, பிரித்தானிய பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்க தாகும்.

அவரைத் தங்களிடம் கையளிக்க வேண்டுமென்று அமெரிக்க அரசு சிங்கப்பூரிடம் கோரியதாகவும் தெரியவருகிறது.

## வாக்குறுதிகளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியளித்தபடி ஜனவரி முடிவிற்குள் இது நடைபெறவேண்டும்.

பருவப்பெயர்ச்சி மழை காலத்தில் துயரங்கள் அதிகமாக இருக்கும் என்பதால் நிலைமை மிகமிகக்கடுமையாக இருக்கும் என்பதால் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தமிழர்கள் உட்பட சிறுபான்மைச் சமூகங்களை நோக்கி நேசக்கரங்களை நீட்டுவதை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற, சர்வதேச மனித உரிமை மீறல்கள் குறித்து நீதி விசாரணைகளை ஆரம்பிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினேன்.

இந்த மூன்று நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவார்கள் என அவர்கள் உறுதியளித்தனர்.

என்றாலும் நாங்கள் அதனை உன்னிப்பாகக் கண்காணிக்கவேண்டும்-என்றார்.

(அ-சி)

## பிரிட்டன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிபந்தனைகளுக்கு அமைவாக வங்கியில் பணம் வைப்புச் செய்திருக்கும் விண்ணப்பதாரி மாணவர்கள் வங்கி அறிக்கைகள் மூலமாகவோ அல்லது வேறு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணங்கள் மூலமாகவோ அதனை நிரூபிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மேலதிக தகவல்களை பிரிட்டன் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு மாணவர்கள் அறிந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் நேற்றுத் தேடுதல்: தமிழ் இளைஞர்கள் ஐவர் கைது

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை காலை விசேட அதிரடிப்படையினர் நடத்திய தேடுதல் சோதனை நடவடிக்கைகளில் 5 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளவத்தை, கல்கிஸை, தெஹிவளை ஆகிய பிரதேசங்களில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையில் பல தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் தெஹிவளை கல்கிசை பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

## கூட்டமைப்பின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் கூறின்.

தீர்வு யோசனையைத் தயாரிப்பது தொடர்பாக இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டது எனவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கியதாகவே தீர்வு யோசனை அமைந்துள்ளது எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யோசனையின் உள்ளடக்கங்கள் அனைத்தும் விரைவில் ஊடகங்களுக்கு வெளியிடப்படும் என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் மேலும் கூறின. (அ-சி)

## மரண அறிவித்தல்

### செல்லையா பாலராமன்

(இளைப்பாறிய ஆசிரியர்)



அரியாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலி கிழக்கில் வசித்து வந்தவருமாகிய செல்லையா பாலராமன் நேற்று (30.09.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் - செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ருக்மணிதேவியின் அன்புக் கணவரும், மாதவன் (AGRICULTURE MANAGER - ICEI - KANDY), சீராளன் (PEOPLE'S BANK) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"விசால வாசம்" சேர்ச் லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9237739

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
BIOLOGY
DAY BATCH
BATCH - I
MON, WED, THU - 6.45 - 8.00 A.m
BATCH - II
SAT, SUN - 11.30 - 1.00 P.m
MCQ Commen Class - Mon 3.00 - 4.30

கூட்டுறவுப் பரிசோதகர் பரீட்சைக்கான வகுப்புக்கள்
வியாழன், வெள்ளி பி.ப 2.15 தொடக்கம் 5 மணி வரை
சனி 10.00 - 2.00 மணி வரை
வழிகாட்டிநூலை (150/=) வகுப்பிலும் பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
[தொகுப்பு -த.தவசேகர்]
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் போதனா வைத்தியசாலை முன்பாக)

COLLEGE OF CHEMISTRY
PHYSICS
DAY CLASS
ஆரம்பம் 03.10.2009
கந்தர்மடம்
SAT, SUN - 2.30
உரும்பிராய்
TUE, WED - 4.30
N. KAPILAN

## 6 பேர் கொண்ட 5 ஓவர் துடுப்பாட்டப் போட்டி

"இளைஞர்களுக்கான நாளை" விளையாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்படி துடுப்பாட்டப் போட்டி நடத்தப்படவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் அணிகள் தங்களது விண்ணப்பப் படிவங்களை C. சுரேஸ், "பொபி ஸ்ருடியோ", 33 குருசோ வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 01.10.2009 தொடக்கம் 05.10.2009 வரை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

S. கிளிபேட் அன்ரனிப்பிள்ளை
தலைவர் (யாழ். உதைப்பந்தாட்ட லீக்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org